
கல்கி

KALKI
23.5.99
ரூ. 4.50



இதுவரை, மூட்டு வலியிலிருந்து (OSTEOARTHRITIS)
நிவாரணமடைய, இரண்டே வாய்ப்புகள்தான் இருந்தன.





ஆனால், புதிய

GII அன்லோடர் எக்ஸ்பிரஸ் பிரேஸ்*

அதை மாற்றிவிடும்

அறிமுகம்!
ஒரு புதிய சிகிச்சை நிவாரணி!
இதனால்:

- வலியிலிருந்து நிவாரணம்
- எளிய நடமாட்டம்
- சுகமான வாழ்க்கைத் தரம்



- 3 வழி செயல்திறன்
- டைனமிக் போர்ஸ் ஸ்டராப்பும், ஹின்ஜும் இணைந்தாற்போல் வேலை செய்து, பாதிக்கப்பட்ட பகுதியில் வலியை குறைக்கிறது

★ OSTEOARTHRITISவினால், சிறியதாக ஊனமுற்ற கால்களிலும் அணியலாம்

விவரங்களுக்கு, எழுதுங்கள்:

GII Division, Nicholas Piramal India Ltd., Vinod House, Kasturchand Mills, Estate, 228 Senapathi Bapat Marg, Dadar (W), Mumbai - 400 028. Ph: 4312312 - 15. Fax: 4328412/4327531

GII, Division, Nicholas Piramal India Ltd., 55 IV Avenue, Ashok Nagar, Chennai - 600 083. Ph: 4853213, 4891139. Fax: 4853213.



மோட்டார் பைக் அல்லது ஸ்கூட்டர் அல்லது கார் வாங்க நினைப்பவர்கள் அதற்கான முன்பதிவு செய்து விட்டுக் காத்திருக்க நேர்வதுண்டு. ஆனால் அவை விற்பனைக்குத் தயார் நிலையில் இருந்தாலும் அவற்றை வாங்க முடியாமல் தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது டெல்லிவாசிகளுக்கு.

சுற்றுபுறச் சூழல் பாதுகாப்புக்காக என்று பல வருடங்களுக்கு முன் தொடுக்கப்பட்ட ஒரு வழக்கால்தான் இந்த நிலைமை. கார் தயாரிப்பு நிறுவனங்கள் இந்த வழக்கின் தீர்ப்பால் பெரும் அதிர்ச்சி அடைந்துள்ளன.




ஸ்கூட்டர், கார் விற்பனைக்குத் தடை!



எம்.சி.மேத்தா என்பவர் டீசல் கார்களால் தலைநகரில் காற்று பெரிதும் மாசடைவதைக் குறிப்பிட்டு, கார் தயாரிப்பாளர்களின் மீது பொதுநல வழக்கொன்றைத் தொடுத்தார். சமீபத்தில் இந்த வழக்கு குறித்த விவாதம் உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்ற போதுகூட, மாருதி நிறுவன அதிகாரிகள் இதை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. காரணம் மாருதி தயாரிக்கும் மிகப் பெரும்பாலான கார்கள் பெட்ரோலில் இயங்குபவைதான். சொல்லப்போனால் நீதிமன்றத் தீர்ப்பு டாடாவின் டெல்கோ நிறுவனத்தைத்தான் அதிகம் பாதிக்க வாய்ப்பு உண்டு என்று கருதப்பட்டது. காரணம் இவர்கள் தயாரிப்பில் முக்கிய பங்கு வகிப்பவை டீசல் கார்கள்!

ஆனால் டீசல் கார் நிறுவனங்களின் வழக்கறிஞர்கள், தலைநகர் அசுத்தக் காற்றால் மாசடைவதைப் பற்றிய இந்த வழக்கில் பெட்ரோல் கார்களையும் கட்டாயம் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று வாதிட்டார்கள். டெல்லியில் ஓடும் 93 சதவிகித வாகனங்கள் பெட்ரோலில் இயங்குபவை என்பது ஒரு காரணம். டீசல் வாகனங்களிலிருந்து வெளிவரும் நைட்ரஜன் ஆக்ஸைடுகளைப் போலவே, பெட்ரோல் வாகனங்களிலிருந்து வெளிப்படும் பென்ஸின் கலவைகளும் காற்றை அசுத்தப்

கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com ஈ மெயில் : kalkiweekly@vsnl.com



குழந்தைகள் அழ ஒரு விழா!

குழந்தைகள் பயந்து அழுதால், அவை ஆரோக்கியமாக வளரும் என்று நினைக்கிறார்கள் ஜப்பானியர்கள். அதனால் விழா எடுத்து குழந்தைகளை அழ வைக்கிறார்கள். அண்மையில் டோக்கியோவின் கோவில் ஒன்றில் ஒரு வயதுக்கும் குறைந்த எழுபது குழந்தைகளை மாமிச மலைகள் போன்ற சுமோ மல்யுத்த வீரர்கள் பயமுறுத்தி அழவைத்தனர். படத்தில்: அழும் பெண் குழந்தையும் அழவிட்டு வேடிக்கை பார்க்கும் சுமோ மலையும்.

— சி.எம்.

அனுப்பி விட்டீர்களா?

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி-1999-க்கான சிறுகதைகளை அனுப்பத் தொடங்கி விட்டீர்களா!

முடிவு தேதி: ஜூன் 15

முழு விவரங்களுக்கு சென்ற வார கல்கி இதழையோ அல்லது அடுத்த வார கல்கி இதழையோ பாருங்கள்.

—ஆர்

படுத்தவே செய்கின்றன என்பது இன்னொரு காரணம்.

"மே ஒன்றாம் தேதியிலிருந்து டெல்லி பகுதியில் விற்கப்படும் வாகனங்கள் (அது டீஸலோ பெட்ரோலோ) யூரோ-1" (இது எஞ்ஜினிலிருந்து வெளியாகும் புகையில் கலந்திருக்கும் மாசுகளின் அளவைக் குறிப்பது) தரக் கட்டுப்பாடு கொண்டதாக இருக்க வேண்டும். இப்படிப்பட்ட வண்டிகள் கூட இந்தப் பகுதியில் மாதம் ஒன்றுக்கு அதிக பட்சம் 1500தான் விற்கலாம்" என்று தீர்ப்பளிக்கப்பட்டது! டெல்லி நகரின் காற்றைப் பாதுகாக்கும் விதத்தில் வழங்கப்பட்ட இந்தத் தீர்ப்பு 'மாருதி'யைப் பெரிதும் பாதித்திருக்கிறது. டெல்லிப் பகுதியில் மாதம் சுமார் ஏழாயிரம் கார்களை இந்த நிறுவனம் விற்று வந்திருக்கிறது என்பதோடு இப்போதைக்கு 'யூரோ-1' தரக் கட்டுப்பாடு கொண்ட என்ஜின்களை அது தனது தயாரிப்புகளில் பொருத்தவில்லை.

போதக்குறைக்கு வரும் ஏப்ரல் மாதத்திற்குள் 'யூரோ - 2' தரக் கட்டுப்பாடு விதிகளுக்கு ஏற்ற மாதிரி கார் எஞ்ஜின்கள் வடிவமைக்கப்பட்டே ஆக வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. இதெல்லாம் முடியாத காரியம் அல்ல. (ஹுண்டாயின் சான்ட்ரோ கார்கள் 'யூரோ-2' தர நிர்ணயத்தின்படிதான் இந்தியாவிலும் தயாரிக்கப்படுகின்றன) ஆனால் இதற்காக நிறையச் செலவு செய்ய வேண்டியிருக்கும். குறைவான விலையில் கார் என்பதைத் தன் தூண்டிலாக வைத்திருப்பதால்தான் மாருதிக்குத் திணறல்.

வேடிக்கை என்னவென்றால் தனது தீர்ப்பில் 'வாகனங்கள்' என்று உச்சநீதிமன்றம் பொதுவாகக் குறிப்பிட்டுள்ளதால், ஸ்கூட்டர், மோட்டார் பைக் போன்ற இரு சக்கர வாகன விற்பனைக்குக் கூட தடை விதித்திருக்கிறது டெல்லி போக்குவரத்து ஆணையம்!

எனவே, இப்போது போர்க்கால நடவடிக்கையில் ஈடுபடவேண்டியது வாகனத் தயாரிப்பு நிறுவனங்கள் மட்டுமல்ல; பெட்ரோல் சுத்திகரிப்பு நிறுவனங்களும்தான். தரமான எரிபொருளும் இருந்தால்தான் வெளியேறும் நச்சுப்புகை அளவைக் கட்டுக்குள் வைக்க முடியும். இந்த வகையில் பெட்ரோல் நிறுவனங்கள் சுமார் 15,000 கோடி ரூபாய் முதலீடு செய்ய வேண்டியிருக்குமாம்!

இதெல்லாம் சரி, "எமிஷன் சான்றிதழ்" கட்டாயம் என்று சென்னையில் அறிவித்து விட்டு இதன் கட்டாயத்தன்மையை தள்ளிப் போட்டுக் கொண்டே வந்து நீர்த்துப் போகச் செய்து விட்டதே நமது தமிழக அரசு!

டெல்லியை உதாரணம் காட்டி இங்குள்ள யாராவது பொதுநல வழக்குத் தொடர்ந்தால் நிறையப் பேர் தடுமாறிப் போவார்கள்! அதற்கு ஒரே வழி இப்போதே விழித்துக் கொள்வதுதான்!

— ஜி.எஸ்.எஸ்.



இட்லியும் இட்டாலியும்!

முதுபெரும் மார்க்ஸிஸ்ட், மேற்கு வங்காள 'நிரந்தர' முதலமைச்சர் ஜோதிபாசு மீண்டும் பிரதமர் பதவிக்குத் தயாராகிறார் என்றொரு தகவல் தலைநகரில் வலம் வந்து கொண்டிருக்கிறது.

ஒருவேளை தே.பி.யில் (தேர்தலுக்குப் பின்) மூன்றாம் அணியின் அவசியம் வந்து விட்டால் பிரதமர் பதவிக்குத் தம் பெயர் மீண்டும் அடிபடும். எனவே தே.மு.விலேயே தாம் அதற்குத் தயார் என்று சூசகமாக அறிவித்து விட வேண்டுமென்பது அவரின் எண்ணம் என்று குறிப்பிட்டார் ஒரு காம்ரேட்.

பாராஸத் அல்லது கல்கத்தா பாராளுமன்றத் தொகுதியிலிருந்து பாசு போட்டியிடுவார் என்றும் கூறப்படுகிறது. அவர் எங்கு நின்றாலும் வெற்றி பெறுவார் என்பது வேறு விஷயம்.

ஆனால் இந்தத் திடீர் அரசியல் திருப்பத்தின் பின்னணியில் தெரிவது இன்றைக்கு அனைவருமே, தே.மு.விலேயே போடும் பல்வேறு விதமான அரசியல் கணக்குகள். அதாவது இன்று எல்லாருமே எதிர்பார்ப்பது தே.பி.யில் ஒரு கட்சிக்கும் அல்லது கூட்டணிக்கும் பெரும்பான்மையில்லாத - மீண்டும் ஒரு தொங்கும் பாராளுமன்றம்.

பி.ஜே.பி. அணியினருக்கு சோனியா கூட்டணியை விட சில இடங்கள் அதிகமாகக் கிடைக்கலாம். அப்படியும் அவர்கள் பெரும்பான்மையைப் பெற முடியாது. அதே போல் சோனியாவும் திண்டாடும் நிலையில் அவர் கட்சி பி.ஜே.பி ஆட்சி அமைப்பதைத் தடுத்து நிறுத்த தேசிய முன்னணி, ஐக்கியப் பேரணி அல்லது மூன்றாம் நாலாம் நாற்பதாம் முன்னணி என்ற ஒன்றை ஆதரித்துத் தீர வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப் பட்டு விடும்.

அந்நிலையில் தலைமைப் பொறுப்பிற்கு, அதாவது பிரதமர் பதவிக்கு, முலாயம், கௌடாவிலிருந்து ஜெயலலிதா, பூலன்தேவி,



தாராசிங் என்று யார் வேண்டுமானாலும் "தேசத்திற்குத் தன் கடமையைச் செய்ய" முன் வருவார்கள். பாசு பெயர் முதலிலிருந்தே அடிபட்டு விட்டால் அனைவருமே

(தொடர்ச்சி 26-ம் பக்கம்)


சாதாரண ரிக்ஷா ஓட்டுநரோ, கூலி வேலை செய்கிறவரோ குடிசையில் இருப்பது ஒரு விஷயமே அல்ல. ஆனால் மத்திய அரசு அலுவலகமான கன்ட்ரோலர் அஃப் இம்போர்ட்ஸ் அன்ட் எக்ஸ்போர்ட்ஸில் பணி புரியும் ஊழியர் இருக்கிறார் என்றால் நம்ப முடிகிறதா?

அவர் பெயர்: கே.கே. ஏகாம்பரம்.

"நான் எல்லாரையும் போல குவார்ட்டர்ஸ் பெற்று அதில் குடியிருக்கலாம். ஆனால் என் சம்பளத்திலிருந்து ஆயிரம் ரூபாயை வீட்டு வாடகைக்கு என்று பிடித்துக் கொள்ளுவார்கள். நான் மாதா மாதம் என் சம்பளத் தொகையிலிருந்து ஆயிரம் ரூபாயை சமூக சேவைக்கான செலவுக்கு என்று ஒதுக்கி வைத்து விடுவதால், அதை நிறுத்த வேண்டி வந்து விடும். அது முடியாது என்பதால் குடிசையிலேயே குடியிருப்பது என்று தீர்மானித்தேன்!" என்கிறார் ஏகாம்பரம்.

அசோக் நகரில் 57ஆவது தெருவுக்கும் 60 ஆவது தெருவுக்கும் இடையே இருக்கும் நல்லாங்குப்பம் குடிசைப் பகுதியில்தான் முன்பு குடியிருந்தார். இப்போது அங்கே குடிசைகள் அகற்றப்பட்டுப் புதிதாக அடுக்கு மாடி வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, இட்டத்தட்ட ஒரு வருடம் ஆகி விட்டது. அங்கே ஏகாம்பரத்துக்கு ஒரு ஃப்ளாட்டும்

குவார்ட்டர்ஸ் இருந்தும் குடிசையில் வாழ்கிறார்!



ஒதுக்கப்பட்டு விட்டது. ஆனால் அதை அப்படியே பூட்டி வைத்திருக்கிறார் ஏகாம்பரம்.

மேற்படி நல்லாங்குப்பத்தில் அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டும்போது, இப்போது அவர் குடும்பத்துடன் வசித்து வரும் கே.கே. நகர் – அம்பேத்கார் நகர் காலனி குடிசைப் பகுதிக்கு இடம் பெயர்ந்தார் ஏகாம்பரம். வருடம்: 1996.

"இந்தக் குடிசைப் பகுதியில் வசிக்கிற மக்களுக்கு சரியான வசதிகள் செய்து முடித்து, அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டித் தரும் வரை, இங்கிருந்து போவதில்லை என்று முடிவு எடுத்து விட்டேன்!" என்கிறார்.

முக்கியமாக சுகாதார வசதி, தெரு விளக்குகள், குடி தண்ணீர் – இவை அடிப்படைத் தேவைகள் என்கிறார் இவர். (நாம் போயிருந்தபோது, காலனிக்குள் மெட்ரோ வாட்டர் லாரி ஒன்று குடிசைகளுக்குக் குடங்களிலும், 'டாங்க்'கிலும் நீர் வழங்கிக் கொண்டிருந்தது. காரணம்: ஏகாம்பரம்)

குடிசையைப் பார்த்தால் –

மின் விளக்கு இல்லை. மின் விசிறி இல்லை. டீவி இல்லை. ரேடியோ கூடக் கிடையாது!

"என் குழந்தைகள் டீவி பார்க்க விரும்பினால் அக்கம் பக்கத்தில் உள்ள வீடுகளுக்குத்தான் போய் வருகிறார்கள். 'அப்பா, ஒரு ரேடியோவாவது வாங்கி வைச்சுக்கலாமே' என்று அவர்கள் அடிக்கடி சொல்லுவதுண்டு. நான், 'எந்த வசதியுமே இல்லாமல் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வசித்து வருகின்றன. நாம் மட்டும் ரேடியோ, டீவி எல்லாம் வச்சுக்கலாமா?' என்று கேட்டு அவர்களைச் சமாதானப் படுத்தி விடுவேன்" என்கிறார் ஏகாம்பரம்.

சில பெட்டிகளில் உடைகள். சில பெட்டிகளில், பைகளுக்குள் பத்திரமாக வைக்கப்பட்டிருக்கும் ஃபைல்கள். கொடி மாதிரி போட்டு அதில் தொங்கும் பாண்ட், சட்டைகள்.



• குடும்பத்தோடு ஏகாம்பரம்

ஒரே ஒரு ஓலைத் தடுப்பு. தடுப்பைத் தாண்டிச் சமையல் பாத்திரங்கள். தண்ணீர் வைக்க பிளாஸ்டிக் பக்கெட்டுகள், குடங்கள். மரப் பெட்டிகளிலிருந்து பிரித்தெடுத்த, மரச் சட்டங்களால் உருவான கதவு. ஓர் இரும்பு அலமாரிகூடக் கிடையாது!

ஏகாம்பரத்துக்கு மூன்று பெண் குழந்தைகள். பத்தாம் வகுப்புப் படிக்கிறார், மூத்த பெண் உதயகுமாரி. காந்திமதி ஏழாம் வகுப்பு. ரேவதி நான்காம் வகுப்பு. மனைவி லலிதா முணுமுணுப்பதுகூட இல்லை. "மனைவியோட ஒத்துழைப்பு எனக்குப் பூரணமா இருக்கு!" என்கிறார் ஏகாம்பரம். குழந்தைகள் மூவரும் விடுமுறையில் பெங்களூர், மைசூர் போயிருக்கிறார்கள்.

இரவு வரும்போது தினசரி 11 மணி, 12 மணி ஆகி விடுகிறது. ஒவ்வொரு குடிசைப் பகுதியிலிருந்தும் ஏதாவது சிக்கல் அல்லது பிரச்னை என்றால், அங்கே உடனே போய் அதைத் தீர்த்து வைத்துவிட்டு வருவதுதான் காரணம்.

"அவரு தெனம் உசிரோட வீடு திரும்பணுமேன்னு தான் வேண்டிக்குவேன். அவரு இல்லேன்னா அப்பறம் நான் இந்தக் கொழந்தைங்களை எப்படி வச்சுக் காப்பாத்துவேன்?" என்று மட்டும் கேட்கிறார் லலிதா.



• குடியிருக்கும் குடிசைக்கு முன்னால்...

கட்சிகள் எதையும் சார்ந்து இருப்ப தில்லை ஏகாம்பரம். "கடவுள் நம்மை நல்லது செய்யத்தான் படைச்சு இங்க அனுப்பியிருக் கான். நம்மால முடிஞ்ச அளவுக்கு நல்லதே செய்வோம்!" என்கிறார்.

அதனால் கெட்டதைச் சுட்டிக் காட்டி நியாயம் கேட்கிற போதும், அநியாயங்கள் நடந்தால் அடையாளம் காட்டும்போதும், எதிரிகள் உருவாவது சகஜம்தானே?

"அப்படி பயமுறுத்தல் வந்தால் என்ன செய்வீங்க?"

"நெறைய வருதுங்க. வெட்டிப் போட்டு வேன். அழிச்சிருவேன்னு எல்லாம் மிரட் டல் நெறையவே வரும். ஆனா நான் பயப் படறதில்லே. என்கூட இருக்கற ஜனங் களோட நல்லதுக்காகத்தான் செய்யறேன். அதுக்கு எதிர்ப்பு இருந்து, உயிர் போகணும்னு இருந்தா, போகட்டும்னு இருந் துடுவேன். ஆனா இதுவரை யாரும் என்னைத் தொட்டதில்லே!"

தம்முடைய நண்பர்கள் இருபத்தைந்து பேரைச் சேர்த்துக் கொண்டு ஆரம்பத்தில் ஆளுக்கு ஐந்து ரூபாய் போட்டு, அந்த 125 ரூபாயில் துடைப்பம் வாங்கிக் காலனியைச் சுத்தப் படுத்தியதும் உண்டாம். தபால் செல வுக்கும், மீட்டிங் போட்டுப் பேசும்போது டீக்கான செலவுகளுக்கும் தங்கள் சொந்தப் பணத்தைத்தான் இவர்கள் கொடுத்திருக் கிறார்கள். கழிவு நீர்க் கால்வாய்களைத் தூர் வாரிச் சுத்தப்படுத்தியிருக்கிறார்கள். டாய் லெட்டுகளைக்கூடக் கழுவியிருக்கிறார்கள்!

பக்கத்தில் உள்ள பள்ளிக்கூடத்தை, குடிசைப்பகுதி மக்களின் மேம்பாட்டுக்காக மீட்டிங் போடும்போது இலவசமாகக் கேட் டுப் பெற்றுக் கொள்கிறார் ஏகாம்பரம். படிப்பு வாசனையே இல்லாதவர்களுக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுக்கிறார். படிக் கிற பையன்கள் மீட்டிங்குக்கு வந்தால் அவர் களை, லைப்ரரிக்குள் போய் உட்கார்ந்து கவனமாகப் படிக்கச் சொல்லுகிறார்.

சிறு தொழில் ஆரம்பிக்க, சைக்கிள் ரிக்ஷா வாங்க என்று வங்கிகளில் இருந்து கடன்களை வாங்கிக் கொடுத்திருக்கிறார் ஏகாம்பரம்.

"முன்பு விஜிலன்ஸ் டிபார்ட்மெண்டில் வேலை பார்த்தபோது, ஒரு திருடனை விரட் டிப் பிடித்து, அஸிஸ்டெண்ட் கமி ஷனர்கிட்ட இருந்து சர்ட்டிபிகேட்கூட வாங்கி இருக்கேன்!"

ஏகாம்பரத்துக்கு அறவே பிடிக்காத விஷயம்: ரௌடியிசம். எனவே தம் உயிரைப் பற்றிக் கவலையே படாமல் அதை எதிர்த்து வருகிறார். பணம் கொடுத்து விலைக்கு வாங்குகிற சமாசாரம் இவரிடம் எடுபடாது!

முதியோர் பென்ஷன், விதவைப் பெண்கள்/கைவிடப்பட்ட அபலைப் பெண்கள் உதவி எல்லாவற்றையும் எடுத்துப் போட்டுக் கொண்டு செய்கிறார்.

ஏகாம்பரத்தின் சொந்த ஊர் கீழ் மருவத்தூர். தகப்பனார் காங்கிரஸ்காரர். தேசிய இயக்கத்தில் ஈடுபட்டுச் சிறை சென்ற தியாகி எம். குப்புசாமி. (தியாகி பென் ஷனைக்கூட வாங்கிக் கொள்ள மறுத்து விட்டாராம்!)

"நான் ஆரம்பத்துல கொஞ்சம் அறுந்த வாலுதான். ஆனா நான் இப்ப இருக்கறதைப் பார்த்துட்டு, 'நீ சமூக சேவை செஞ்சு, எந்தப் பிரதிபலனும் பாக்காம எல்லாருக்கும் உதவறதைப் பார்த்து எனக்குச் சந்தோசமாக இருக்கு!' என்று சாகிறபோது சொன்னார் அப்பா...."

அ.இ.அ.தி.மு.க. எம்.எல்.ஏ ஜெயக் குமார் தம்முடன் நிறைய நேரம் செல விட்டுப் பலவிதங்களிலும் உதவியதை நன்றியுடன் சொல்லுகிறார் ஏகாம்பரம். அதேபோல, தற்போதைய சட்டமன்ற உறுப்பினர் செல்லக்குமாரும் தம்மீது அக்கறை காட்டி வருவதாகச் சொல் கிறார்.

குடிசை மாற்று வாரியத் தலைவர் சுவரண்சிங்கை வாயாரப் புகழ்கிறார்.


தமது அலுவலகத்திலேயே தம்மை எல்லோருமே தமது அதிகாரி மனோகரன் உட்பட - 'சோஷியல் ஒர்க்கர்' என்றே தம் மைக் கூப்பிடுகிறார்கள் என்பதை கொஞ்சம் வெட்கத்துடன் சொல்கிறார்.

இவர் வேலையைப் பார்த்துவிட்டுச் சில நண்பர்கள் மாதாந்திர உதவியாக 200 ரூபாய், 100 ரூபாய் தருகிறார்களாம். ஆனா நான் யாரையும் போய்க் கேட் கிறதில்லே!"

"எப்பத்தில் இருந்து இந்தக் குடிசை வாழ்க்கை?" என்று கேட்டபோது, "கல்யாணம் 1980ல ஆச்சுங்க. அப்பத்துல இருந்தே குடிசை வாழ்க்கைதான்!" என் கிறார் கொஞ்சம்கூட அலட்டிக் கொள் ளாமல்.

— சித்தார்த்

வண்ணப்படம்: **வெங்கடேஷ்**



ரூ. 420 விலை மதிப்புள்ள இங்கிலீஷ் கோர்ஸ் இலவசம் கோடை விடுமுறை வாய்ப்பு...

இந்த கோர்ஸ் மற்றும் அசல் விலையின் விவரங்கள்


டிவிஷன்-1	டிவிஷன்-2	டிவிஷன்-3	இவை அனைத்தும்	ஃப்ரீ !
ரூ. 110	ரூ. 140	ரூ. 170		

டிவிஷன்-1 : (பேசிக் இங்கிலீஷ் கோர்ஸ்) A-B-C-D யில் இருந்து ஆங்கிலம் கற்பிக்கப்படும். ஆங்கிலம் சிறிதும் தெரியாதவர்களும் இந்த கோர்ஸ் மூலம் தொடக்க நிலை ஆங்கிலம் கற்க முடியும். அனைவருக்கும் சுலபமாக புரியும் விதத்தில் ஆசிரியர் உங்கள் முன்பு இருந்து கற்றுத் தரும்படியான உணர்வை உங்களுக்கு ஏற்படுத்தும். இந்த கோர்ஸின் ஃபீஸ் ரூ. 110/- மட்டுமே.

டிவிஷன்-2 : (இங்கிலீஷ் கிராமர் கோர்ஸ்) : இலக்கணம் இல்லாத மொழி, உப்பு இல்லாத உணவைப் போன்றது. அதுபோல இலக்கணம் இல்லாத மொழி, தவறுகள் இல்லாதவாறு சுலபமான முறைகளில் நீங்களே மற்றொருவருக்கு கற்றுத் தரும் வண்ணம் மிக அழகாக கற்பிக்கப்படும். இந்த கோர்சின் ஃபீஸ் ரூ. 140/- மட்டும்.

டிவிஷன்-3 : (இங்கிலீஷ் ரைட்டிங் மற்றும் ஸ்பீக்கிங் கோர்ஸ்) : ஆங்கிலம் சுலபமாக எழுதவும் மற்றும் படிக்கவும் கற்றுத்தரும் ஈசி இங்கிலிஷ் கோர்ஸ். தடுமாற்றமின்றி பேசவும் மற்றும் தவறுகள் இன்றி உங்கள் எண்ணங்களை ஆங்கிலத்தில் வெளிப்படுத்தவும் மிகவும் நவீனமான கோர்ஸ். இந்த கோர்ஸ் மூலமாக நீங்கள் ஆங்கிலத்தில் சுலபமாக எழுதவும் படிக்கவும் முடியும். இந்த கோர்சின் ஃபீஸ் ரூ. 170/-.

லேட்டஸ்ட் டெக்னாலஜி உதவியுடன் தயாரிக்கப்பட்ட கோர்ஸ்



கோர்சை இலவசமாக பெற நியமனமான நிபந்தனைகள்

• இந்த கோர்சை இலவசமாக பெற ஒரு கூப்பனை கட்டாயமாக அனுப்ப வேண்டும். • ஜெராக்ஸ் மற்றும் கார்டுகளின் மீது எழுதி அனுப்புபவர்களுக்கு கோர்சை அனுப்ப முடியாது. • உங்களுடைய நண்பருக்கு இந்த கோர்ஸ் தேவைப்பட்டால், மற்றொரு பத்திரிகையிலுள்ள கூப்பனை எழுதி அனுப்ப வேண்டும். • இந்த கோர்ஸ் முழுவதும் ஃப்ரீ ! ஆனால் இதை அனுப்புவதற்கு ஆகும் செலவுகளை நீங்களே ஏற்க்க வேண்டும். • கவரின் மீது தற்பொழுதைய விலையின் படி உள்ள 3 ரூ கொண்ட ஸ்டாம்ப்பை ஒட்ட வேண்டும். • கோடை விடுமுறை நாட்கள் முடிந்து போவதற்குள் இக்கூப்பனை அனுப்ப வேண்டும். • கோடை விடுமுறை நேரத்தில், விளம்பரத்திற்காக, நாங்கள் வழங்கும் இந்த வாய்ப்புக்கு தடை ஏதும் நேரிட்டால் அதன் முழு பொறுப்பும் எங்களுடையது ! இதனைக் குறித்து கடித போக்குவரத்திற்கு அவகாசம் கிடையாது. • எக்காரணத்தைக் கொண்டாவது இக்கோர்ஸை உங்களுக்கு அனுப்பித்தர முடியாவிட்டால் எந்த வகையிலும் நாங்கள் அதற்கு பொறுப்பாளிகள் அல்ல. • நாள்தோறும் ஆயிரக்கணக்கானவர்களுக்கு இக்கோர்சை அனுப்ப வேண்டி இருக்கும். அதனால் குறைந்தது மூன்று வாரங்கள் கால அவகாசம் எங்களுக்கு தேவையாக இருக்கும்.

இக்கூப்பனை உடனே நிரப்பி அனுப்பவும்

STUDENT'S ENGLISH INSTITUTE (Tamil Division)

P.B. No. 8569, 15/1, Parthasarathipuram Extn., T. Nagar, Chennai - 600 017. 337

எனக்கு ரூ. 420/– விலைமதிப்புள்ள டிவிஷன் 1,2,3, மொத்த பாடங்களை இலவசமாக அனுப்பவும் தபால் செலவுகள் + பேக்கேஜ் ஃபார்வார்டிங் செலவுகள் + அட்வர்டைசிங் மெயின்டெனென்ஸ் செலவுகளுக்காக 100 ரூபாயை தபால்காரரிடம் செலுத்தி பெற்றுக் கொள்கிறேன் என உறுதி கூறுகிறேன். இதுபோன்ற அபூர்வமான வாய்ப்பை அளித்துக் கொண்டிருக்கும் உங்களுக்கு எங்களின் நன்றி.

(முக்கிய அறிவிப்பு : கம்ப்யூட்டரில் பத்திரப்படுத்துவதற்காக உங்கள் விலாசத்தை தெளிவாக, புரியும் விதத்தில் ஆங்கிலத்தில் எழுதவும்.)

என் பெயர் ______________________

என் முகவரி ______________________

______________________ பின்கோடு [| | | | | |]



இப்படியிருக்கலாம்

பிரதமர் வாஜ்பாய் ஜனாதிபதியைச் சந்திக்கிறார்.

ஜனாதிபதி : இனிமே என்னைக் கேட்டுத்தான் நீங்க எந்த முடிவும் எடுக்கணும்னு எல்லாரும் சொல்லிட்டாங்க. நல்லா கேட்டுக்கிட்டீங்க இல்லே?

வாஜ்பாய் : சரி, நான் ஜிப்பா மேல வெய்ஸ்ட் கோட் போடலாமா, இல்ல துண்டு எதுனா போர்த்திக்கணுமா?

ஜனாதிபதி : இதெல்லாம் நீங்க கேக்க வேண்டிய அவசியமே இல்லே. காங்கிரஸ் கொடுத்த பட்டியல்லே இதெல்லாம் இல்லே. நீங்க அரசியல் முடிவு எதுவும் எடுக்கக் கூடாது. எதுலயும் கையெழுத்துப் போடக் கூடாது.

வாஜ்பாய் : அப்புறம் நான் பிரதமரா இருந்து என்ன பிரயோஜனம்? எலக்ஷன் கமிஷ்னர் ஜி.வி.ஜி. கிருஷ்ணமூர்த்தி, நான் வழக்கமா செய்யறதை எல்லாம் செய்யலாம்னு சொன்னாரே?

ஜனாதிபதி : நான் ஜனாதிபதியா இல்லே கிருஷ்ணமூர்த்தியா? வழக்கமா செய்யறதுன்னா, காலையிலே எழுந்து பல் விளக்கறது, குளிக்கிறது, பிரேக்ஃபாஸ்ட் சாப்பிடறதுன்னு அவர் சொல்லியிருப்பார்.

வாஜ்பாய் : நான் என்னென்ன செய்யலாம், என்னென்ன செய்யக் கூடாதுன்னு ஒரு லிஸ்ட் கொடுத்திட்டீங்கன்னா, அதை சுவர்ல ஒட்டி வச்சு தினமும் அதைப் படிச்சுப் பார்த்துப்பேன்.

ஜனாதிபதி : முக்கியமா நீங்க டீவில இனிமே பேசக் கூடாது. காங்கிரஸ் ரொம்பக் கடுமையாச் சொல்லியிருக்காங்க. அப்படியே நீங்க டீவில தலைகாட்டினாக் கூட, 'என் பேரு அடல் பிஹாரி வாஜ்பாய். இன்னும் கொஞ்சநாள்தான் நான் பிரதமரா இருப்பேன்'கறதோட நிறுத்திக்கணும்.

வாஜ்பாய் : இதைச் சொல்றதுக்குத்தான் நான் பிரதமரா இருக்கேனா? வேண்டாங்க, நான் டீவில தலை காட்டாமயே இருக்கேன்.

ஜனாதிபதி : ரொம்ப சந்தோஷம். சோனியா வில் பி ஹாப்பி. சுர்ஜித் வில் பி ஹாப்பி. முக்கியமா யாரையும் டிரான்ஸ்ஃபர் கின்ஸ்ஃபர் பண்ணிடாதீங்க.

வாஜ்பாய் : அது முடியவே முடியாதுங்க. அதிகாரிகளையும் ஆளுநர்களையும் அப்பப்ப டிரான்ஸ்ஃபர் பண்ணிட்டே இருப்

பேன். அப்பத்தான் கவர்ன்மென்ட்னு ஒண்ணு இருக்குன்னு எல்லாருக்கும் தெரியும்.

ஜனாதிபதி : ஐயோ, கடவுளே! அதுல தானே இருக்கு சிக்கல். சுர்ஜித் என்ன சொல்லுவார்! சோனியா என்ன நினைச்சுப் பாங்க! எதிர்க்கட்சிகள் கூட்டமா வந்துடு வாங்களே. நான் நிம்மதியா இருக்கறதா வேணாமா?

(வாஜ்பாய் வேகமாக வெளியேறு கிறார்.)

ஜெயலலிதாவைச் சந்திக்க வருகிறார் சுப்ரமணிய சுவாமி.

இவர்கள் சந்திப்புகள்!



சுவாமி : நாற்பது ஸீட்டுலயும் நாம்பதான் ஜெயிக்கப் போறோம். நீங்க கவலையே படா தீங்க. எனக்கு இன்டெலிஜன்ஸ் நியூஸ் கிடைச்சிருக்கு.

ஜெ. : எனக்கும் அதுல சந்தேகமே இல்லே. ஃபார்வர்டு பிளாக் நம்பகூடச் சேர்ந்தபோதே நான் நினைச்சிட்டேன். தேர்தல் கூட்டங்கள்ள கூட, நேதாஜியோட மரணத்துல அத்வானிக்குத் தொடர்பு உண்டுன்னு பேசப்போறேன்னு சொல்லிட்டேன் அவங்க கிட்ட. தேர்தல் கூட்டம்னா கொஞ்ச மாவது சென்ஸேஷனலா இருக்க வேணாம்?

சுவாமி : கரெக்ட்ங்க. தேர்தல் கூட்டத் துல பேசற போதெல்லாம் சென்ஸ் இருக்கா இல்லையான்னு கூடப் பார்க்க வேணாம்.

ஜெ. : நான்சென்ஸ்! நான் அப்படித்தான் பேசறேன்னு சொல்ல வரீங்களா?

சுவாமி : ஐயையோ, அப்படி எல்லாம் சொல்லுவனா? நீங்க எது பேசினாலும் அது சென்ஸிபிளாத்தான் இருக்கும். சென்சேஷ னலாவும் இருக்கும்!

ஜெ. : கரெக்ட். உங்களுக்குப் போன தடவை மாதிரியே மதுரைதான்.

சுவாமி : ஐயோ, வேணாங்க. மதுரையை சிங்கப்பூர் ஆக்கிடுவேன்னு எல்லாம் வாக்குறுதி கொடுத்திட்டேன் அப்ப. இப்ப மறுபடி மதுரைன்னா, தோலை உரிச்சிடுவாங்க ஜனங்க!

ஜெ. : அப்ப டெல்லில நில்லுங்க.

எனக்கு ஒரு ஸீட் மிச்சமாகும்.

சுவாமி : நீங்க இப்படி ஒரேயடியா கழட்டி உட்டுடக் கூடாது. என்னைக் காப் பாத்தணும். நான் டீபார்ட்டி எல்லாம் கொடுக்கலியா?

ஜெ. : டீ பார்ட்டி! ஹஹ்ஹஹ்ஹா! அதெல்லாம் நான் எப்பவோ மறந்தாச்சு. நீங்க ஆகஸ்ட் எண்டுல என்னை வந்து பாருங்க. மீதி ஸீட் எதானா இருந்தா உங்க ளுக்கு அலாட் பண்ணிடறேன்.

(சு. சுவாமி வெளியேறுகிறார்.)

ஹர்கிஷன் சிங் சுர்ஜித்தைச் சந்திக் கிறார் ஜோதி பாசு.

பாசு : நாம எந்தக் கூட்டணியில இருக் கோம்?

சுர்ஜித் : தேசிய அளவுல வீ சப்போர்ட் காங்கிரஸ். மாநில அளவுல, கொள்கைகளை விட்டுக் கொடுத்தாவது கூட்டணி எதாவது ஒண்ணுல இருப்போம். இதுதான் இப்போ தைக்கி நம்ம கொள்கை.

பாசு : *(தலையைப் பிய்த்துக் கொண்டு)* ரொம்பக் குழப்பமா இருக்கே?

சுர்ஜித் : அப்படித்தான் இருக்கணும்! சிம்பிளா இருந்திட்டா அப்புறம் என்ன பாலிடிக்ஸ்? மூப்பனாரைப் பாருங்க. முடியப் பிச்சுக்கறாரா! அமைதியா இல்லே?

பாசு : சங்கரய்யா கேட்டா என்ன சொல்லப் போறீங்க? அவங்க அ.தி.மு.க. கூடக் கூட்டு வச்சுக்கலாமா?

சுர்ஜித் : அஃப் கோர்ஸ்! காங்கிரசே அ.தி.மு.க. கூட அலையன்ஸ் வச்சுக்கறப்போ நம்ப பாலிஸி ரொம்ப சிம்பிளாயிட்டுது. 'எங்க கூட்டணி காங்கிரசோடதான்'னு ஈஸி யாச் சொல்லிடலாம்.

பாசு : ஆ! தட்'ஸ் குட். பட் கேரளாவுல நம்ப கொள்கைப்படி காங்கிரசை எதிர்க்க றோம். ரைட்?

சுர்ஜித் : இதுல என்ன சந்தேகம்? உ.பி.யில முலாயம்தான் ஸ்ட்ராங்குன்னு தெரிஞ்சா வீ வில் சப்போர்ட் ஹிம். இல் லேன்னா இருக்கவே இருக்கு காங்கிரசோட ஜஸ்ட் சீட் அட்ஜஸ்ட்மென்ட்தான்ங்கற கொள்கை விளக்கம்!

(பாசு அவசரமாக வெளியேறுகிறார்.)

கற்பனை : **சாருகேசி**




இங்கிலாந்து ராணிக்கும் பட்ஜெட் பற்றாக் குறைதானாம்!

சாமானியர்கள்தான் சம்பள உயர்வு கேட்பார்கள் என்று நீங்கள் நினைத்துக் கொண்டிருந்தால், அது தவறு. இங்கிலாந்து மகாராணி கூட சம்பள உயர்வு கேட்டிருக்கிறார். அரண் மனை பராமரிப்பு, ஊழியர் சம்பளம் உள்பட பல்வேறு செல வினங்களுக்காக வும் மகாராணியின் குடும்பத்துக்கு ஆண்டுதோறும் சுமார் நாற்பது கோடி ரூபாய் தரப்படுகிறது. செல வினங்கள் அதிகரித்து விட்டதாலும், ஊழி யர்களுக் குச் சம்பள உயர்வு தரவும், பன்னி ரெண்டு சதவீதம் கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டும் என்பது மகாராணியின் கருத்து. பிரிட்டிஷ் நிதி அமைச்சகம், விரைவில் இந்தக் கூடுதல் நிதியை அங்கீ கரிக்கும் என்று சொல்லப்படுகிறது.

— பாரதி

புதிய வோட்டணி!







வாஜ்பாய் அரசு கவிழ்வதற்கு மூன்று வாரங்கள் முன்பாக திருவள்ளூரில் ராஜீவ் காங்கிரஸ் கூட்டத்தில் பேசும் போது கலைஞரைக் கடுமையாக விமர்சித்தார் வாழப்பாடியார். பேச்சின் ஒலிநாடாவைக் கேட்ட கலைஞர், அந்தக் கட்சியின் மற்றொரு தலைவரை தொலைபேசியில் கூப்பிட்டு, "என்ன... ராமமூர்த்தி இப்படியெல்லாம் பேசுகிறார்!" என்று வருத்தப்பட்டிருக்கிறார்.

"பரதேசி பண்டாரங்களை தமிழகத்தில் அனுமதிக்க மாட்டோம்" என்று பா.ஜ.கவை பற்றி சென்ற பாராளுமன்றத் தேர்தலின் போது கலைஞர் கடுமையாக விமர்சித்தார். இப்போது பா.ஜ.க.வோடு கூட்டணி வைக்க வேண்டிய அளவுக்கு அரசியல் நிலை மாறியிருக்கிறது.

இந்த நிலையில், "நீங்கள் அமைத்துள்ளது வோட்டணி தானே" என்று தி.மு.க. அணியின் பிரமுகர்களைப் பார்த்துக் கேட்டோம்.

" 'வினை வலியும் தன் வலியும்' என்று துவங்கும் குறளின் பொருள் என்னவென்றால் தன் வலிமை மட்டுமல்ல; எதிரியின் வலிமை, அவர்களுக்குத் துணை போகிறவர்கள் வலிமை ஆகியவற்றை ஆராய்ந்து ஒரு செயலில் ஈடுபட வேண்டும். கொள்கை அடிப்படையில் கூட்டணி அமைவது நல்லது. ஆனால் அப்படித்தான் அமைந்து தீர வேண்டும் என்பது கட்டாயமல்ல; யார், யார் எதிரணியில் இருக்கிறார்கள்; அவர்கள் எதற்காக ஓரணியில் திரள்கிறார்கள் என்பதைப் பொறுத்தே மற்றொரு அணியும் அமையும். ஊழல் சக்திகள் மீண்டும் உயிர் பெற்று விடக் கூடாது என்பதுதான் தமிழகத்தின் முன் உள்ள முக்கியமான பிரச்னை. 1996ல் ஊழல் சக்திகளை ஒழித்துக் கட்ட மகத்தான ஆதரவு அளித்தார்கள். அந்தப் பணி இன்னமும் முடியவில்லையே!'' என்கிறார் அமைச்சர் ஆலடி அருணா.

"அது சரி; அதற்காக முற்றிலும் மாறுபட்ட

கொள்கைகளைக் கொண்ட பா.ஜ.க., ராஜீவ் காங்கிரஸ் ஆகியவற்றுடன் கூட்டணி அமைக்க வேண்டுமா என்ன?"

"இரண்டாம் உலகப் போரில் ஹிட்லர் தலைமையில் நாசிசம் தலைதூக்கிய போது ஜனநாயக சக்திகளும், கம்யூனிஸ்ட் சக்திகளும் ஓரணிக்கு வந்தன. அது போலத்தான் ஊழல் சக்திகள் ஓரணியில் திரளும் போது நாங்கள் பா.ஜ.க.வோடு இணைந்து செயல்பட வேண்டியது அவசியமாகிறது. இதற்காக சிறுபான்மையோர் நலன் காப்பது போன்ற எங்கள் அடிப்படைக் கொள்கைகளை விட்டுக் கொடுத்து விட்டோம் என்று சொல்லக் கூடாது" என்கிறார் அருணா.


தமிழக ராஜீவ் காங்கிரஸைப் பொறுத்தமட்டில், தி.மு.க.வுடனான நெருக்கத்தைப் பற்றி ஆச்சர்யப்பட வேண்டியதில்லை என்கிறார்கள். முன்பு வாழப்பாடியாரும், ராமதாஸும் விழுப்புரத்தில் கூட்டம் போட்டு, "கலைஞரை மீண்டும் முதல்வராக்குவோம்" என்று சூளுரைத்தவர்கள்தான். ஆனால் சட்டமன்றத் தேர்தலில் கேட்ட அளவுக்கு இடம்கொடுக்கவில்லை என்று நொந்து போய் கலைஞரிடம் இருந்து பிரிந்தவர்கள். அதன்பின் கலைஞரை கடுமையாக விமர்சித்து, ஜெ.வுடன் இணைந்தார்கள். கடந்த ஒரு வருட காலத்தில், 'தி.மு.க. அரசை டிஸ்மிஸ் செய்ய வேண்டும் என்று இருமுறை ராஜீவ் காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இப்போது மீண்டும் கலைஞருடன் நெருக்கம்!

"கூட்டணிக் கட்சிகளிடையே கொள்கை ஒற்றுமையா...!" கேலியாகச் சிரிக்கிறார் ராஜீவ் காங்கிரஸின் துணைத் தலைவரான தி.சு. கிள்ளிவளவன். "தமிழகத்தில் இந்தக் கட்சிக்கு, கடந்த தேர்தலில் வாங்கிய வோட்டுக்களின் அடிப்படையில், இத்தனை சதம் இருக்கிறது என்று கணக்கிடப்பட்டு, யார், யாருடன் இணைந்தால் எதிரணியை விட அதிகமான இடங்களைப் பெறலாம் என்று கணக்குப் போடப்பட்டு அமைக்கப்படும் கூட்டணிதான் இவை!" என்கிறார் அவர்.

"எங்களைப் பொறுத்தமட்டில் வாஜ்பாய் அரசு தொடர வேண்டும் என்று எண்ணுகிறோம். அந்த எண்ணத்துக்கு வலு சேர்க்கும்விதமாக தி.மு.க.வும் பா.ஜ.க. அணியில் இணைந்திருக்கிறது; அவ்வளவுதான்!"

பா.ஜ.கவைப் பொறுத்தமட்டில், "எல்லாவிதக் கொள்கைத் தியாகங்களையும் செய்வதற்குத் தயாராக இருக்கிறது. பொது சிவில் சட்டம், ராமர் கோவில் போன்ற அதன் முக்கிய லட்சியங்களை கிடப்பில் போட்டாகி விட்டது. இப்போதைய நிலையில் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை அ.தி.மு.க. காங்கிரஸ் தவிர வேறெந்தக் கட்சிகள் உடன்பாட்டுக்கு வந்தாலும், யெஸ்.. ரெடிதான். அதன் ஒரே குறிக்கோள், வாஜ்பாய் மீண்டும் பிரதமராக வேண்டும்; பா.ஜ.க. ஆட்சி தொடர வேண்டும் என்பது தான்! இந்தக் கருத்தை அப்படியே ஒப்புக் கொள்கிறார் தமிழக பா.ஜ.க.வின் துணைத் தலைவரான டாக்டர் மைத்ரேயன்.

"கடந்த ஐம்பதாண்டு கால வரலாற்றை எடுத்துப் பார்த்தால் எந்தக் கூட்டணியுமே கொள்கை அடிப்படையில் அமைந்தவை அல்ல என்று தெரியவரும். 1967-ல் காங்கிரஸை விரட்ட முரண்பட்ட கொள்கைகளைக் கொண்ட தி.மு.கவும் சுதந்திராக் கட்சியும் அமைத்த கூட்டணி... ஆட்சியை விட்டு காங்கிரஸை விரட்ட வேண்டும் என்ற ஒரு குறிக்கோளுக்காக அமைக்கப்பட்ட கூட்டணி. இது போல் பல உதாரணங்கள்! சென்ற பாராளுமன்றத் தேர்தலில், 'நிலையான ஆட்சி' 'திறமையான பிரதமர்' என்ற குறிக்கோளுடன் பா.ஜ.க. கூட்டணி போட்டியிட்டது. இப்போது ஒரு முன்னேற்றம். சென்ற முறை தேர்தலுக்குப் பின்புதான் பா.ஜ.க. அணி செயல் திட்




"ஊழல் சக்திகள் ஓரணியில் திரளும் போது நாங்கள் பா.ஜ.க.வோடு இணைந்து செயல்பட வேண்டியது அவசியமாகிறது."

டத்தை வகுத்தது. ஆனால் இந்தத் தேர்தலில், மக்களைச் சந்திக்கும் முன்பே குறைந்த பட்சத் திட்டத்தையாவது பா.ஜ.க. கூட்டணி நாட்டு மக்களுக்கு அளிக்க இருக்கிறது. இது வரவேற்கத்தக்க ஆரோக்கியமான வளர்ச்சி இல்லையா?" என்று கேட்கிறார் மைத்ரேயன். "இப்போது வாஜ்பாய் அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு தக்க பதிலடி கொடுக்க வேண்டும். மறுக்கப்பட்ட வாய்ப்பு வாஜ்பாய்க்கு மீண்டும் கொடுக்கப்பட வேண்டும். இந்தக் குறிக்கோள்களுடன்தான் புதிய கூட்டணி உருவாவதற்கான முயற்சிகள் தொடங்கியுள்ளன" என்றார் அவர்.

பா.ம.கவைப் பொறுத்தமட்டில் கொஞ்சம் தயக்கத்தோடுதான் அ.தி.மு.கவை விட்டுப் பிரிகிறார்கள் என்று சொல்ல வேண்டும். 'பா.ம.க.வுக்கு முகவரி தந்த வன்னிய மக்களின் அன்புத்தாய் ஜெயலலிதா' என்றெல்லாம் ஏகமாய் புகழ்ந்தாயிற்று. சென்ற பாராளுமன்றத் தேர்தலின் போது தி.மு.க.வுடன் கூட்டணி அமைக்க முதலில் ஆசையாக இருந்தார் டாக்டர். ஆனால் பா.ம.க.வின் செல்வாக்குக்கு ஏற்ற படி சீட்டுகள் கிடைக்காததால், "வேட்டி கிடைக்கும் என்று சென்றேன்; கட்டிய கோவணத்தையும் பறிக்கப் பார்த்தார்கள்" என்று வேதனையுடன் கலைஞரைப் பிரிந்தார்.

"வாஜ்பாய் பிரதமராகத் தொடர்ந்து நீடிக்க வேண்டும். நிலையான ஆட்சி என்று

"வாஜ்பாய் அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு தக்க பதிலடி கொடுக்க வேண்டும். மறுக்கப்பட்ட வாய்ப்பு வாஜ்பாய்க்கு மீண்டும் கொடுக்கப்பட வேண்டும். இந்தக் குறிக்கோள்களுடன்தான் புதிய கூட்டணி உருவாவதற்கான முயற்சிகள் தொடங்கியுள்ளன."



சொல்லித்தான் வோட்டு வாங்கினோம். ஒரு வருட காலத்திற்குள் வாஜ்பாய் பதவி இழக்க வேண்டியதாகி விட்டது. மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியின் தொடர்ச்சியாக, இந்த முறையும் நாங்கள் வாஜ்பாய் அணியில் இருக்கிறோம். எங்கள் அணியில் தி.மு.கவும் வந்து இணைந்திருப்பது மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கிறது!" என்கிறார் பா.ம.க.வின் அமைப்புச் செயலாளரான பு. தா. இளங்கோவன்.

"ஒத்த கொள்கையுடைய கட்சிகள் இணைந்துதான் தேர்தலைச் சந்திக்க வேண்டும் என்றெல்லாம் இப்போதைய அரசியலில் எதிர்பார்க்க முடியாது. நடந்து முடிந்த பல விவகாரங்களைப் பாடமாக எடுத்துக் கொண்டு செயல்படலாம். அதற்காகக் கடந்த காலத்திய செயல்பாடுகளை மட்டுமே நினைத்துக் கொண்டிருக்கக் கூடாது" என்கிறார் அவர். தி.மு.க. தொண்டர்களுடன் இணைந்து பணியாற்றுவது பா.ம.க. தொண்டர்களுக்குச் சுலபமாக இருக்கும் என்றும் சொல்கிறார்.

சென்ற பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக தடாலடியாக வந்து அ.தி.மு.க. அணியில் இணைந்தவை பா.ம.க.வும் ராஜீவ் காங்கிரஸும். ஆனால் ம.தி.மு.க.வைப் பொறுத்தமட்டில் கொஞ்சம் வேறுபாடு உண்டு. 1996 சட்டமன்றத் தேர்தலுக்குப் பின்பு, குறிப்பாக புதுக்கோட்டை இடைத் தேர்தலில் இருந்தே அ.தி.மு.க.வுடன் ம.தி.மு.க.வுக்கு நெருக்கம் அதிகரித்தது. இணைந்து பல போராட்டங்களிலும் ஈடுபட்டார்கள். பாராளுமன்றத் தேர்தலில் இயல்பாகக் கூட்டணியும் சேர்ந்தார்கள். வெற்றி பெற்ற பிறகு, "பா.ஜ.க.வுக்கு ஆதரவுக் கடிதத்தை நேரடியாக ஜனாதிபதியிடம் வை.கோ. கொடுத்ததுதான், ஜெ.வை ஆத்திரப்படுத்திய முதல் செயல். அதன்பின் கொஞ்சம் கொஞ்சமாக அந்தக் கட்சிகளுக்



IS: 7933

D.P. Foam வழங்கும் PUF மெத்தைகள், களைத்து வரும் முதுகுகளுக்கு மிருதுவான மருந்து. நாளெல்லாம் உழைத்த சோர்வு தீர உறங்க சுகமான படுக்கைகள்.

D.P. Foam மெத்தைகள் மற்ற Foam மெத்தைகளைவிட அடர்த்தியாக இருப்பதால் முதுகிற்கு இதமான பாதுகாப்பு தருகின்றன. நீண்டகாலமாக உழைக்கின்றன. பருத்தி மெத்தைகளில் ஆவது போல் தூசி படாது, கழுவலாம். சுலபமாக மடித்தும் வைக்கலாம்.

குடும்பத்தில் அனைவரும் நிம்மதியாக தூங்கி புத்துணர்ச்சியுடன் விழித்தெழ, உங்கள் மெத்தைகள் D.P. Foam ஆக இருக்கட்டும்.

D.P. Foam ஸ்லீப் ட்ரீம்ஸ் மெத்தைகள், கான்டோர் தலையணைகள், அதிஅடர்த்தி மெத்தைகள், ஸ்ன்ஸ்ஃபுட் மெத்தைகள், ஷேரி காட், ஸ்போர்ட்ஸ் ஸீட்ஸ் மற்றும் போல்ஸ்டர்கள், சென்னையிலும் பாண்டியிலும் உள்ள எங்கள் கம்பெனி கடைகளில் மட்டுமே கிடைக்கும்.

DP FOAM

Sweet Dreams

Mattresses

துடிப்பான துவக்கத்திற்கு, நிம்மதியான இரவுகள்.

EX-FACTORY RETAIL OUTLETS


- **சென்னை:** 180, லஸ் சர்ச் சாலை, கடை எண் 29, **T. N. H. B.** ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ், லஸ் கார்னர், மைலாப்பூர், சென்னை-4. (காமதேனு தியேட்டர் அருகில்) போன்: 498 2663.
- **பாண்டிச்சேரி:** 13, ரங்கப்பிள்ளை தெரு, பாண்டிச்சேரி-605001 போன்: 221095

FIDELIS -DP FOAM-349

குள் இடைவெளி உண்டானது.

"ஐந்தாண்டுகள் தொடர்ந்து வாஜ்பாய் அரசு பதவியில் நீடிக்கும் என்று சொல்லித்தான் நாங்களும் எங்கள் கூட்டணிக் கட்சிகளும் பிரசாரம் செய்து வோட்டு வாங்கினோம். ஆனால் முற்றிலும் சுயநலம் காரணமாக, தொடக்கத்திலிருந்தே வாஜ்பாய் அவர்களுக்குத் தலைவலிகளை உருவாக்கிக் கொண்டிருந்தார் ஜெயலலிதா. சென்ற வருடம் ஆகஸ்ட் 15-ம் தேதி செங்கோட்டையில் பிரதமர் கொடியேற்றுவாரா என்று சந்தேகப்படும் அளவுக்கு அவர் தொல்லை கொடுத்தார். அப்போது நாங்கள் மாவட்டச் செயலாளர் கூட்டத்தைக் கூட்டி, 'ஐந்து வருட காலம் எங்கள் ஆதரவு வாஜ்பாய்க்கு தொடரும் என்று அறிவித்தோம். கடைசியில் 'சுயநலம்' ஆட்சியைக் கவிழ்த்தே விட்டது. இந்த நிலையில் மத்தியில் அடிக்கடி ஆட்சிகள் கவிழ்ந்து கொண்டிருப்பது நாட்டுக்கு நல்லதல்ல என்ற அடிப்படையிலும், ஊழல் சக்தி வலுப்பெற்று விடக்கூடாது என்ற நோக்கத்திலும், தி.மு.க., பா.ஜ.க. அரசை நம்பிக்கைத் தீர்மானத்தில் ஆதரித்தது. பா.ஜ.க. அரசை வீழ்த்திய ஊழல் சக்திகள் முரண்பாடுகளின் வடிவமாக இருந்தன. அவர்களால் மாற்று அரசு அமைக்க முடியவில்லை. இந்தக் கட்சிகள்தான் நீங்கள் குறிப்பிடுவது போல வோட்டணியாக மாற பல உபாயங்களைக் கையாள்கிறார்கள். தமிழகத்தில் உத்தேசிக்கப்பட்ட தி.மு.க. உள்ளான எங்கள் கூட்டணியின் குறிக்கோள் ஒன்றுதான். மத்தியில் வாஜ்பாய் தலைமையில்

"பா.ஜ.க. அரசை வீழ்த்திய ஊழல் சக்திகள் முரண்பாடுகளின் வடிவமாக இருந்தன. அவர்களால் மாற்று அரசு அமைக்க முடியவில்லை. இந்தக் கட்சிகள்தான் நீங்கள் குறிப்பிடுவது போல வோட்டணியாக மாற பல உபாயங்களைக் கையாள்கிறார்கள்."




கூட்டணி அரசு தொடர வேண்டும். கைகோத்து வரும் ஊழல் சக்திகளுக்கு நாட்டு மக்கள் சரியான பாடம் கற்பிப்பார்கள்" என்று சொன்னார் வைகோ.

ம.தி.மு.க. தொண்டர்கள் உணர்ச்சிப் பிழம்புகள். தி.மு.கவை விட்டு வை.கோ. நீக்கப்பட்ட போது ஐந்துக்கும் மேற்பட்ட தொண்டர்கள் அவருக்காகத் தீக்குளித்தார்கள். 'நெருப்பிலே பிறந்தவர்கள் நாங்கள்' என்று ம.தி.மு.கவினர் சொல்லிக் கொள்வதுண்டு. "எங்கள் பொதுச் செயலாளர் மீது கொலைப் பழி போட்டு வெளியேற்றினார்கள். அது வரலாறு. ஆனால் காங்கிரஸ் போன்ற யதேச்சாதிகார சக்திகள் பொறுப்புக்கு மீண்டும் வந்து விடாமல் தடுக்கும் கடமை இருக்கிறது. வாஜ்பாய் போன்ற நல்ல மனிதரின் தலைமையில் ஆட்சி தொடர வேண்டும். இதுவே இப்போதைய நோக்கம். இதற்கு துணை வரும் எந்தக் கட்சிகளோடும் நாங்கள் தோழமை கொள்வோம்" என்றார் ஒரு சீனியர் ம.தி.மு.க. பிரமுகர்.

கொள்கை அடிப்படையில் கூட்டணி என்பதெல்லாம் நடவாத காரியம் என்பதைக் கூட்டணிப் பிரமுகர்கள் ஒப்புக் கொள்கிறார்கள். குறைந்தபட்ச வோட்டு வாங்கவில்லை என்றால் தேர்தல் கமிஷன், கட்சியின் தனிச் சின்னத்தை பறித்து விடுகிறது. எனவே அதிகபட்சம் வோட்டு வாங்க என்ன மாதிரியான ஏற்பாடுகளைச் செய்து கொள்ளலாம் என்ற அடிப்படையிலேயே கட்சிகள் எண்ணிச் செயல்படுகின்றன. சமீபத்தில் ஒரு பத்திரிகையாளர் சந்திப்பின் போது கலைஞரைப் பார்த்து, "பெரியார், அண்ணா வழியில் வந்த தி.மு.க., 'இந்துத்வா' பா.ஜ.க.வோடு கூட்டணி சேர்வது முரண்பாடு ஆயிற்றே" என்று ஒரு நிருபர் கேட்க... 'நாங்கள் அரசியல் கட்சி நடத்துகிறோம்' என்று பதிலளித்தார் கலைஞர்! பல்வேறு கட்சிகளின் கூட்டணி பற்றி விளக்க இதைவிடச் சரியான விளக்கம் இருக்கவே முடியாது.

— ப்ரியன்





1999 மே 23
பிரமாதி வைகாசி 9
மலர் : 57
இதழ் : 43

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




காபந்து அரசின் கால்பந்தாட்டம்!

காபந்து அரசாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் பி.ஜே.பி. ஆட்சி, என்ன நோக்கத்தில் கிட்வாய்க்கு கல்தா கொடுத்தது? என்ன நோக்கத்தில் அருணாசல பிரதேச கவர்னரை 'வீட்டுக்கு அனுப்ப' ஏற்பாடு செய்தது?

இருக்கிற காலத்தில் முக்கிய அதிகாரப் பொறுப்புகளில் 'தங்கள் ஆட்களைப்' பொருத்தி, அதன் மூலம் அதிகாரத்தைக் குவித்துக் கொண்டு தேர்தலில் ஆதாயம் தேடும் நோக்கம்!

பி.ஜே.பியின் ஆதரவாளரான மமதா பானர்ஜி மறுத்த போதிலும், கவர்னர் கிட்வாய்க்கும் அவருக்குமிடையே மோதல் இருந்திருக்கிறது என்பது செய்தியில் இடம்பெற்றுள்ளது. மமதா சொல்படியெல்லாம் 'ஆடத்' தயாராயில்லாததால் கிட்வாய் வீட்டுக்கு அனுப்பப் பட்டிருக்கிறார்! அருணாசல பிரதேச ஆளுனர் மாதா பிரசாத்தும் இவ்வாறே முன்னறிவிப் பின்றித் துரத்தப்படுகிறார்!

செப்டம்பர் வரை தேர்தல் ஒத்திப் போடப்பட்டுள்ளதால், பி.ஜே.பி. அரசு அக் கால கட்டத்தில் மக்களின் மனம் கவரும் வகையில் அமைதியாகச் செயல்பட்டு, வாக்குகளை உத்தரவாதமாக்கிக் கொண்டிருக்கலாம். ஆனால், காபந்து அரசின் நடவடிக்கைகள் அசல் துக்ளக் தர்பாரை நினைவூட்டுகின்றன. சம்பந்தப்பட்ட மாநில அரசுகளிடம் ஒரு சொல் கூட கலந்து பேசாமல் எடுத்தேன், கவிழ்த்தேன் என்று செயல்பட்டு அவப்பெயர் தேடிக்



கொண்டிருக்கிறது மத்திய அரசு.

கவர்னர்கள் மாற்றத்தாலோ, அதிகாரிகள் பணி மாற்றத்தாலோ வாக்காளர்கள் மகிழ்ந்து போய் வாக்குகளை அள்ளித் தந்துவிடப் போவதில்லை.

நேர் மாறாக, இந்தச் செயல்கள் எதிர்க் கட்சியினரின் கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாகி, மக்களிடையே உள்ள பி.ஜே.பி. அனுதாபத்தைப் போக்கிவிடும்!


கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பிரகாஷ் கராத் இந்த நடவடிக்கை தான்தோன்றித்தன மானது என்று சாடியிருக்கிறார். காங்கிரஸ் தரப்பில் இதை ஃபாஸிஸ போக்கு எனச் சாடியுள்ளார்கள்! தாம் ஒரு மாதம் வெளிநாட்டுப் பயணம் செல்லவிருக்கும் தருணத்தில் மேற்கு வங்கத்தில் அரசியல் நெருக்கடி ஏற்படுத்துவதற்காக பி.ஜே.பி. திட்டமிட்டுச் செயல் பட்டிருக்கிறது என்று ஜோதிபாசு குற்றம்சாட்டி விட்டுக் கிளம்பிப் போயிருக்கிறார்.

'குஜ்ரால் ஆட்சி காபந்து அரசாகச் செயல்பட்ட காலகட்டத்தில் ஆளுனர்களை மாற்றி யது. அந்தச் சமயத்தில் அத்வானி போன்றோர் அந்த நடவடிக்கையை எதிர்த்தார்கள். காபந்து அரசு இப்படிப்பட்ட முக்கிய முடிவுகளை எடுக்கக் கூடாது என்றார்கள். ஆனால் இன்று உங்கள் காபந்து அரசு அதே தவறைச் செய்கிறதே' எனச் சுட்டிக்காட்டப்பட்டபோது, பி.ஜே.பி. பிரதிநிதி கே.எல். ஷர்மா சவடாலாக பதில் பேசியிருக்கிறார் :

"ஆமாம்! அன்றைக்கு அவர்களை நாங்கள் விமர்சித்தோம். இன்று நாங்கள் விமர்சிக் கப்படுகிறோம்... அதனாலென்ன? குடியா முழுகிவிடும்?" என்று கூறியிருக்கிறார்!

தேர்தல் இன்னமும் அறிவிக்கப்படவில்லையென்றாலும் செப்டம்பர், அக்டோபரில் அது நடக்கப் போவது உறுதி. அவ்வாறிருக்க காபந்து அரசாயினும் சரி, மக்கள் ஆதரவுடன் ஆட்சியிலிருக்கும் அரசாயினும் சரி தார்மிக நெறிகளிலிருந்து பிறழாமல் இயங்க வேண்டும்.

இன்று பி.ஜே.பி. காபந்து அரசு செயல்படுகிற அவசர கதியானது, அக்கட்சியின்



தன்னம்பிக்கையின்மையையே உணர்த்துகிறது. தேர்தலில் நேர்மையாகப் போட்டியிட்டு ஜெயிப்பதற்கான மனவலிமையை அக்கட்சி மெள்ள இழந்து வருவதாக அதன் ஆதரவாளர்கள் கூட சந்தேகிக்க ஆரம்பிப்பார்கள்.

சாட்டையடித் தீர்ப்பு!

ஜெயலலிதா பேரிலான வழக்குகளை ஆராய்ந்து வரும் சிறப்பு நீதிமன்றங்கள் தொடர்பாக உச்ச நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது.

ஜெயலலிதாவின் தாமத நடவடிக்கைகளுக்கு இத் தீர்ப்பு முற்றுப்புள்ளி வைத்துள்ளது. அதனினும் முக்கியமாக, ஊழல் தடுப்புச் சட்டத்தின் நோக்கத்தைத் தெளிவுபடுத்தி, ஜெயலலிதா தரப்பு வாதத்தை தவிடுபொடியாக்கியிருக்கிறது.

'சட்டத்தின் உயர் நோக்கத்தைப் புறக்கணித்துவிட்டு, அதிலுள்ள வார்த்தைகளுக்கு இல்லாத அர்த்தம் கற்பித்து, மாநில அரசுக்கு, சிறப்பு நீதிபதிகளை நியமிக்க அதிகாரம் இல்லை என்று வாதிடுவது தவறு' என்று திட்டவட்டமாகச் சொல்கிறது உச்சநீதி மன்றத் தீர்ப்பு.

இதன் மூலம் மாநில அரசு அரசியல் உள்நோக்கத்துடன் செயல்படுவதாக ஜெ சுமத்தியுள்ள குற்றம் அடிபட்டுப் போகிறது. ஜெயலலிதா, வேண்டுமென்றே வழக்குகளைத் தாமதப்படுத்தினார் என்பதும் உறுதியாகிறது.

குற்றம்சாட்டப் பெற்றவர்கள் இனியேனும் வழக்குகளைச் சந்தித்து விரைவில் அவை நடந்து முடிய ஒத்துழைக்க வேண்டும் என முதல்வர் கூறியிருக்கிறார்.

இனியேனும் அ.தி.மு.க.வுடன் அரசியல் உறவு கொள்ளும் எண்ணத்தைக் கைவிட வேண்டும் என்பது, போயஸ் தோட்டத்துக்குத் தூது போகும் கட்சிகளுக்குப் புரிந்தால் சரிதான்!

KALKI SHOPPING PAGE

சமையல் சாதனங்கள் தயாரிப்பு நிறுவனமான சிவநேசன் கம்பெனி வெளி நாட்டுத் தொழில்நுட்பத்தை நம் ஊருக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. அதுதான் ப்ரீமியர் மல்டி ஸ்டீமர். இது மூன்று ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் அடுக்குகளைக் கொண்டு இரண்டு அளவுகளில் கிடைக்கிறது. தண்ணீர் ஊற்றி வைப்பதற்கான கீழ் அடுக்கு 'காப்பர் பாட்டம்' உடையது. ஒவ்வொரு அடுக்குக்கும் எளிதில் நீராவி செல்ல வசதியாக, நேர்த்தியான முறையில் வடிவமைத்து செய்யப்பட்டுள்ளது. இதனுடைய சிறப்பம்சம், ஒரே சமயத்தில் சமையலுக்குத் தேவையான எல்லா உணவுப் பொருட்களையும் வேகவைக்க முடியும் என்பதுதான். இதனால் பொன்னான நேரமும் எரிபொருளும் மிச்சமாகிறது. நீராவி

மைசூர் சந்தன சோப் தயாரிப்பில் 82 ஆண்டு கால அனுபவம் உள்ள கர்நாடகா சோப்ஸ் அண்ட் டிடர்ஜெண்ட்ஸ் லிமிடெட் நிறுவனம், புதியதாக மைசூர் சந்தன பேபி பவுடரும் போதி சத்வா அகர்பத்தியும் அறிமுகம் செய்துள்ளது. மைசூர் சந்தன பவுடர் குழந்தைகளின் மிருதுவான சருமத்திற்கு இயற்கைப் பாதுகாப்பு அளிக்கிறது. இந்த பவுடர் தூய சந்தன எண்ணெய் மற்றும் பாதாம் எண்ணெயினால் தயாரிக்கப்படுகிறது. மிருதுவாகவும் மென்மையாகவும் மற்றும் நறுமணம் வீசக் கூடியதாகவும் உள்ள



யால் வேகவைக்கப்படுவதால் உணவுப் பொருள்களின் இயற்கையான சத்துக்கள் மற்றும் மணம் பாதுகாக்கப்படுகிறது. இவ் வளவு நேர்த்தியான அம்சங்களைக்



கொண்ட பிரீமியர் மல்டி ஸ்டீமர் எல்லாத் தரப்பினரும் வாங்கக்கூடிய குறைந்த விலையில் கிடைக்கிறது.



இது, 100, 200 மற்றும் 400 கிராம்களில் இப்போது கடைகளில் கிடைக்கிறது. மேலும் மைசூர் சந்தன பேபி பவுடர் குழந்தை நல மருத்துவர்கள் மற்றும் சரும நல நிபுணர்களால் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

இந்நிறுவனம் புதிதாக அறிமுகப்படுத்தும் மற்றுமொரு பொருள் போதி சத்வா அகர்பத்தி. போதி சத்வா என்பது ஞான ஒளியை அளிக்கக்கூடிய ஆத்மாவைக் குறிக்கும். இந்த ஊதுபத்திகள் கற்பூர எண்ணெய் கொண்டு தயாரிக்கப்படுவதால் ரம்மியமான மணத்துடன் உணர்வுகளைக் குளிரச் செய்கிறது. இவை 180, 60, 30 மற்றும் 15 குச்சிகள் அடங்கிய பாக்கெட்டுகளில் கிடைக்கின்றன.

பக்தி மார்க்கத்திலிருந்து கம்யூனிஸ்ட் கட்சிக்கு...

1940களில் திருநெல்வேலிக்கும் தூத்துக்குடிக்கும் இடையில் வல்ல நாட்டில் தாமிரபரணி மீது பாலம் கிடையாது. நெல்லையிலிருந்து தூத்துக்குடி செல்பவர்கள் ஸ்ரீவைகுண்டம் பாலம் வழியாகத்தான் செல்ல வேண்டும். விடுதலைப் போராட்டம் தீவிரமாக இருந்த காலம் அது. காங்கிரஸ் தலைவர்கள் ஊர், ஊராகச் சென்று எழுச்சியுரை நிகழ்த்தி மக்களைத் தயார் படுத்திக் கொண்டிருந்தார்கள். தூத்துக்குடிக்குச் செல்லும் தலைவர்கள் ஸ்ரீவைகுண்டத்தில் கண்டிப்பாகக் கூட்டம் போட்டுப் பேசி விட்டுத்தான் செல்வார்கள். பள்ளிச் சிறுவர்களிலிருந்து பல்லில்லாத முதியோர் வரை கூட்டங்களுக்கு ஆர்வமுடன் வருவார்கள்.

பல சமயங்களில் கூட்டங்கள் இரவில் நடக்க நேரிடும். தலையில் பெட்ரோமாக்ஸை சுமந்தபடி செல்லும் சிறுவர் கூட்டம். 'போலோ... பாரத் மாதா கி' என்று ஒரு சிறுவன் குரல் எழுப்ப, 'ஜெய்' என்று உடன் வரும் கோரஸ் ஆற்றுப் படுகையில் உள்ள நாணல்களையும் சிலிர்க்க வைக்கும். பள்ளியில் படிக்கும் போதே பெட்ரோமாக்ஸை சுமந்து போராட்டத்தில் கலந்து கொண்ட ஒரு சிறுவனின் வாழ்க்கையில், பின்னால் பெரிய மாறுதல். கம்யூனிஸ்ட் இயக்கத்தில் தீவிர பிடிப்பு உண்டாகி, போராட்டங்களில் கலந்து கொண்டு, ஆயுள் தண்டனைக் கைதியாக சிறையில் இருந்து, படிப்படியாகக் கட்சியில் உயர்ந்து இன்று வலது கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளராக இருக்கும் நல்லகண்ணுதான் அந்தச் சிறுவன்.

74 வயதாகும் நல்லகண்ணுவுக்கு 'ரொபஸ்டான' உடல்வாகு. கம்யூனிஸ்ட் இயக்கத்தை ஒட்டிய கம்யூன்-கூட்டு- வாழ்க்கைக்கு வளைந்து கொடுத்த உடம்பு. மனிதர் பார்க்கத்தான் கொஞ்சம் கரடு முரடு. பேசும் போது, பக்கத்தில் இருப்பவர் கூட கூர்ந்து கேட்க வேண்டிய அளவுக்கு மெலிதான குரலில் பேசுகிறார். தமிழ் மாநில வலது கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை நிலையமான பாலன் இல்லத்தில், ஒரு முரட்டு முண்டா பனியனுடன், தாம் இருப்பதே தெரியாமல் எப்போதும் படிப்பு, எழுத்து என்று ஈடுபட்டிருக்கிறார். எந்தவித புற நிகழ்ச்சிகளும் அப்போது அவரைப் பாதிப்பதில்லை.

"தேவைகள் மிக மிகக் குறைவு. என் வேட்டி சட்டைகளைக் கூட தோழர்கள் வாங்கிக் கொடுத்து விடுகிறார்கள். சாப்பாடு, கம்யூனில். பயணம் போகும்போது தோழர்கள் வீட்டில். எதுக்குப் பணம்?" என்று அப்பாவித்தனமாகக் கேட்கிறார்.

1948ல் கல்கத்தாவில் கம்யூனிஸ்ட் மாநாடு ஒன்று நடந்தது. 'சுதந்தரம் அடைந்தும் பயனில்லை. காங்கிரஸின் தவறான அணுகுமுறையினால் மக்கள் சுரண்டப் படுகிறார்கள். இதை எதிர்த்து தேசம் முழுக்க கம்யூனிஸ்ட் இயக்கம் போராட்டம் நடத்தி, வேலை நிறுத்தம், மறியல் போன்றவற்றால் நாட்டை ஸ்தம்பிக்கச் செய்வோம்' என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து போராட்டம் வெடித்தது.

வன்முறைகள் இல்லாமல் இருக்குமா? ரேஷன் கடையிலிருந்து பொருள்களைப் பறிமுதல் செய்து மக்களுக்கு விநியோகித்தல், பண்ணையார்களின் நிலங்களை ஆக்ரமித்து நிலமற்றோருக்கு விநியோகம் செய்வது என்று அதிரடியில் இறங்கினார்கள் கம்யூனிஸ்டுகள். கைதான கம்யூனிஸ்டுகள் தேசத் துரோக சதி வழக்குகளில் சிக்க வைக்கப் பட்டார்கள். கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டது.

நாங்குனேரி பகுதியில் முழு நேர இயக்க ஊழியராக இருந்த நல்லகண்ணுவும் போலீஸாரால் தேடப்பட்டார். புலியூர் குறிச்சி கிராமத்தில் தலைமறைவாக இருந்த அவரை, போலீஸுக்கு யாரோ காட்டிக் கொடுத்து விடவே கைது செய்யப்பட்டார். மாஜிஸ்திரேட் முன்னால் ஆஜர் படுத்தப்படுவதற்கு முன்பு, போலீஸ் அவரை நன்றாகவே

'கவனித்தது'. இன்றைக்கு அதை யாராவது அவருக்கு நினைவு படுத்தினால், ஒரு புன்சிரிப்போடு மௌனமாகி விடுகிறார்.

ஜீவானந்தம், பாலதண்டாயுதம் ஆகிய சீனியர் தோழர்களுடன் மதுரை மத்தியச் சிறைச்சாலையில் இருந்த ஐந்து வருட காலம், கம்யூனிஸ்ட் தத்துவங்களையும், இலக்கியங்களையும் ஆழ்ந்து படிப்பதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக இருந்தது. வெளியிலிருந்து தோழர்கள் ஏகப்பட்ட புத்தகங்களைக் கொண்டு வருவார்கள். அவற்றைப் பெற்று, சிறைக்குள்ளே ஒரு தனி நூலகம் ஏற்படுத்தி, அதற்குப் பொறுப்பாக இருந்தார் நல்லகண்ணு.



அப்பா ராமசாமி சிறு விவசாயி. நான்கு மகன்களையும் நன்றாகப் படிக்க வைக்க வேண்டும் என்ற ஆர்வம் கொண்டவர். நல்லகண்ணு நெல்லை ஹிந்து கல்லூரியில் இண்டர் படித்தார். ஆசிரியராக வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது. ஆனால் இயக்கம் அவரை திசை திருப்பி விட்டது. விவசாயிகள் போராட்டம், வரி கொடா இயக்கம், மில் தொழிலாளர்கள் போராட்டம் என்று முழு நேரமும் களத்தில் இருக்க வேண்டிய நிலை. பள்ளி இறுதி வகுப்பு படிக்கும் போதே ஆசிரியரான பலவேசம் செட்டியார் கம்யூனிஸ்ட் இயக்க சிந்தனையை நல்லகண்ணு மனத்தில் விதைத்தார்.

"எங்க ஊர் பக்தி மார்க்கத்தில் சிறந்து விளங்கிய ஊர். நூற்றியெட்டு இருப்பதிகளில் ஒன்று. மார்கழி மாத விடியல் வேளையில் கைகளில் ஜால்ராவுடன் பஜனை செய்வோம். நாங்கள் நான்கு மணிக்கே எழுந்து, ஊர்ப் பெரிய மனிதர்கள் வீட்டின் எதிரில் நின்று பஜனை செய்வோம். ஆனால் பெரிய மனிதர் வீடு பூட்டப்பட்டிருக்கும். கொஞ்சம் வளர்ந்த பிறகு அந்த நினைவுகளை கிளறிப் பார்த்தால் எரிச்சல் கூட வருவதுண்டு. எதற்காக இதைச் சொல்லுகிறேன் என்றால், இயக்கத்தில் சேரும் போது 'கடவுள் மேல் பற்றுள்ளவன்' என்

பதை ஒளிவு மறைவில்லாமல் சொன்னேன். அப்போது மாவட்டக் குழுவில் இருந்த ராம கிருஷ்ணன் என்ற மூத்த தோழர், 'இனி எல்லோரும் இன்புற்று இருக்க வேண்டும் என்பதை மட்டும் மனத்தில் நினைத்தே பணியைச் செய்' என்று வழிகாட்டினார்."

1952ல் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மீதிருந்த தடை நீக்கப்பட்டது. சதி வழக்குகளில் ஆயுள் தண்டனை பெற்ற தோழர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். ஆனால் நல்ல கண்ணு விடுதலை செய்யப்படவில்லை. வெடி மருந்துச் சட்டத்தின் படி மற்றொரு வழக்கு அவர் மீது இருந்ததால் சிறைவாசம் நீடித்தது. 1956ம் ஆண்டு டிசம்பர் மாதம்தான் சிறைக் கதவுகள் திறந்தன. அதன் பின், மாநில அரசியலுக்கு வந்து விட்டார் நல்ல கண்ணு. மாநில விவசாய அணி செயலாளராக தமிழகமெங்குமுள்ள பட்டி தொட்டிகளை நடந்தே பார்த்திருக்கிறார். இயக்கச் சிந்தனையைத் தவிர வேறு எதுவும் கிடையாது. விவசாயிகளைத் திரட்டுவது, தொழிலாளர்களை இணைத்து தொழிற்சங்கம் உருவாக்குவது என்று பல பணிகள்.

நெல்லைப் பக்கம் கங்கை கொண்டான் அருகில் உள்ள நாரைக்கிணறு கிராமத்திலுள்ள இயக்கத் தோழர் ஒருவரின் மகள் ரஞ்சிதம். ஆசிரியையாக வேலை பார்த்து வந்தார். இயக்கத் தோழர்கள் நல்லகண்ணுவிற்கு அவரைத் திருமணம் செய்து வைத்தனர். பேராசிரியர் வானமாமலை தலைமையில் திருமணம். இரண்டு பெண்களை வளர்த்து நன்றாகவே படிக்க வைத்து, திருமணம் செய்து கொடுத்து கணவரின் இயக்கப் பணிக்கு மெழுகுவர்த்தியாக இருந்து இப்போதுதான் ஓய்வு பெற்றிருக்கிறார் ரஞ்சிதம். குடும்பச் சொத்தாகக் கிடைத்த நிலத்தைப் பெண்களின் திருமணச் செலவுக்காக விற்று விட்டார்.

1977ல் ஒரு முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டுத் தோற்ற அனுபவமும் இருக்கிறது. "வாழ்க்கையின் வசந்தமான காலங்களை இயக்கப் பணிகளில் இறங்கி இழந்து விட்டோமே என்கிற வருத்தம் ஏதாவது உண்டா?" என்று கேட்டால், "வாழ்க்கை பயனுள்ளதாக இருந்திருக்கிறது என்கிற மகிழ்ச்சிதான் இருக்கிறது!" என்கிறார் நல்ல கண்ணு. வலது கண்ணை ஒட்டினாற் போல ஒரு காயம் பட்ட வடு. போராட்டத்தில் காவல் துறையினரால் தாக்கப்பட்டு உண்டான வடுவா?

"அப்போது நெல்லையிலிருந்து எங்கள் ஊருக்கு ரயிலில்தான் கல்கி இதழ்கள் வரும். ஸ்டேஷனிலேயே வாங்கி முதலில் படிப்பது யார் என்று நண்பர்களுக்குள் போட்டி வரும். ஒரு மழைக் காலத்தில் பாலத்தின் மீது வேக வேகமாக 'கல்கி' வாங்க ஸ்டேஷனுக்கு ஓட, ஒரு திருப்பத்தில் வழுக்கி விழ அப்போது பட்ட காயத்தின் வடுதான் இது!" என்று சொல்லிச் சிரிக்கிறார் நல்லகண்ணு.

— ஸ்ரீநிவாசன்

படம் : வெங்கடேஷ்

"இது டப்பிங் பட புரொடியூசர் வீடு தானே?"

"எப்படி தெரிஞ்சுது?"

"'அனுமதி வாங்கி உள்ளே வாங்கடா' என்று வாசல்ல எழுதியிருக்குதே!"

– அம்பை தேவா





"சஸ்பென்ஸ் படத்துல நடிக்கிறதா சொல்றீங்க... தயாரிப்பாளர் என்னடான்னா ஆக்ஷன் படம்னு சொல்றாரே?"

"நான் சொன்னது படம் ரிலீஸாகுமாங்கறது ஏகப்பட்ட சஸ்பென்ஸா இருக்குன்ற அர்த்தத்துலதான்!"

– பி. ரமேஷ்

ஸ்ரீ:

ஸ்ரீமந் நடனகோபால நாயக்யை நம:



"ராணி சாரீஸ்"

"RANEE SAREES"

MADURAI

SPECIAL QUALITY

COLOURS ARE GUARANTEED

FOR DHOBI WASH

COPY RIGHT REGD. A-52846/95

சேலைகளின்
நிறம்
அது நிரந்தரம்
அதுவே...
ராணி சாரீஸ்
தரம்!

மதுரை **ராணி சாரீஸ்** சுங்குடிப் புடைவைகளுக்கு

சென்னையில் நிரந்தர தனி ஷோரூம்

- 5.40 மீட்டர் முதல் 9.20 மீட்டர் வரை ராணி சாரீஸ் கிடைக்கும்.
- மதுரை Special cotton Sundhar Sarees, பெங்கால் காட்டன், பாலி காட்டன், நெகமம், வேங்கடகிரி, கோடம்பாக்கம், அனைத்துரக பேன்ஸி காட்டன் மற்றும் அனைத்து ரக சுங்குடி சேலைகள் கிடைக்கும்.
- சல்வார், சூடிதார் மெட்டீரியல்ஸ் கிடைக்கும்.
- திருமன விசேஷங்களுக்கான உயர்தர வேஷ்டிகள் கிடைக்கும்
- சென்னையில் ஓரிஜினல் ராணி சாரீஸ் இங்கு மட்டுமே உண்டு.

மற்றவை நம் தயாரிப்பல்ல

ராணி சாரீஸ் எக்ஸ்குளுஸிவ் ஷாப்பி

கோல்டு கிரஸ்ட் காம்ப்ளக்ஸ் முதல் மாடி

54 & 55 வடக்கு உஸ்மான் ரோடு, தி. நகர், பனகல் பார்க்,

(ஸ்ரீ சாரதா வித்யாலயா பள்ளி எதிரில்)

சென்னை – 17 Ph: 8225778

SNC MDU

(3-ம் பக்க தொடர்ச்சி)



• பிரதமர் பதவிக்குத் தயாராகிறார்!

ஒத்துக் கொன்வார்கள் என்று ஒரு கணிப்பு.

இதை சூசகமாக உணர்த்துவதைப் போல் இன்றிலிருந்து புத்த தேவ் பட்டாச்சார்யா மேற்கு வங்காளத்தின் "செயலாற்றும் முதலமைச்சர்" (Officiating Chief Minister) என்று அறிவிக்கப்பட்டிருக்கிறார். அப்படியொரு சொற் பதமே நிர்ணய சாசனத்தில் இல்லாமலிருந்தாலும், பாசுவும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக இளைஞராகிக் கொண்டே போகிறாற்போலிருக்கிறது என்றார் ஒரு 'கொல்கொத்தா' இதழியலர். எனவே மஹா ஜனங்களே தே.பி.யிலும் எதற்கும் தயாராகவே இருங்கள்.ஏனெனில் அதுவே மற்றொரு தே.மு.வின் முன்னுரையாகவும் இருக்கலாம்.

ஆனால் இப்போது ஒவ்வொரு கட்சியும் ஈடுபட்டிருப்பதோ இதுவரையில்லாத மஹா கொச்சையான அரசியல் பிரசாரம். இதில் காவிப்படை, வட மாநிலங்களில், குறிப்பாக டெல்லியில் என்றுமே முன்னணி. டெல்லியில் தயாராகும் "தேர்தல் வீர வசனங்கள்" சுவரொட்டிகளாய், தட்டிகளாய், உ.பி, பீஹாரென்று பட்டி தொட்டிகளெங்கும் போகும்.

"இட்லியும் இட்டாலியும் சேர்ந்து அரசைக் கவிழ்த்தது" என்று பி.ஜே.பி. வட்டாரங்களில் அடிக்கப்படும் ஜோக். இப்போது தேர்தல் களத்தில், குறிப்பாக முலாயம் சிங்கின் சமாஜ்வாதி கட்சியில், "சோனியா மதச்சார்பற்றவர்தான். மாட்டிறைச்சியும் பன்றிக் கறியும் உண்பவர். அதனால்தான் அவரது கட்சி பாப்ரி மசூதியையும் இடித்தது அம்ரித்ஸர் தங்கக் கோவிலையும் அழித்தது" என்ற அளவிற்குப் போயிருக்கிறது.

இன்னும் இதுபோல் பல அசிங்கங்களைத் தேர்தல் களம் சந்திக்க இருக்கிறது. இந்திராகாந்தி காலத்தில் ஸி.எம். ஸ்டீஃபன் புது தில்லித் தொகுதியில் நின்றபோது, இறுதி நேரப் பிரசார யுக்தியாக அவர் மாட்டிறைச்சி தின்பவர் என்பது பயன்படுத்தப்பட்டது. ஆனால் அதிர்ஷ்டவசமாக பிரதமர் வாஜ்பாய், தாம் சோனியாவின் இத்தாலிப் பிறப்பு மற்றும் அவரின் ஹிந்தியில் தொனிக்கும் ஃபாரின் ஆக்ஸென்ட் போன்ற விஷயங்களைப் பரிகசிக்க மாட்டேன் என்று கூறி விட்டார்.

இப்போது பி.ஜே.பி. பொதுத் தேர்தல் அறிக்கை என்று கூறிவிட்ட நிலையில் பல பிரச்னைக்குரிய விஷயங்களை சத்தமில்லாமல் சௌகரியமாக நழுவ விட்டு விடும்.

அதுவும் அயோத்தி ராமர் இன்னும் பல வருடங்களுக்காகக் காக்க வைக்கப்பட்டு விடுவார் போலிருக்கிறது.

இப்போது டெல்லி அரசியல் வட்டாரங்களில் கிண்டலாகப் பேசப்படும் விஷயம் 'தனிமைப்படுத்தப்பட்ட ஜெயலலிதா'. இது ஒரு கட்சி அலுவலகத்தில் கேட்டது: "போயஸ் வன சீதை" என்ற ஒருவரை மற்றவர், "போயஸ் வனம் சரிதான்! ஆனால் வரியின் இரண்டாவது பகுதி சரியில்லை" என்று கூறிவிட்டு "வலிய வன சஞ்சாரம் செய்த சூர்ப்பனகை" என்றார்.

"வந்த வி.வி.ஐ.பிக்களின் கார்களின் அணி வகுப்பென்ன, காத்துக் கிடந்த மீடியாக்காரர்கள் கூட்டமென்ன, பொழுது விடிந்து சாய்ந்தால் அருள் நோக்கித் தெற்கு பார்த்துத் தவமிருந்த பிரதமரென்ன என்று எத்தனை "என்ன"கள்... அத்தனையும் எங்கே இப்போது?" என்றார் மூன்றாமவர்.

அதுவும் இப்போது முன்னாள் அதி.மு.க. எம்.பிக்கள், 'சுவாமி வசவு' பாடிக் கொண்டிருக்கின்றனர். பாராளுமன்றக் கலைப்பறிவிப்பன்று ஜெயலலிதா தங்கியிருந்த ஐந்து நட்சத்திர மௌர்யா ஷெரிட்டனில் பதினாறாம் தளத்தில் 18 அ.தி.மு.க. எம்.பிக்களும் சமர்த்தாக சன் டீ.வி.யில் ஞாயிறு மாலைத் திரைப்படம் மகாநதி பார்த்துக் கொண்டிருந்தனர்.

குழுமியிருந்த ஒரு சில பத்திரிகையாளர்கள் தேசத்தின் இரு முக்கிய அதிகார மையங்களில் நடந்ததைக் கூற அதிர்ந்து,

முதலில் விழித்துக் கொண்டவர் அ.தி.மு.க. பாராளுமன்றக் கட்சித் தலைவர் சேடப்பட்டி முத்தையா. "சூழ்நிலையை உன்னிப்பாக கவனித்து வருகிறோம்" என்று சமாளித்துக் கொண்டு ஏதோ சொல்ல வந்தவர், பிற உறுப்பினர்கள் சூழ்ந்து கொண்டவுடன், "எதுவாக இருந்தாலும் எங்கள் தலைவியே முடிவு செய்வார்... அவர்தான் எங்களுக்கு எல்லாமே" என்றார்.

சில நொடிகளில் ''தயவு செய்து பெயரைப் போடாதீர்கள்'' என்று புலம்ப ஆரம்பித்த ரத்தத்தின் ரத்தங்களின் ஆவேசம் சு.சாமியின் மீது திரும்பியது. "அந்தப் பாப்பாரப் பய பேச்சை மேடம் கேக்கக் கூடாதுன்னு நினைச்சோம்... பதிமூணு மாசமா அம்மாவுக்கு ஆசை காட்டி மோசம் பண்ணிட்டான்... ஒழுங்காகக் கணக்குப் போடாம தலைல குண்டைத் தூக்கிப் போட்டுட்டான்... அவன் நமக்கு இனிமே வேண்டாத ஒரு சுமை'' என்ற ரீதியில் கதறினார்கள்.

தமது வழக்குகள் நினைவு வர, ஜெயலலிதா கதி கலங்கியது, பீதி கலந்த அவர் முகத்தில் தெளிவாகத் தெரிந்தது என்றார் ஒருவர்.

இப்போது காங்கிரஸ் வட்டாரங்களில் "எங்களணி சுவாமி அர்ஜுன் சிங்" என்று பேசப்படுகிறது. சோனியா கட்சி செயற்குழுக் கூட்டத்தில் இவர் கடுமையாக விமர்சிக்கப்பட்டார். ஷரத்பவார் இப்போது கூறுவது, "என் நிலைப்பாடு சரியென்று இப்போது உணரப்படுகிறது. இந்தக் குழப்பங்களுக்குக் காரணம் என்னை நம்பாமல் சோனியா அர்ஜுனை நம்பியது. ஒப்புக் கொள்ளப்பட்ட என் பழைய திட்டப்படி நவம்பர் வரை பி.ஜே.பி அரசைக் கவிழ்க்காமல் இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்... வரும் சில மாநிலத் தேர்தல்களிலும் வென்றிருப்போம், மத்தியிலும் ஆட்சிக்கு வந்திருப்போம்."

இப்போது காங்கிரஸ் அணியினர் கணிப்பது நடந்து விட்ட அரசியல் பிளவில் (polarisation of politics) பயனடைந்திருப்பது பி.ஜே.பி.தான். இடதுசாரிகளிடம் நெருங்கி விட்டது, சோனியா கட்சிக்கு இப்போதைய ஆறுதல். அதேபோல "வாஜ்பேயி கவிழ்ந்து அவருக்கு ஒரு அனுதாப அலை வந்தது போல், சோனியா வஞ்சிக்கப்பட்டு விட்டார் என்று அவருக்கும் அதற்குச் சமமான அனுதாப அலை வரும்" என்றும் கட்சி கணிக்கிறது.

— டெல்லி வெங்கட்



''டாக்டர்...! எட்டாம் நம்பர் பேஷண்ட் என்னிடம் ரொம்பவும் ஜொள்ளு விடுகிறார்!''

''அதுக்கும் பில் உண்டுன்னு சொல்லுங்க... சரியாயிடும்!''

— அரவக்குறிச்சிப்பட்டி
எம். அசோக்ராஜா



''இரவல் வாங்கிட்டுப் போன இரண்டரைப் பவுன் சங்கிலியைத் தொலைச்சுட்டேன்னு வந்து சொல்றியே?''

''இரண்டரைப் பவுனா?... இரண்டு பவுனுக்கே அரை கிராம் குறைவாயிருக்குன்னு அடகுக் கடையில் சொன்னானே!''

— உடுமலை பொன்னுசாமி



"நம்ம கோபாலு சிக்கனமா இருந்துட்டுப் போகட்டும். அதுக்காக எழுதற எழுத்திலே கூட சிக்கனத்தைக் கடைப்பிடிக்கணுமா?"

"அப்படி என்ன எழுதினான்?"

''இட்லியை 'ட்லி' என்றும் இங்கு என்பதை 'ங்கு' என்றும் எழுதறான்!''

— ஆர். ஜெயந்தி

பள்ளி மாணவிகள், பள்ளிக்குள் கிடைத்தற்கரிய மூலிகைகளை வளர்க்கிறார்கள் என்றால் நம்ப முடிகிறதா? ஒன்றல்ல, இரண்டல்ல.... தொண்ணூற்றியாறு வகை மூலிகைகள். அதனதன் நோய் தீர்க்கும் குணநலன்கள் பற்றியெல்லாம் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்து கடந்த நான்கு ஆண்டுகளாக 'தேசியக் குழந்தைகள் அறிவியல் காங்கிரஸ் விருது' வாங்கி வருகிறார்கள்.



"இது சோற்றுக் கற்றாழை. கண் எரிச்சல், தலைவலி, இருமல், மலச்சிக்கலைப் போக்கும்."

"இத பாருங்க. பெரு நெருஞ்சி. தண்ணியில போட்டதும், தண்ணி பசை போல் கெட்டியாயிடுது. இது நாங்க கண்டுபிடிச்சது. இது ஏன் இப்படி? அதுதான் ஆய்வு செஞ்சு வர்றோம்."

"இது கற்றாமரை, திப்பிலி, கற்சோளம், முப்பிரண்டை..... இதெல்லாம் இங்கே தவிர வேற எங்கும் பாக்கறது ரொம்பக் கஷ்டம்."

– திருப்பூர் செய்லா பாய் நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் எஸ். நந்தினிதான் இந்த மூலிகை வளர்ப்புக்கும், ஆராய்ச்சிக்கும் டீம் லீடர். அவருடன் மாணவிகள் கோமதி, மாலதி, மைதிலி, மேரி கிறிஸ்டினா. இவர்கள் யாரிடம் கேட்டாலும் மூலிகைகள் பற்றின தகவல்கள் பொங்கிப் பிரவாகமெடுக்கின்றன.



• மூலிகை வளர்க்கும் மாணவிகள் - ஆசிரியைகளுடன்....

பள்ளியில் நுழைந்தவுடன் ஏராளமாய் வரவேற்பது மரங்கள். இடது பக்கம் திரும்பினால் பள்ளியின் ஓரமாய் நீளும் மூலிகைத் தோட்டம்.

காலப்போக்கில் மூலிகைகள் எல்லாம் அரிதாகி வருவதால் இவற்றையெல்லாம் கிராமப்புறங்களுக்குக் கொண்டு போகத் திட்டமிட்டுள்ளனராம் மாணவிகள். கிராம மக்களிடம் இதன் மருத்துவக் குணங்களை எடுத்துக் கூறி, 'நகர மருத்துவத்தை நாடி, ஓடி வரும் அவர்களின் போக்கை மாற்றியமைக்கவும், முயற்சி எடுக்கப் போகிறார்களாம். இதுபற்றி இப்பள்ளியின் தலைமை ஆசிரியரிடம் பேசினோம்.

"பல்வேறு வியாதிகளையும் குணப்படுத்தும் மூலிகைகள் மக்கள் பயன்படுத்தாததால் அழிந்து கொண்டிருக்கின்றன. அந்த அபாயத்தைத் தடுக்க, அதன் முக்கியத்துவம் மறந்து போன மக்களுக்கு நினைவூட்டி, அவர்களுக்குண்டான வைத்தியத்தை அவர்களே செய்யத்தக்க வகையில் மாணவிகளுக்குப் பயிற்சி அளிக்க உள்ளோம். இது ஆரம்ப நிலைதான். இதற்காக சித்த வைத்திய டாக்டர்களுடன் பேசியுள்ளோம். இந்தக் கோடை விடுமுறையில் இதில் ஆர்வமுள்ள



* மூலிகைகள், மரங்கள் வளர்ப்பதில் ஆர்வம் காட்டும் மாணவிகள்

ஏராளமான மாணவிகள் இந்த மூலிகை வளர்ப்பில் ஆர்வம் கொண்டு போட்டி போட்டு வருகின்றனராம். ஆனால் அனுமதி ஐவருக்கு மட்டும்தானாம். அந்த ஐந்து பேரைத் தேர்ந்தெடுக்கவே பெரும் பிரயத்தனப்பட வேண்டியதிருக்கிறதாம். முதலில் குழுக்களாகப் பிரித்து, அது சம்பந்தமாய்க் கட்டுரைகள் சமர்ப்பிக்கச் சொல்லி, புது வகை மூலிகைகள் தேடச் சொல்லி...

மாணவிகள் வளர்க்கும் மூலிகைச் செடிகள்!

எல்லாவற்றிலும் தேர்ந்த மாணவிகளே இறுதிக் குழுவாக வடிவம் கொள்கின்றனர்.

இம் மாணவிகள் மூலிகை வளர்த்து தேசிய அளவில் விருது வாங்குவதோடும், கிராம மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதோடும் நிறுத்திக் கொள்வதில்லை. மூலிகை வைத்தியர்கள் மாநாட்டில், மூலிகைகள் கண்காட்சிகளிலெல்லாம் தாங்கள் கண்டுபிடித்த புது மூலிகைகளை வைத்து விளக்கவுரை கொடுக்கின்றனர். அதிலும் ஏராளமாய்ப் பரிசுகள் பெற்றுள்ளனராம்.

இந்த மாணவிகள் மரங்கள், மூலிகை வளர்ப்போடு நிறுத்திக் கொள்ளவில்லை. திரும்பின பக்கமெல்லாம் சுத்தம், சுகாதாரம் பேணுவதில் மிகக் கண்டிப்புடன் செயல்படுகிறார்கள்.

இந்தப் பள்ளிக்கு இன்னொரு சிறப்பு, இப்பள்ளி பற்றிய 'வெப்சைட்'டை நீங்கள் இன்டர்நெட்டில் பார்க்கலாம். மாணவிகளும் இன்டர்நெட் பார்க்கும் வசதி கொண்டது இப் பள்ளி.

மாணவிகளை ஆரணியில் உள்ள சித்த வைத்திய பயிற்சி மையத்தில் பயிற்சி பெற அழைத்துப் போக உள்ளோம். இதன் மூலம் கிராமங்கள் தோறும் சென்று மாணவிகள் அம் மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்த ஏற்பாடு செய்து வருகிறோம்!'' என்கிறார் தலைமை ஆசிரியை திருமதி ஜரினா பானு பேகம்.

ஐயாயிரம் பேர் படிக்கும் இப்பள்ளியில்

சந்திப்பு, கட்டுரை : **கேயெஸ்வி**

சௌத் ஆஃப்ரிக்கா - இந்திய அணிகள் விளையாடின ஒன் டே மேட்ச். கல்கத்தா ஈடன் கார்டன் கிரவுண்ட்ல 90,000 பேர் ஹார்ட் பீட் எகிற, காத்துக்கிட்டிருக்கற லாஸ்ட் ஓவர். ஆறு பால்ல ஆறு ரன் அடிச்சா தென்னாப்பிரிக்கா வின்!

லாஸ்ட் ஓவர் யார் போடறது? ஸ்ரீநாத்துக்கும் கபிலுக்கும் ரெண்டு ரெண்டு ஓவர் இருக்கு. சவுத் ஆஃப்ரிக்கன் பிளேயர்ஸ் சரியான எமன்ஸ்! ஒரு ஆறு ரன் அடிக்கறதா கஷ்டம்?

திமர்னு - அந்த லாஸ்ட் ஓவரை அனுபவம் அதிகமில்லாத சச்சினுக்குக் கொடுக்கறார் கேப்டன் அசார்.

ஃபர்ஸ்ட் பால்ல ஒரு ரன் அவுட் - மக்மில்லன்!

அடுத்த பால்...

அடுத்த பால்...

அடுத்த பால்...

அஞ்சு பால்ல அஞ்சு ரன்...

நாலு பால்ல மூணு ரன்...

ரெண்டு பால்ல மூணு ரன்...

ஒரு பால்ல மூணு ரன்...

At last, India won by two runs.

இது 93ல நடந்த மேட்ச். இப்ப எதுக்குன்னு கேக்கறது கிரிக்கெட் ஆசாரத்துக்கு விரோதமானது.

World cup வந்தாலும் வருது, எத்தனை புக்ஸ்! எத்தனை ஸ்பெஷல் இஷ்யுஸ்! (கல்கி உள்பட) எத்தனை போட்டிகள், பரிசுகள்!

கடைசி வரைக்கும் பதைக்கப் பதைக்க ரசிக்க வெச்ச மேட்சுகளைத் தொகுத்து, ஸ்கோர் போர்டு விஷயங்கள்லேருந்து, ஒவ்வொரு முக்கியமான கணங்கள், முடிவுகள், பிடிச்ச கேட்ச், விட்ட மாட்சனு - இப்ப நடக்கற மேட்சோட ரன்னிங் கமெண்ட்ரி மாதிரி பழைய விஷயங்களை வெச்சு ஒரு புஸ்தகம் எழுதியிருக்கார் NDTVயோட ஸ்போர்ட்ஸ் எடிட்டர் Gulu Ezekiel.

பளபளா படங்கள் இல்லாதது ஒரு குறையா கிரிக்கெட் ரசிகர்களுக்குத் தெரியலாம். But ஒரு துப்பறியும் நாவலோட சுவாரஸ்யத்தை, இந்த Great Oneday Internationlsல கொண்டு வந்திருக்கார்.

இந்த புஸ்தகம் அடுத்த ஒரு மாசத்துக்குள்ள அம்பதாயிரம் போயிடும்னு பேசிக்கறாங்க. விலைதான் பயமுறுத்துது. எண்பது ரூபா. (ஓரியண்ட் லாங்மன் வெளியீடு)

இதே மாதிரி 'டைம்ஸ் அப் இந்தியா', 'இந்தியா டுடே' பத்திரிகைகளும் கிரிக்கெட் பத்தி புக்ஸ் போட்டிருக்காங்க. டைம்ஸ் அப் இந்தியா புஸ்கத்திலுள்ள படங்கள் சூப்பரா பிரிண்ட் ஆயிருக்கு. விலைதான் 150 ரூபா!



• • •

வைதேகிகளின் கவனத்துக்கு

வைதேகியை என்
நண்பனுக்குப் பிடிக்கும்-
எனில்

வைதேகியைப் பிடிக்கிறதா- உங்களுக்கு?

வைதேகி என்ற பெயரை மட்டுமல்ல.
வைதேகி என்ற எந்தப் பெண்ணையும்
அவனுக்குத் தெரியாதெனினும்
வைதேகி என்ற பெண்ணெல்லாம்
அவனுக்கு மானசீக சிநேகிதிகள்
டெலிபோன் டைரக்டரியில்
மொத்தம்
இருநூற்றிப் பத்தொன்பது வைதேகிகள்
யார் ஒருவருக்கும் என்
நண்பனைத் தெரியாது.
அதனாலென்ன என்றவன் சொல்கிறான்:
'வைதேகியைத் தெரிந்திருப்பது
அவசியமில்லை;
சொல்லப் போனால்
தெரியாமலிருப்பதால்தான்
எனக்கு
வைதேகியைப் பிடிக்கிறது!'

– மெட்ராஸ்ல வெயில் 105 டிகிரிங்கறதை சிம்பாலிக்கா இந்தக் கவிதை மூலம் வெளிப்படுத்தறதுல (எழுதினது சத்தியமா நான் இல்லை. என் ப்ரெண்டு கருப்பண்ணசாமி.) மகிழ்ச்சியடைகிறேன்.

இதை கவிஞர் யுகபாரதி கிட்ட காண்பிச்சி, நிஜமா இது கவிதைதானான்னு கேட்டேன். No doubtன்னுட்டார்.

"அந்த டெலிபோன் டைரக்டரி விஷயம் ஒரு அடிஷனல் முயற்சி இல்லையா – எழுதியதைத் தவிர?" ன்னு கேட்டார்.

எழுதின ஆசாமி நிஜமா டைரக்டரில எண்ணிப் பார்த்திருப்பாரான்னு டவுட்டா இருக்கேன்னேன்.

''அதனால பரவாயில்லை. ரீடர்ஸ் எண்ணிப் பார்த்திடுவாங்க. – நிஜமா கவிதை பிடிச்சிருந்தா''ங்கறார்!

நவீன கவிதைல இப்ப இந்த மாதிரி ரகங்கள் அங்கங்க பல வர ஆரம்பிச்சிருக்கு. குப்புசாமி, கோயிந்தசாமி, முனியம்மா, கன்னியப்பன்னு பேரை மட்டும் மாத்திப் போட்டு இதையே ரீப்ரிண்ட் பண்ணாத பட்சத்துல, நம்ம மன்ற உறுப்பினர்களும் கொஞ்சம் ட்ரை பண்ணிப் பார்க்கலாம். (கண்டிப்பாக வெயில் சீஸன் வரை மட்டும்)

• • •

கோவிந்தம்மாள்னு (70) ஒரு பூக்காரக் கிழவியைக் கோயம்பேடு போற பஸ்ல மீட் பண்ணேன். தாம்பரம் பஸ் ஸ்டாண்டுல பூக் கட்டி விக்கற ஜோலி. தினமும் கோயம்பேடு போய் பூ வாங்கிட்டு வந்து, கட்டி வித்தா, ஒரு நாளைக்கு நிகர லாபம் பதினைஞ்சு ரூபான்னு சொன்னாங்க.

ரொம்ப நாள் முன்னாடி ஹஸ்பெண்ட் காலமாகி, வாய் பேச முடியாத ஒரு பெண்ணையும் புருஷன் வீட்டுல வாழ முடியாம திரும்பி வந்த ஒரு பெண்ணையும் துணையா வெச்சிக்கிட்டு வாழ்ந்து வர்றாங்க.

பதினைஞ்சு ரூபா தினசரி வருமானத்தை வெச்சிக்கிட்டு மூணு பேர் எப்படிச் சாப்பிட்டுப் பிழைக்கறது? கஷ்ட ஜீவனம் தான்.


படிப்பும் இல்லாம, வருமானமும் இல்லாம, வயசும் ஆகிக் கஷ்டப்படற இது மாதிரி எத்தனையோ லட்சம் பேர் நாடு முழுக்க இருப்பாங்க. (அட, ஏழை நாடுப்பா.)

இவங்களுக்கு முதியோர் பென்ஷன் அது இதுன்னு கவர்மெண்ட் காட்ற பட்ஜெட் சலுகைகள் பத்தி பொதுவா எதுவும் தெரியறதில்லை; தெரிஞ்சாலும் பிரயோஜனமில்லை.

கோவிந்தம்மாள்கிட்ட, அவங்க புருஷன் இறந்ததுக்கு டெத் சர்டிபிகேட் இருக்கா, ரேஷன் கார்டு இருக்கா, வாக்காளர் பட்டியல்ல பேர் இருக்கா – எதைக் கேட்டாலும் இல்லை அல்லது தெரியாதுங்கறதுதான் பதில்.

உண்மையிலேயே கஷ்டப்படறவங்க, வந்து கேக்கணும்னு காத்திருக்காம, அவங்களைத் தேடி அரசுத் திட்டங்கள் போற காலம் எப்ப வரும்னு அக்னி சர்மாவைக் கேட்டுச் சொல்லுங்க.

— சுமி



• கோபத்தில் சீன இளைஞர்கள்!

சீனாவுக்குக் கோபம் ஏன்?

''இது ஒரு போர்க்குற்றம். தூதரக வரலாற்றில் கரும்புள்ளி. தூதரக உறவுகள் தொடர்பாக வியன்னா மாநாட்டின் இயற்றப்பட்ட விதிமுறைகளுக்கு முரணானது'' என்று ஐ-நா. பாதுகாப்புக் குழுவில் சீனா முழங்கியுள்ளது.

''எங்கள் வாழ்நாளில் இவ்வளவு பெரிய ஊர்வலத்தைக் கண்டதேயில்லை. எந்தவித ஊர்வலம் நடைபெற்றாலும் எங்கள் அரசுக்குப் பிடிக்காது. அடக்குமுறையைக் கடைப்பிடிக்கும். ஆனால் பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் கலந்துகொண்ட இந்த எதிர்ப்பு ஊர்வலத்தைத் தடுக்க போலீஸார் எந்த முயற்சியும் எடுக்கவில்லை'' என்று வியக்கிறார்கள் பெய்ஜிங்கில் வசிக்கும் மூத்த குடிமக்கள்.

இந்த ஊர்வலத்தின்போது செங்டு பகுதியிலுள்ள அமெரிக்க துணை தூதரகத்திற்கு மாணவர்கள் தீ வைத்தனர். அமெரிக்கக் கொடி எரிக்கப்பட்டது. பெய்ஜிங்கில் உள்ள அத்தனை தூதரகங்களுக்கும், பள்ளிக்கூடங்களுக்கும் விடுமுறை.

யுகோஸ்லாவியாவின் தலைநகர் பெல்கிரேடிலுள்ள சீனத் தூதரகம் மீது நேடோ போர் விமானங்கள் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதன் எதிரொலிதான் மேற்கூறிய எதிர்ப்பு. ஓரளவு சீரடைந்து வந்த அமெரிக்க – சீன உறவு மீண்டும் இதனால் கசப்படைந்துள்ளது.

சீன தூதரகத் தாக்குதல் திட்டமிட்டு நடத்தப்பட்டிருக்க வாய்ப்பு இல்லைதான். ஆனால் 'இந்தத் தாக்குதலை நடத்தியது நேட்டோ போர் விமானங்கள்தானா என்பது சந்தேகத்திற்குரிய விஷயம்' என்றும், பிறகு 'இது ஒரு தற்செயலான விபத்து; அவ்வளவே!' என்றும் அமெரிக்க அரசு அலட்சியமாக அறிவித்ததுதான் சீன அரசைக் கொதிக்கச் செய்து விட்டது.

நேடோ அமைப்பு என்பது 1949ல் உருவான ஒன்று. சோவியத் சக்தியிலிருந்து மேற்கத்திய நாடுகளைக் காக்க உருவான இந்த அமைப்பில் பெல்ஜியம், கனடா, டென்மார்க், பிரான்ஸ், அயர்லாந்து, இத்தாலி, லக்ஸம்பர்க், நெதர்லாந்து, நார்வே, போர்ச்சுகல், பிரிட்டன், அமெரிக்கா ஆகியவை தொடக்க கால உறுப்பினர்கள். பிறகு கிரீஸ், துருக்கி, மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகளும் சேர்ந்துகொண்டன.

சென்ற ஆண்டு ஆகஸ்டு மாதம் கென்யா, டான்சேனியா ஆகிய ஆப்பிரிக்க நாடுகளின் தலைநகர்களில் உள்ள அமெரிக்க தூதரகங்களின் மீது குண்டு வெடிப்புகள் நடந்தபோது 'தீவிரவாதம் உலகில் அதிகரித்து விட்டது. இது முறியடிக்கப்பட வேண்டிய விஷயம்' என்று கொதித்து அறிக்கை விட்டது அமெரிக்கா. இதற்குக் காரணமாகக் கருதப்பட்ட சௌதி அரேபியா மற்றும் ஆப்கானிஸ்தான் நாடுகளின் ஆதரவு கொண்ட பின்லேடனைப் பிடிக்கக் கடும் முயற்சி எடுத்து வருகிறது.

ஆனால் 'மாமியார் உடைத்தால் மண்கலம். மருமகள் உடைத்தால் பொன்கலம்' பழமொழி போல தான் முக்கியப் பங்கு வகிக்கும் நேட்டோ அமைப்பைப் பயன்படுத்தி அமெரிக்காவே இப்படி பொறுப்பில்லாமல் செயல்பட்டிருப்பதோடு, தனது செயலுக்கு வருத்தப்படாமல், விட்டேத்தியாகப் பதில் சொன்னதும்தான் சீனாவின் கோபத்தை மட்டுமன்றி, உலக நாடுகளின் கோபத்தையும் கிளறி விட்டு விட்டது!

— அருண் சரண்யா



அழிக்கப்படும் தவளைகள்; அச்சுறுத்தும் மலேரியா!

சிங்கப்பூர், ஹாங்காங், தாய்லாந்து நாடுகளின் 'சூப்பர் மார்க்கெட்டு'களுக்குச் சென்று வந்தவர்கள், அங்கு தவளைக் கால்கள் 'பாக்கெட்' செய்யப்பட்டு விலை குறிப்பிடப்பட்டிருப்பதைப் பார்த்திருப்பார்கள்! 'தவளைக்கால்' சூப் அந்நாட்டுச் சீன வம்சாவழியினரிடையே பிரசித்தம்! இதனால் ஆசிய நாடுகளில் மட்டும் ஒவ்வொரு வருடமும் பல லட்சம் தவளைகள் கொல்லப்படுகின்றன.

பிரச்னை அங்குதான் ஆரம்பமாகிறது?!

இப்போது, ஆசிய நாடுகளிடையே வெகு வேகமாகப் பரவி வரும் 'மலேரியா' நோய்க்கும் – இந்தத் 'தவளை' இன அழிப்புக்கும் நெருங்கிய தொடர்பிருக்கிறது.

இந் நாடுகளில் உள்ள காடுகளில் ஏராளமாக உற்பத்தியாகும் – மலேரியா நோய்க்குக் காரணமாக விளங்கும் கொசுக்களை இந்தத் தவளைகள்தான் சாப்பிட்டு ஏப்பம் விடுகின்றன. இவற்றுக்கு கொசுக்கள் என்றால் உயிராம்!

இவ்வாறு பல கோடி கொசுக்களின் உயிர்களைப் பலி வாங்க வந்த தவளைகளின் உயிரை, மனிதன் விலை பேச ஆரம்பிக்கவே, மீண்டும் மலேரியா நோய் உயிர்ப்பிக்கப்பட்டு விட்டது என்று கவலைப்படுகிறார்கள் உலக சுகாதாரத் துறையினர். அவர்களோடு சேர்ந்து, வன விலங்குகளின் பாதுகாவலர்களும் கவலைப்படுகின்றனர்.

இன்று, உலக நாடுகள் மத்தியில் வர்த்தக ரீதியாக விரிவடைந்து வரும் துறைகளில், வனவிலங்குகள், தாவரங்கள் மற்றும் வன விலங்கின உற்பத்திப் பொருள்கள் என்பன முக்கிய இடம் வகிக்கின்றன.

ஒவ்வோர் ஆண்டும், ஏறத்தாழ பதினேழு பில்லியன் (1700 கோடி) அமெரிக்க டாலர் மதிப்புக்கு இவ் வர்த்தகம் நடைபெற்று வருகிறது. இதில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு – அதாவது ஆண்டொன்றுக்கு 600 கோடி டாலர் வர்த்தகம் சட்ட விரோதமாக நடைபெற்று வருவது!

தந்தங்களுக்காக மட்டும், வருடத்தில் 75,000 ஆப்பிரிக்க யானைகள் அழிக்கப்பட்டு வருகின்றன. ஆப்பிரிக்க காண்டாமிருகத்தின் கொம்பு ஒன்று 15,000 அமெரிக்க டாலர்வரை விலை போகிறது. ஆசிய காண்டாமிருகத்தின் கொம்பு 16,000 அமெரிக்க டாலர்களாம்! ஜப்பானில், சிறுத்தையின் தோல் 120,000 அமெரிக்க டாலர் வரை விற்கப்படுகிறது என்பது ஆச்சரியம் மட்டுமல்ல, அதிர்ச்சியானதும்கூட.


இதுபோன்ற வர்த்தகம் உலகிலேயே மிகுந்த வரவேற்பைப் பெற்றிருப்பது வளர்ந்த ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்கா, ஜப்பான் ஆகிய இடங்களில்!

இந்த வர்த்தகம் காரணமாக, இன்றுவரை சுமார் 270க்கும் அதிக எண்ணிக்கையில் விலங்கு மற்றும் தாவர இனங்கள் முற்றாக அழிந்து போய் விட்டதாகவும் மேலும் 2500 விலங்கினங்களும்; 26,000 தாவர வகைகளும் அழிவின் விளிம்புக்குத் தள்ளப்பட்டு வருவதாயும் சொல்லப்படுகிறது.

பணக்கார நாடுகள் புதிய புதிய நாகரிக மற்றும் ஆடம்பரப் பொருள்களின் மீது தமது மோகத்தை வளர்த்து வருவதால் – மறுபுறத்தில் தமது அத்தியாவசிய தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு, வறிய நாடுகள் தமது நாட்டின் வளங்களைப் பணத்திற்காகக் காவு கொடுத்து வருகின்றன.

தவளைகளைக் கொல்வதால் மலேரியாவுக்குப் புதுவாழ்வு கொடுப்பது போல் ஒவ்வோர் உயிரினத்தின் அழிவும் மனிதனுக்குப் புதுப் புது பிரச்னைகளை உருவாக்கும் அல்லவா! பணம் கண்ணை மறைக்கும் போது வேறெதுவும் தெரிவதில்லை!

— சர்வசித்தன்



சிவபெருமானை எந்தெந்த மலர்களினால்

பூஜித்தால் என்னென்ன பலன்கள் கிடைக்கும்

விரும்பும் பலன்	எந்த மலரால் அர்ச்சிக்க வேண்டும்
1. பெருஞ் செல்வம் விரும்புவோன்	– – – தாமரை மலர், வில்வம், சதபத்திரம் சங்கபுஷ்பம் ஆகியவற்றால் லட்சக்கணக்கில் பூஜித்தால் சந்தேகமில்லாமல் பெருஞ்செல்வத்தைப் பெறுவான்.
2. இராஜபோகத்தை விரும்புவோன்	– – – பழுதில்லாத பத்து கோடி மலர்களால் பார்த்திவ் லிங்கத்தைப் பூஜிக்க வேண்டும். அல்லது பத்து கோடி வில்வ தளத்தை சுகந்த சந்தனத்தில் தோய்த்துப் பூஜிக்க வேண்டும். இதற்கு தாமரை மலர்கள் அல்லது சங்க புஷ்பங்கள் பூஜிக்கத்தக்கவை. பிறகு தூபதீபன நைவேத்ய அர்கிய, ஆரார்திக் பிரதக்ஷிணை, நமஸ்கார, க்ஷதமாபணவிஸர்ஜனத் முதலியவற்றைச் செய்தால் இஷ்ட போகமும் ராஜரீகமும் உலகநாயகரான சிவபெருமான் திருவருளால் கிடைக்கும்.
3. பிரதானித்துவத்தை விரும்புவோன்	– – – ஐந்து கோடி மலர்களாலும்
4. சிறையிலிருந்து நீங்க விரும்புவோன்	– – – லக்ஷம் புஷ்பங்களாலும்
5. நோய் நீங்க விரும்புவோன்	– – – ஐம்பதாயிரம் மலர்களாலும்
6. அழகான மங்கையை மணம் செய்ய விரும்புவோன்	– – – இருபத்து ஐயாயிரம் மலர்களாலும்
7. கல்வியில் விருப்பம் கொண்டவன்	– – – பன்னிராயிரத்து ஐநூறு மலர்களாலும் பூஜிக்க வேண்டும்.
8. கீர்த்தியடைய வேண்டியவர்கள்	– – – பதினாயிரம் மலர்களாலும்
9. முக்தி வேண்டியவன்	– – – ஐந்து கோடி மலர்களாலும்
10. ஞானம் வேண்டியவன்	– – – கோடி மலர்களாலும் அர்ச்சனை செய்ய வேண்டும்.

விரும்பும் பலன் எந்த மலரால் அர்ச்சிக்க வேண்டும்

11. சிவபெருமான் பிரத்தி யட்சமாக வேண்டியவன்	— — —	அரைக் கோடி மலர்களால் அர்ச்சித்து மிருத்யுஞ்சய மந்திரத்தை ஐந்து லக்ஷம் முறை உரு ஜபிக்க வேண்டும்.
12. தேகத் தூய்மையை விரும்புவோன்	— — —	லக்ஷ மலர்களால் அர்ச்சிக்க வேண்டும்.
13. ஜன்மாந்திர ஞானம் விரும்புவோன்	— — —	இரண்டு லக்ஷம் மலர்களால் அர்ச்சிக்க வேண்டும்.
14. கர்ம நாசனம் வேண்டுபவன்	— — —	மூன்று லக்ஷம் மலர்களால் அர்ச்சிக்க வேண்டும்.
15. ஸவ்பதை தரிசனம் வேண்டுபவன்	— — —	நான்கு லட்சம் மலர்களால் அர்ச்சிக்க வேண்டும்.
16. தீர்க்காயுளை விரும்புவோன்	— — —	லட்சம் அருகினாலும்
17. புத்திரப்பேற்றை விரும்புவோன்	— — —	லட்சம் கருவூமத்தையாலும்
18. புகழை விரும்புபவன்	— — —	லட்சம் அகத்திப் பூவினாலும்
19. சித்தி முகத்தினை வேண்டியவன்	— — —	லட்சம் துளசியாலும்
20. சத்துருஷ்யம் வேண்டியவன்	— — —	லட்சம் லட்சம் வெள்ளெருக்க மலர்களாலும்
21. ரோக நீக்கம் விரும்பியவன்	— — —	மாதுளை மலர், உற்பல மலர், சப்பாத்தி மலர்களாலும், கரவீர மலர்களாலும்
22. விஷ்ணுவின் அனுக் கிரகத்தை வேண்டுபவன்	— — —	அதஸிப் பூவினாலும் முக்திகாமி வன்னியினாலும்
23. தானியசம்பத்தை வேண்டியவன்	— — —	மலை மல்லியாலும்
24. வஸ்திர சம்பத்தை வேண்டியவன்	— — —	கோங்க மலராலும்
25. மனநிர்மலத்தை வேண்டுபவன்	— — —	நிர்க்குண்டியாலும் பூஜிக்க வேண்டும்.

சிவப் பிரீதியான மலர்கள் கிடைக்காவிட்டால் இதர மலர்களால் பூஜிக்கலாம்.

எந்த மலர்களால் சிவபெருமானை பூஜிக்கக் கூடாது.

சண்பகம், தாழை இவ்விரண்டு மலர்களால் சிவபெருமானை பூஜிக்கக் கூடாது

— சிவமஹாபுராணம்

காளி கேட்காத பலி

பன்னிரெண்டு வருடம் கழித்து நான், பிறந்து வளர்ந்து ஆளான இந்த ஊருக்கு வருகிறேன். வேலையின்மை என்னும் கொடிய அரக்கன் என்னை முழங்காலிலடித்துத் துரத்த, பட்டச் சான்றிதழ்களை அடுக்கி எடுத்துக் கொண்டு பிழைப்பு தேடிப் பட்டணம் போன நான், பன்னிரெண்டு வருடம் கழித்து இன்று என் சொந்த மண்ணை மிதிக்கிறேன். அதன் வாசத்தை நுகர்கிறேன். காரணம் புரிபடாத ஓர் அந்நியோன்யம் மனத்தில் கவிழ்கிறது. அது அடிவயிற்று நரம்பைச் சுண்டி இழுக்கிறது.

வெறுங்காலால் மண்ணைத் தேய்த்துப் பார்த்தேன். நெடிதாய் வளர்ந்திருந்த கட்டடங்களை உவகை பொங்க அண்ணாந்து பார்த்தேன். ஓட்டுக் கட்டடமாயும் கூரைக் கொட்டகையாயும் இருந்த கடைகளும் கட்டடங்களும் மூன்று நான்கு மாடிகளாய் உயர்ந்து நிற்கின்றன. வண்ணக் குழல் விளக்குகள் அணி செய்ய இரண்டு பக்கமும் மண்டிக் கிடந்த கடைகள் 'உள்ளே வா... உள்ளே வா...' என்று இரு கை அணைத்து அழைத்தன.

பெருமிதத்தோடு நடந்து சென்ற நான் சற்று தூரத்தில் ஒரு கட்டடம் சாலையை அடைத்துக் கொண்டு நடுவில் கட்டப்பட்டிருப்பதைப் பார்த்து மெலிதாய் அதிர்ந்தேன். விழி சுருக்கிப் பார்த்தபோது அது ஒரு கோவில் மாதிரி தெரிந்தது. சாலை நடுவில் கோயிலா... எனக்கு ஆச்சரியம் மேலிட்டது. எந்த மடையன் இங்கு இத்தனை நடுவில் ஒரு கோயில் கட்டினான் என்று எண்ணிப் பார்த்தபோது, எரிச்சல் மிஞ்சியது.

மொத்தமே பதினைந்தடி அகலமுள்ள சாலை அது. அதில் இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் தலா இரண்டடி விட்டு விட்டு மீதிப் பதினொரு அடி அகலத்தில் அந்தக் கோயில் கட்டப்பட்டிருந்தது. சைக்கிள்களும், டூ வீலர்களும் மெதுவாய் வந்து இடிபடாமல் மெல்ல உருட்டிக் கொண்டு அந்தத் தடை கடந்து சென்று கொண்டிருந்தன. நான்கு சக்கர வாகனங்கள்... மூச். சுத்தமாய் செல்ல முடியாத நிலைமை. ஊருக்குள் டாக்ஸியோ வேனோ போக வேண்டுமென்றால் ஒரு கிலோ மீட்டர் தள்ளி சுற்றுப் பாதையில்தான் போக வேண்டும்.

எனக்கு என் ஊர் மக்கள் மீதே கோபம் கொப்பளித்தது. ரோட்டுக்கு இத்தனை நடுவில் ஒரு கோயில் கட்ட இவர்கள் ஏன் அனுமதித்தார்கள்? அந்த வழியாய்ப் பயணம் செய்வோருக்கு இது எவ்வளவு இடைஞ்சல்? என்று யோசித்துக் கொண்டே நான் முன்னே சென்று அந்தக் கோயிலின் சாமியைப் பார்த்தபோது அதிர்ந்து போனேன்.

காளி சிலை.

காளி சிலையைப் பார்த்து நான் மிரண்டு போய் நிற்கையில் என் நினைவுகள் சரசரவென்று பின்னோக்கி நகர்ந்தன.

அந்த எங்கள் தெருவின் மத்தி, பெரிய குப்பைமேடாய்க் காட்சி அளித்தது. குப்பையை அகற்ற முனிசிபாலிடிக்கு எவ்வளவோ பெட்டிஷன்கள் எழுதியும் பலன் பூஜ்யமாகவே இருந்து வந்தன. அந்தக் குப்பைக்கு முக்கியக் காரணம் எங்கள் தெரு மக்கள்தான் என்றாலும், சீர்திருத்தத்தை யார் முதலில் ஆரம்பிப்பது, நாமா – முனிசிபாலிடியா என்பது, பூனைக்கு யார் மணி கட்டுவது என்கிற ரீதியில் தொடர்ந்து கொண்டிருந்தது. சுயக்கட்டுப்பாட்டுடன் குப்பையைக் கருத்தின்றி தூர வீசி எறியாமல் சேர்த்து வைத்து, தினமும் வரும் முனிசிபாலிடி வண்டியில் கொட்டலாம் என்கிற ஒரு சிறிய தீர்வு கூடத் தெரியாமல் தெரு மக்கள் குழம்பித் தவித்தனர். குப்பையும் அது பாட்டுக்குச் சேர்ந்து சேர்ந்து ஒரு சிறு குன்றாகியிருந்தது.


இதற்கு வெகுவாய் விசனப்பட்ட ஊர் மக்கள், கூடிப் பேசி இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தனர். ஒரு சாமி சிலையை அங்கே நிறுவி விடுவதென்ற புதிய முடிவு ஒன்று உதயமானது. ஊர்ப் பஞ்சாயத்தில் இது

பற்றிப் பேச்சு நடந்தபோதே நான் அதை உண்மையாக மறுத்தேன். இது முற்றிலும் தவறான செயல் என்று உரக்க வாதிட்டேன்.

ஒருவளை சாமி சிலை வைத்த பின்பும் அங்கே குப்பை போடப்படுவது குறையாவிட்டால், அது சாமியை அவமதித்ததாக ஆகும். அதோடு இல்லாமல் கண்ட கண்ட இடத்திலெல்லாம் சாமி சிலை வைப்பதென்பது அதன் புனிதத் தன்மையைக் குறைத்து விடாதா... அதை விடப் பெரிய விஷயம், அந்தச் சிலை ரோட்டுக்கு நடுவே நிறுவப்பட்டால், அது போக்குவரத்துக்கு எவ்வளவு பெரிய இடைஞ்சல்?

எனது நியாயமான இந்த மூன்று சந்தேகங்களும் ஊர் மக்களால் பொடிப் பொடியாய் நிர்மூலமாக்கப்பட்டன.

"சாமி சிலை வெச்ச பெறவு எவனும் குப்பை போட மாட்டான். ஒரு பயபக்தி இருக்கும்ல வேய்... அதுனால செங்கோடம் மவன் வீராச்சாமி சொல்றது இந்த விசயத்



நந்தன்

துல சரிப்பட்டு வராதுங்க. சாமி சிலை வெச்சப்புறம் ஒரு பயமும் பக்தியும் நமக்கே வந்து குப்பை போடறதை நிச்சயம் நாமளே குறைக்கத்தான் போறம்" – இது பஞ்சாயத்துக் கூட்டத்திலிருந்து ஒரு குரல்.

"எலே வீராச்சாமீ... ஐயா பெரீய்...ய தொரையாயிட்டதா இப்பமே ஒரு நெனப்பாவே. சாமி சிலை வெச்சா அதுனோட புனிதத் தன்மை கெட்ருமாம்லே. தெருவுக்குத் தெரு முக்குக்கு முக்கு சாமி சிலை வெக்கிறது நம்ம பரம்பரைப் பளக்கம்லே. நம்ப புள்ள குட்டிங்களுக்கு நம்மளப் பத்திச் சொல்றது அதுதாம்லே. நாம நாளைக்கு கட்டைல பூடுவோம். 'யோவ் இது நம்ப கோயிந்தன் வெச்ச சாமி டோய். எவ்வளவு சக்தியா வெளங்கு பாத்தியா...'ன்னு நம்ப சந்ததி நம்பளப் பத்தி உசத்தியா பேசும்" – இது மருதைத் தாத்தாவின் வாதம்.

உதவித் தலைவர் ராஜபாண்டி தன் பங்குக்கு என் மூன்றாவது சந்தேகத்தையும் உடைத்துத் தூளாக்கினார்.

"ரோட்டுக்கு இடைஞ்சலா இருக்கப் போறதா வீராச்சாமி சொல்லுதான். அது மாதிரி இல்லீங்க. நாம கட்டப் போறது கோயில் இல்லீங்க. ஒத்த சிலைதான் வெக்கப் போறோம். ஒத்த சிலை எப்படிப் போக வர்றவனுக்கு இடைஞ்சலாகும்? அதுனால வீராச்சாமிப் பய சொல்லுறது வெடலத்தனமான பேச்சாத்தான் எனக்குப் படுது. நாலெழுத்துப் படிச்சிப்பிட்டாக்க, எல்லாம் தெரிஞ்சிரும்னு நெனச்சுக்கிட்டுப் பேசுதான் அவன்."

ஏதோ ஒரு அசம்பாவிதத்துக்குத்தான் எல்லோர் அறிவும் சிதிலப்பட்டுச் சிந்திக்கிறதாய்ப் பட்டது எனக்கு. மௌனமாய் ஊரின் விதியை நொந்து கொண்டேன்.

எந்தச் சாமி வைப்பதென்ற விவாதம் பஞ்சாயத்தில் குடுபிடித்துப் பொறி பறந்தது. விதவிதமான ஆலோசனைகள். மறுப்புகள். குரலுயர்த்திய கோஷங்கள். இறுதியாய் காளி சிலை என்று முடிவாகி சாலை மத்தியில் காளி சிலை பிரதிஷ்டை செய்யப்பட்ட போதுதான் நான் வேலை தேடி வெளியூர் போக நேர்ந்தது.

அன்று அறுபட்ட இந்த ஊருடனான என் உறவு இன்று புதுப்பிக்கப்பட்ட போது, நான் காளி கோயிலுக்கு முன்னே நின்று கொண்டிருக்கிறேன். காளி சிலை, காளி கோயிலான விவரங்களை நான் ஒவ்வொன்றாய் அறிய நேர்ந்தபோது மிகவும் அதிர்ச்சியாக இருந்தது.

"சாமி சிலையைப் போய் ரோட்டுல வெச்சுருக்கீங்களே... அதை ஒரு பீடத்துல வைக்க வேணும். இல்லாட்டா இந்தப் பிரதிஷ்டை சாத்திரப்படி சுத்தமாயிரும். அப்புறம் காளி ரௌத்ரியாயிட்டான்னா அந்தக் கோபத்தை இந்த ஊர் தாங்காது."

சாஸ்திர சம்பிரதாயங்கள் அறிந்த ஒரு வெளியூர்ப் பெரியவர் சொல்ல, காளிக்கு இரண்டடி உயரத்தில் ஒரு பீடம் தயாராகியிருந்தது. காளியை பீடப் பிரதிஷ்டை செய்ய அண்டை அயலூரில் இருந்து சாஸ்திர விற்பன்னர்கள் வந்து போயிருக்கிறார்கள். பஞ்சாயத்தில் சேர்த்து வைத்திருந்த மொத்தப் பணத்திலிருந்து இந்தச் செலவு ஈடுசெய்யப்பட்டிருக்கிறது.

காளியை வெறுமே பீடத்தில் பார்த்த இசக்கியம்மன் கோயில் பூசாரிக்குப் பொறுக்கவில்லை போலும். ஒருநாள், கோயிலில் சாமியாடும் போது, தான் காளி வந்திருக்கிறேன் என்றும், எனக்கு ஒரு கோயில் கூட இல்லாமல் என்னை வெறுமனே மழையிலும் வெயிலிலும் நிற்க வைத்திருக்கிறீர்களேடா பாவிகளா... என்றும் ஊர் ஜனத்தைப் பார்த்துக் கத்தியிருக்கிறார். ஊர் ஜனத்துக்கு காளியின் சொல் 'திக்'கென்று அதிர்ச்சி தந்திருக்கிறது.



"ஆட்டத்துக்கு முன்னாடி என்ன மச்சி டீம் மொத்தமும் கூடி ஏதோ குடிக்கறாங்க?"

"தெரியாதா, டீம் ஸ்பிரிட்!"

– மாதுரி

தாங்கள் தவறு செய்து விட்டோமே என்று ஊர் மொத்தமும் இரண்டு நாள் உபவாசம் இருந்திருக்கிறது.

அடுத்த தினம் கோயில் பணி துரிதமாய்த் திட்டமிடப்பட்டு, சாலை மத்தியில் கோயில் விறுவிறுவென்று வேகமாய் வளர்ந்திருக்கிறது. அகலம் நீளம் உயரம் தீர்மானிக்கப்பட்டு சுற்றுச் சுவர் எழுப்பப்பட்டு கோபுரம் அமைக்கும் தருவாயில், கோயிலுக்குப் பிரச்னை வந்திருக்கிறது.



''தலைவருக்குக் குழந்தை மனசுன்னு எப்படிச் சொல்றீங்க?''

''சக்திமானோட தேர்தல் கூட்டணி வைச்சுக்கலாங்கிறாரே!''

— குடந்தை கே.ஆர். ரவிக்குமார்

இந்தக் கோயில் தினமும் பலர் பயணிக்கும் சாலைக்குக் குறுக்கே கட்டப்படுவதால், இரண்டடி இடைவெளி மட்டுமே ஓரத்தில் விடப்படுவதால் போக்குவரத்துக்கு கடும் இடையூறு விளைவிக்கும் என்றும், மேலும் இது முறையாக அனுமதி பெறாமல் கட்டப் படுவதாலும், இதற்கு உடனடியாய் தடை விதித்து, எழுப்பப்பட்ட சுற்றுச் சுவரை இடித்து விட உத்தரவிடுமாறும் கோரி நீதி மன்றத்தில் பொதுநல மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

அந்த மனுவை பரிசீலித்த நீதிமன்றம், கட்டப்பட்டு வருகின்ற கோயிலுக்கு இடைக்காலத் தடை விதிக்க, பிரச்னை பூதாகரமாய் வெடித்திருக்கிறது.

ஊர் மக்கள் கூடிப் பஞ்சாயத்தில் பேசியபோது, இதைக் கட்டாமல் விட்டால் பூசாரி சொல்படி தெய்வக் குத்தம் நம்ம ஊரைத் தாக்கும் என்று தீர்மானமாகி, இதற்காக இன்னுயிரை ஈந்தேனும் போராட வேண்டியது அவசியம் என்று முடிவாகியிருக்கிறது. இந்தப் போராட்டத்துக்கு வலு சேர்க்க ஊர், 'கோயில்கள் வளர்ச்சிக் கூட்டமைப்பின்' உதவியை நாட, கூட்டமைப்பு வரிந்து கட்டிக் கொண்டு களத்தில் இறங்கியிருக்கிறது.

ஊர்வலம் என்றும் உண்ணாவிரதம் என்றும் ஊர் திமிலோகப்பட்டிருக்கிறது. 'அரசே வழிபாட்டு உரிமையில் கை வைக்காதே. மீறினால் கடும் விளைவுகளைச் சந்திப்பாய்' என்பதாய்ச் சுவரொட்டிகள் ஊர் முழுக்கப் பளபளத்திருக்கின்றன.

இவ்வளவு ஊர்வல உண்ணாவிரதங்களுக்குப் பிறகும், இடைக்காலத் தடை நீக்கப்படாததால், பஸ் மறியல் போராட்டம் நடத்த கோயில்கள் வளர்ச்சிக் கூட்டமைப்பும், ஊர் மக்களும் தீர்மானித்து அதில் இறங்கியிருக்கின்றனர்.

மறியலில் ஈடுபடுவோரை விலக்க சாத்வீகமாய் முயன்ற போலீசார் தோற்றுப் போக, கல்லெறிதலும் பஸ்ஸைக் கொளுத்தலும் மிகையாகிப் போகவே போலீஸ் தடியடிப் பிரயோகம் செய்திருக்கிறது. கூட்டத்தின் கிளர்ச்சி முன்னிலும் வலுவானதாய் இருக்க, போலீஸ் வேறு வழியின்றி துப்பாக்கிச் சூடு நடத்தியிருக்கிறது. அதில் பெருமாத்தாளின் மகன் ராசு குண்டடிபட்டு இறக்கப் போக, விஷயத்தின் வீர்யம் பெரிதாகிப் போயிருக்கிறது.

மனு கொடுத்தவர் தன் மனுவை திரும்பப் பெற்றுக் கொள்ள, அரசாங்கத்துக்குச் சங்கடம் தவிர்க்கப்பட்டு, கோயில் கட்டுமானம் கண்டுகொள்ளாமல் விடப்பட்டிருக்கிறது.

பதினைந்தடி அகலச் சாலை குறுகிப் போய் இரண்டடியாய் இளைத்து நிற்க, கோயில் கம்பீரமாய் எழுந்து நின்றிருக்கிறது. காளி மிகவும் சக்தி வாய்ந்தவள் என்பதாய் ஊர் உச்சமாய்ச் சிலாகித்து சிலிர்த்திருக்கிறது.

அந்தக் கம்பீரத்துக்கும் சிலாகிப்புக்கும் பின்னால் இத்தனை பெரிய போராட்டமும் ஓர் உயிர்ப்பலியும் இருந்திருக்கிறது என்பதைக் கேள்விப்பட்டபோது நான் மொத்தமாய்ப் பொடிந்து போனேன்.

வேதனையோடு வந்து கோயிலின் முன் நின்றேன். இறந்து போன ராசுவின் முகமே மனத்தில் பிம்பமாய்ப் பதிந்திருந்தது.

இரண்டு சக்கர வாகனங்கள் அங்கிருந்த இரண்டடி இடைவெளிக்குள் பிதுங்கிப் புறப்பட்டு சிரமத்தோடு வெளிவந்து கொண்டிருந்தன.

ஏனோ எனக்கு, குப்பைகள் அங்கிருந்து அகன்ற மாதிரி தோன்றவில்லை.



பதின்மூன்றாம் அத்தியாயம்

விஷ பாணம்

அந்த இடத்தில், அந்த நேரத்தில், தேவராளனைப் பார்த்ததும், வந்தியத்தேவனுடைய உள்ளம் சிறிது துணுக்குற்றது. கடம்பூர் அரண்மனையில் தேவராளன் வெறியாட்டம் ஆடியதும் அப்போது அவன் கூறிய மொழிகளும் நினைவு வந்தன. நடுக்கடலில் சுழற்காற்று குமுறிக் கொண்டிருந்த வேளையில் ரவிதாஸனும், தேவராளனும் சொன்ன செய்திகளும் ஞாபகத்துக்கு வந்தன. அவற்றில் எவ்வளவு உண்மை, எவ்வளவு கற்பனை என்று கண்டு பிடிப்பது கடினம். ஆனாலும் அவர்கள் ஏதோ ஒரு மர்ம பயங்கரமான சதிச்செயலில் ஈடுபட்டவர்கள் என்பது நிச்சயம். அவர்களில் ஒருவனிடம் இச்சமயம், அதுவும் இந்த நிர்மானுஷ்யமான இடத்தில், அகப்பட்டுக் கொண்டோமே என்று நினைத்தான். அவனிடமிருந்து தப்பிக் குதிரையை வேகமாகத் தட்டி விட்டுக் கொண்டு போய் விடலாமா என்று ஒரு கணம் எண்ணினான். அந்த எண்ணத்துடன் சுற்றுமுற்றும் பார்த்தான்.



கல்கி கலெக்ஷன்

அமரர்
கல்கி

தூரத்தில் தீயின் வெளிச்சம் தெரிந்தது. அது சுடுகாடாய்த்தான் இருக்க வேண்டும். ஏதோ ஒரு மண்ணுடல் தீக்கிரையாகிக் கொண்டிருக்கிறது. அந்த மண்ணுடலில் உயிர் இருந்த காலத்தில் எத்தனை எத்தனை ஆசா பாசங்களால் அது அலைப்புண்டிருக்கும்? எத்தனை இன்ப துன்பங்களை அது அனுபவித்திருக்கும்! – அரை நாழிகை நேரத்தில் மிச்சம் இருக்கப் போவது ஒரு பிடி சாம்பல்தான்! உலகில் பிறந்தவர்கள் எல்லாரும் ஒருநாள் அடைய வேண்டிய கதி அதுவேதான். மன்னாதி மன்னர்களும் சரி, ஏழைப் பிச்சைக்காரனும் சரி, ஒருநாள் அக்கினிக்கு இரையாகிப் பிடி சாம்பராகப் போக வேண்டியவர்களே!

திகில் வந்தது போலவே திடீரென்று விட்டுப் போய்விட்டது. இந்த வேஷ வஞ்சகக்காரனுக்குப் பயந்து எதற்கு ஓட வேண்டும்? ஏதோ இவன் சொல்லுவதற்குத்தான் வந்திருக்கிறான். அதைக் கேட்டு வைக்கலாமே? ஒருவேளை, கொல்லன் உலைக் களத்தில் தான் நுழைந்தபோது அங்கிருந்து பின்பக்கம் சென்று மறைந்து கொண்டவன் இவன்தான் போலும்! அந்த அதிசயமான வாள்கூட இவனுடையதாக இருக்கலாம். அதன் கைப்பிடியின் அருகில் மீனின் சித்திரம் இருந்ததல்லவா? இவனுடன் கொஞ்சம் பேச்சுக் கொடுத்தால் புதிய செய்தி ஏதேனும் தெரிய வரக்கூடும்?

ஆகையால் குதிரையை மெதுவாகவே செலுத்தினான் வல்லவரையன். முதன்முதலில் புதிது புதிதாக லாடம் அடிக்கப் பெற்ற அந்தக் குதிரையும் நடப்பதற்குக் கொஞ்சம் கஷ்டப்பட்டதாகத் தோன்றியது. அதை விரட்டியடிக்க மனம் வரவில்லை.

"இங்கே எப்படி அப்பா திடுதிப்பென்று வந்து முளைத்தாய்!" என்று கேட்டான் வல்லவரையன்.

"நான் அல்லவா அந்தக் கேள்வியைக் கேட்க வேண்டும்? உன்னை நடுக்கடலில் கப்பல் பாய்மரத்தோடு கட்டிவிட்டு வந்தோமே, எப்படி நீ தப்பி வந்தாய்!" என்றான் தேவராளன்.

"உனக்கு மட்டும்தான் மந்திரம் தெரியும் என்று நினைத்தாயோ? எனக்கும் கொஞ்சம் தெரியும்!"

"மந்திரத்தில் உனக்கு நம்பிக்கை ஏற்பட்டது பற்றி எனக்கு மகிழ்ச்சி. என்னுடைய மந்திர சக்தியினால் நீ இங்கே தனியாகப் போய்க் கொண்டிருப்பாய் என்று நானும் அறிந்து கொண்டேன். அதனால்தான் நான் முன்னால் வந்து காத்திருந்தேன்."

"ஏன் காத்திருந்தாய்?" என்னிடம் உனக்கு என்ன காரியம்?"

"நீயே யோசித்துப் பார்! அல்லது மந்திர சக்தியினால் கண்டுபிடி!"

"உங்களுடைய இரகசியங்களை நடுக்கடலில் என்னிடம் நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அவற்றில் எவ்வளவு உண்மை. எவ்வளவு கற்பனை என்பதும் எனக்குத் தெரியாது. ஆனாலும் அந்த இரகசியங்களை நான் மறந்துவிடத் தீர்மானித்து விட்டேன். யாரிடமும் சொல்லப் போவதில்லை..."

"அதைப் பற்றி நானும் கவலைப்படவில்லை. எப்போது நீ அந்த இரகசியங்களை யாரிடமாவது சொல்லலாம் என்று நினைக்கிறாயோ, அப்போது உன் நாக்குத் துண்டிக்கப்படும். நீ ஊமையாவாய்?"

வந்தியத்தேவனுக்கு உடல் சிலிர்த்தது. தஞ்சையிலும் இலங்கையிலும் அவன் சந்தித்த ஊமைப் பெண்களைப் பற்றிய நினைவு வந்தது. சற்று நேரம் சும்மா நடந்தான். இந்தப் பாவி

எதற்காக நம்மைத் தொடர்ந்து வந்திருக்கிறான்? இவனிடமிருந்து தப்பிச் செல்லுவதற்கு என்ன வழி? கோடிக் கரையிலிருந்தது போல் இங்கேயும் சேற்றுப் பள்ளம் இருந்தால் எவ்வளவு உபயோகமாயிருந்திருக்கும்? அல்லது ஆற்றில் பிடித்துத் தள்ளி விட்டுப் போகலாமா? அதில் பயனில்லை. ஆற்றில் தண்ணீர் அதிகம் கிடையாது. வேறு வழி ஒன்றும் இல்லாவிட்டால் இருக்கவே இருக்கிறது, உடைவாள். அதை எடுக்க வேண்டியதுதான்.

''தம்பி! நீ என்ன நினைக்கிறாய் என்பது எனக்குத் தெரியும். ஆனால் அது கைகூடாது. வீண் முயற்சியில் தலையிடாதே!''

வந்தியத்தேவன் பேச்சை மாற்ற விரும்பினான். அவனிடமிருந்து தப்புவதற்கு வழி யோசிக்கச் சிறிது அவகாசம் வேண்டும். அதுவரை ஏதேனும் பேச்சுக் கொடுத்து வர வேண்டும்.

''உன் கூட்டாளி ரவிதாஸன் எங்கே?''

தேவராளன் ஒரு பேய்ச் சிரிப்பு சிரித்துவிட்டு, ''அது உனக்கல்லவா தெரிய வேண்டும்? ரவிதாஸன் எங்கே?'' என்று கேட்டான்.

வந்தியத்தேவன் திடுக்கிட்டான். ரவிதாஸனைப் பற்றிய பேச்சைத் தான் எடுத்திருக்கக் கூடாது; எடுத்தது தவறு. ரவிதாஸனை இவன் பார்த்துப் பேசி விட்டு நம்மை ஆழம் பார்க்கிறானா? அல்லது...

''என்ன தம்பி, சும்மா இருக்கிறாய்? ரவிதாஸன் எங்கேயென்று சொல்ல மாட்டாயா? போனால் போகட்டும்! அந்த ஓடக்காரப் பெண், பூங்குழலி எங்கே? அதையாவது சொல்.''

வந்தியத்தேவன் பாம்பை மிதித்தவன் போல் பதறினான். மேலே பேசுவதற்கே அவனுக்குத் தயக்கமாயிருந்தது.

''அவளைப் பற்றியும் நீ ஒன்றும் சொல்ல மாட்டாயாக்கும். போனால் போகட்டும். அவளை நீ காப்பாற்ற நினைப்பதற்குத் தக்க காரணம் இருக்கலாம். தம்பி! சற்று முன்னால் ஒரு காதல் பாட்டுப் பாடினாயே! அவளை நினைத்துத்தான் பாடினாயா?''

''இல்லை; சத்தியமாய் இல்லை!'' என்று வல்லவரையன் பரபரப்போடு கூறினான்.

''ஏன் உனக்கு இவ்வளவு பரபரப்பு? ஏன் இவ்வளவு ஆத்திரம்?''

''சரி, சரி! அதைப் பற்றியெல்லாம் பேசிக் கொண்டிருக்க இப்போது அவகாசம் இல்லை. ஏன் என் குதிரையின் முகக் கயிற்றைப் பிடித்துக் கொண்டிருக்கிறாய்? விட்டுவிடு! நான் போகிறேன். அவசரக் காரியம் இருக்கிறது.''

''நான் வந்த காரியத்தை நீ இன்னும் கேட்கவில்லையே?''

''சொன்னால்தானே கேட்கலாம்?''

''இந்த முல்லையாற்றங்கரைக்கு ஓர் அதிசய சக்தி உண்டு. இங்கே யார் எதை விரும்புகிறார்களோ, அது உடனே அவர்களுக்குச் சித்திக்கும்.''

''நான் ஒன்றும் விரும்பவில்லையே?''

''அது பொய்! நீ யாரை நினைத்துக் கொண்டு உன் காதல் பாட்டைப் பாடினாயோ அவள் உன்னைப் பார்க்க விரும்புகிறாள். நீ இஷ்டப்பட்டால் பார்க்கலாம்.''

''எப்போது?''

''இன்றிரவே பார்க்கலாம்.''

''இது என்ன கதை?''

''கதை அல்ல, தம்பி! அதோ பார்!'' என்று தேவராளன் சுட்டிக் காட்டினான். அவர்கள் சென்ற வழியில் சற்றுத் தூரத்தில் ஏதோ ஒரு பொருள் மங்கலாகத் தெரிந்தது. வந்தியத்



தேவன் உற்றுப் பார்த்தான். அது ஒரு பல்லக்கு – மூடு பல்லக்கு என்று அறிந்தான்.

ஆகா! அந்தப் பல்லக்கு! எங்கே பார்த்திருக்கிறோம்? ஏன்? பழுவூர் இளையராணியின் பல்லக்கு அல்லவா அது? ஒருவேளை அதற்குள்ளே நந்தினி இருக்கிறாளா, என்ன? அதைத் தெரிந்து கொள்ளும் ஆவலை அவனால் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

குதிரையை அந்தப் பல்லக்கின் அருகில் கொண்டு போய் நிறுத்தினான். பனைச் சித்திரம் போட்ட பல்லக்கின் மூடுதிரை தெரிந்தது. திரை அசைவது போலும் இருந்தது.

உடனே வந்தியத்தேவன் குதிரை மீதிருந்து கீழே குதித்தான்.

அதேகணத்தில் தேவராளன் தொண்டையிலிருந்து ஒரு விசித்திரமான சப்தம் வெளி வந்தது.

அக்கம்பக்கத்திலிருந்த புதர்களின் மறைவிலிருந்து ஏழெட்டுப் பேர் திடும் திடும் என்று எழுந்து பாய்ந்து வந்தார்கள். வந்தியத்தேவன் மீது விழுந்தார்கள். அவனால் மீறி அசையவும் முடியாதபடி பிடித்துக் கொண்டார்கள். கால்களையும் கைகளையும் துணியினால் கட்டினார்கள். கண்ணையும் ஒருவன் கட்டினான். உடைவாளை ஒருவன் பலவந்தமாக எடுத்துக் கொண்டான். பிறகு வந்தியத்தேவனை அந்தப் பல்லக்கினுள்ளே தூக்கிப் போட்டார்கள். சிலர் உடனே பல்லக்கைத் தூக்கிக் கொண்டு விரைந்து நடந்தார்கள். மற்றவர்கள் முன்னும் பின்னும் சென்றார்கள். தேவராளன் முன்னால் வழிகாட்டிக்கொண்டு சென்றான். ஒருவன் குதிரையைப் பிடித்துக் கொண்டு நடந்தான்.

இவ்வளவும் அதிவிரைவில் நடந்து விட்டன. 'கண் மூடித் திறக்கும் நேரத்தில்' என்று சொல்லுவதும் மிகையாகாது. வந்தியத்தேவன் தன்னைப் பலர் வந்து ஏக காலத்தில் தாக்கியதும் திகைத்துப் போய்விட்டான். அத்தகைய தாக்குதலை அவன் எதிர்பார்க்கவேயில்லை. பல்லக்கில் அவனைத் தூக்கிப் போட்டு, பல்லக்கு நகர ஆரம்பித்த வரையில் அவனால் எதுவும் சிந்திக்கவும் முடியவில்லை. என்ன நடக்கிறதென்று தெரிந்து கொள்ளவும் முடியவில்லை.

ஆனால் பல்லக்கு நகர ஆரம்பித்ததும் சிறிது சிறிதாக மனம் தெளிவடைந்தது. கண்ணின் கட்டு சுலபமாக நழுவி விட்டது. கட்டியிருந்த கைகளினால் பல்லக்கின் திரையை விலக்கிக்கொண்டு பார்த்தான். நதிக்கரையிலிருந்து குறுக்கே இறங்கிப் பல்லக்கு எங்கேயோ போகிறது என்பதை அறிந்துகொண்டான்.

அவனுடைய கையின் கட்டுக்களையும் காலின் கட்டுக்களையும் அவிழ்த்துக்கொண்டு விடுதலை பெறுவது அவ்வளவு கஷ்டமான காரியம் அன்று. பல்லக்கிலிருந்து குதிப்பதும் எளிதாகத்தான் இருக்கும். குதிரையோ பின்னால் வந்து கொண்டிருந்தது. அந்த ஏழெட்டுப் பேரையும் உதறித் தள்ளிவிட்டுக் குதிரை மீது பாய்ந்தேறிச் செல்லுவதும் அவனுக்கு முடியாத காரியமாகாது. அவ்விதம் செய்யலாமா என்று யோசித்தான். ஆனால் ஏதோ ஒன்று குறுக்கே நின்று தடை செய்தது. அந்தப் பல்லக்கினுள்ளே ஓர் அபூர்வமான மணம் சூழ்ந்திருந்தது. அது முதலில் அவனுக்கு உற்சாகத்தை அளித்தது. அதன் கவர்ச்சியிலிருந்து விடுவித்துக் கொண்டு போக எளிதில் மனம் வரவில்லை. இந்தப் பல்லக்கு தன்னை

எங்கே கொண்டு போய்ச் சேர்க்கப் போகிறது? நந்தினியிடந்தான் சேர்க்கும் என்று ஊகிப்பதற்குக் காரணங்கள் இருந்தன. அவளைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை அவன் உள்ளத்தின் அடிவாரத்தில் இலேசாகத் தலைகாட்டியது. வர வர அது பெரும் ஆர்வமாக வளர்ந்தது. அதற்கு எவ்வளவோ ஆட்சேபங்கள் தோன்றின. ஆட்சேபங்களையெல்லாம் மீறி ஆசை விசுவரூபம் கொண்டது. என்னதான் செய்து விடுவாள் நம்மை? என்னத்துக்காகத்தான் அழைக்கிறாள் என்று பார்த்து விடலாமே? ஏதாவது தெரிந்து கொள்ள முடிந்தால் தெரிந்து கொள்ளலாமே? சூழ்ச்சிக்குச் சூழ்ச்சி செய்யத் தன்னால் முடியாமலா போய்விடும்? மறுபடியும் அவளைப் பார்க்கும்படியான சந்தர்ப்பம் கிடைக்குமோ என்பது சந்தேகந்தான். தஞ்சாவூருக்குப் போக வேண்டிய அவசியம் இனி ஏற்படப் போவதில்லை. அங்கே போவதும் அபாயகரம். அதைக் காட்டிலும் வழியிலேயே பார்த்து விடுவது எளிதான காரியம். இன்னும் ஒரு தடவை அவளையும் பார்த்துத் தான் வைக்கலாமே...?

ஆம்; ஆம்! நந்தினியைப் பார்க்க வேண்டும் என்பதற்கு இன்னோர் அவசியமான காரணமும் இருந்தது.

இலங்கையில் அவன் பார்த்த அந்த ஊமை அரசி; - அவள் நந்தினி போலிருந்ததாகத் தான் எண்ணியது சரியா? அதைத் தெரிந்து கொள்ள வேண்டாமா?

இவ்விதம் வந்தியத்தேவன் யோசித்துக்கொண்டிருக்கும்போதே அவன் தலை சுழன்றது. தூக்கம் வருவது போலத் தோன்றியது. இல்லை, இல்லை; இது தூக்கம் இல்லை. பகலிலேதான் அவ்வளவு நேரம் தூங்கியாகி விட்டதே! இது ஏதோ மயக்கம். இந்தப் பல்லக்கில் சூழ்ந்துள்ள மணம் தான் இப்படி நம்மை மயக்குகிறது. ஐயோ! இது என்ன பயங்கர அபாயம்! பல்லக்கிலிருந்து குதித்து விட வேண்டியதுதான்!

வந்தியத்தேவன் கைக்கட்டை அவிழ்த்துக்கொள்ள முயன்றான்; முடியவில்லை. கைகள் அசையவேயில்லை. எழுந்து உட்கார முயன்றான்; அதுவும் முடியவில்லை. கால்களை அடித்துக் கொள்ளப் பார்த்தான்; கால்களும் அசைய மறுத்தன. அவ்வளவுதான்! கண்ணிமைகள் மூடிக் கொண்டன; அறிவு விரைவாக மங்கியது. மயக்கம் அவனை முழுதும் ஆட் கொண்டது.

வந்தியத்தேவன் மயக்கம் தெளிந்து கண் விழித்த போது, பழைய நினைவுகள் வந்து, பல்லக்கிலிருந்து குதிப்பதற்கு முயன்றான். ஆனால் விந்தை! விந்தை! அவன் இப்போது பல்லக்கில் இல்லை! விசாலமான ஓர் அறையில் இருந்தான். அந்த அறை தீபங்களினால் பிரகாசமாக விளங்கிற்று. இங்கேயும் ஏதோ ஒரு மணம் சூழ்ந்து இருந்தது; ஆனால் பழைய மாதிரி மணம் இல்லை. மயக்கம் தரும் மணம் இல்லை. அகிற் புகையின் மணம் போலத் தோன்றியது. முன்னே அவன் அனுபவித்தது அறிவை மயக்கிய மணம். இது அறிவைத் தெளிவு செய்த மணம். படுத்திருந்த ஆசனத்திலேயே எழுந்து உட்கார்ந்தான்; சுற்றுமுற்றும் பார்த்தான். கதவு ஒன்று திறந்தது. வந்தியத்தேவன் ஆவலுடன் பார்த்தான்.

திறந்த கதவின் வழியாக நந்தினி வந்தாள். வந்தவளைக் கண்கொட்டாமல் அவன் பார்த்துக்கொண்டிருந்தான். அவனுடைய வியப்புக்கும் திகைப்புக்கும் பல காரணங்கள் இருந்தன. வர்ணனைக்கெட்டாத அவளுடைய சௌந்தர்யம் ஒரு காரணம். எதிர்பாராத முறையில் அவளைச் சந்திக்கும்படி நேர்ந்தது இன்னொரு காரணம்.

இலங்கையில் அவன் பார்த்திருந்த மூதாட்டியின் உருவத்தோடு இந்த யுவதியின் உருவம் எவ்வளவு ஒத்திருக்கிறது என்ற எண்ணம் மற்றொரு காரணம். உருவங்கள் ஒத்திருக்கின்றனவா? அல்லது அந்த மூதாட்டியே தான் உயரிய ஆடை ஆபரணங்களை அணிந்தபடியினால் இப்படித் தோற்றமளிக்கிறாளா?

இனிய கிண் கிணி நாதக் குரலில் "ஐயா, நீர் மிகவும் நல்லவர்!" என்று கூறினாள் நந்தினி.

வந்தியத்தேவன் "வந்தனம்!" என்றான்.

"நல்லவருக்கு அடையாளம் சொல்லாமற் போவதுதானே? தஞ்சை அரண்மனையிலிருந்து என்னிடம் சொல்லிக் கொள்ளாமலே போய் விட்டீர் அல்லவா!" என்றாள் நந்தினி.

வந்தியத்தேவன் நகைத்தான்.

"தஞ்சைக் கோட்டைக்குள் வருவதற்கு உமக்கு நான் உதவி செய்தேன். என் விரலிலிருந்து பனை முத்திரை மோதிரத்தை எடுத்துக் கொடுத்தேன். அதை என்னிடம் திருப்பிக் கொடுத்து விட்டாவது போயிருக்க வேண்டாமா?" என்று கேட்டாள்.

வந்தியத்தேவன் வெட்கித்து மௌனமாக நின்றான்.

"எங்கே? இப்போதாவது அதைத் திருப்பிக் கொடுக்கலாம் அல்லவா? அதன் உபயோகம் தீர்ந்து போயிருக்குமே? மறுபடியும் தஞ்சைக் கோட்டைக்கு வரும் எண்ணம் உமக்கு இல்லைதானே?" என்று கூறி நந்தினி தன் அழகிய மலர்க்கரத்தை நீட்டினாள்.

"தேவி! அந்த முத்திரை மோதிரத்தை இலங்கைத் தளபதி பூதி விக்கிரமகேசரி கைப்பற்றிக் கொண்டு விட்டார். ஆகையால் அதைத் திருப்பிக் கொடுக்க இயலவில்லை. மன்னிக்க வேண்டும்" என்றான் வந்தியத்தேவன்.

"என்னுடைய ஜன்ம சத்துருவிடம் நான் உமக்குக் கொடுத்த மோதிரத்தைக் கொடுத்து விட்டீர் அல்லவா! மிக்க நன்றியுள்ள மனிதர் நீர்!"

"நானாகக் கொடுத்து விடவில்லை. பலவந்தமாக எடுத்துக் கொண்டார்கள்."

"வாணாதி ராயர் குலத்தில் உதித்த வீராதி வீரர், பலவந்தத்துக்கு உட்பட்டு ஒரு காரியம் செய்தீரா? என்னால் நம்பமுடியவில்லை!"

"அம்மணி! இங்கே இச்சமயம் நான் வந்திருப்பதும் பலவந்தம் காரணமாகத் தானே? தங்களுடைய ஆட்கள்...?"

"உண்மையாகச் சொல்லும் ஐயா! நன்றாய் நினைத்துப் பார்த்துச் சொல்லும்! பலவந்தத்தினால் மட்டும் நீர் இங்கே வந்தீரா? இஷ்டப்பட்டு வரவில்லையா? பல்லக்கில் ஏற்றப்பட்ட பிறகு கீழே குதித்து ஓடுவதற்கு உமக்குச் சந்தர்ப்பம் இல்லையா?" என்று நந்தினி கேட்ட கேள்விகள் கூரிய அம்புகளைப் போல் வந்தியத்தேவன் நெஞ்சைத் துளைத்தன.

"ஆம்; இஷ்டப்பட்டுத்தான் வந்தேன்" என்றான்.

"எதற்காக வந்தீர்?"

"தாங்கள் எதற்காக என்னை அழைத்து வரச் செய்தீர்கள்?"

"என் முத்திரை மோதிரத்தைத் திருப்பிக் கேட்பதற்காக!"

"அது மட்டும்தானா?"

"இன்னும் ஒரு காரணமும் இருக்கிறது. என் கணவரின் பாதுகாப்புக்கு உட்பட்ட பொக்கிஷ நிலவறையில் நீர் அன்றிரவு இருந்தீர் அல்லவா?"

வந்தியத்தேவன் திடுக்கிட்டான்.

"எனக்குத் தெரியாது என்றா எண்ணினீர்? அழகுதான்! எனக்குத் தெரிந்திராவிட்டால் அன்றிரவு நீர் தப்பிச் சென்றிருக்க முடியுமா?"

"தேவி...!"

"ஆம்; எனக்கும் தெரியும். பெரிய பழுவேட்டரை யருக்கும் தெரியும். உம்மை அங்கேயே கொன்று போட்டு விடும்படி பழுவேட்டரையர் சுரங்க வழிக் காவலனுக்குக் கட்டளையிட்டார். அவர் அப்பால் சென்றதும் நான் அந்தக் கட்டளையை மாற்றி விட்டேன். அதனால் நீர் பிழைத்தீர். உம்முடைய அழகான நண்பன் ஆபத்துக்கு உள்ளானான். இல்லாவிடில், அந்தப் பொக்கிஷ நிலவறையில் முத்துக் குவியல்களுக்குப் பக்கத்தில் உம்முடைய எலும்புகள் இப்போது கிடக்கும்!"

வந்தியத்தேவன் வியப்புக் கடலில் மூழ்கினான். அவள் கூறியவையெல்லாம் உண்மையென்று அவனால் நம்ப முடியவில்லை. உண்மையில்லாவிட்டால் தான் அன்று அங்கு ஒளிந்திருந்தது எப்படித் தெரிந்தது? சம்பிரதாயத்துக்காவது நன்றி கூற வேண்டியது அவசியம் என்று கருதி, "அம்மணி...!" என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தான்.

"வேண்டாம்; மனத்தில் இல்லாததை வெளியில் எதற்காகச் சொல்லப் பார்க்கிறீர்? எனக்கு நன்றி செலுத்த முயல வேண்டாம்!"

"இல்லை, தேவி..."

"உம்முடைய உயிரை அன்று காப்பாற்றியதைப் பற்றி எதற்காகச் சொன்னேன், தெரி





யுமா, உம்முடைய நன்றியை எதிர்பார்த்தல்ல. மறுபடியும் அந்தச் சுரங்க வழியை உபயோகிக்கப் பார்க்க வேண்டாம் என்று எச்சரிப்பதற்காகத்தான். அங்கே இப்போது மிகவும் வலுவான காவல் போட்டிருக்கிறது. தெரிகிறதா?''

''மறுபடியும் அந்தப் பக்கம் போகும் உத்தேசமே எனக்கு இல்லை.''

''அது ஏன் இருக்கப் போகிறது? உதவி செய்தவர்களை நினைக்கும் வழக்கமே உமக்கு இல்லையே? உம்மால் உம்முடைய சிநேகிதன் ஆபத்துக்கு உள்ளானான். அவனை என்னுடைய அரண்மனைக்கே எடுத்து வரச் செய்து, அவனுக்கு வைத்தியம் பண்ணுவித்துக் குணப்படுத்தி அனுப்பினேன். அதில் உமக்குத் திருப்திதானே? அல்லது நம்பிக்கைத் துரோகத்தைப் போல் சிநேகத் துரோகமும் உம்முடன் பிறந்ததா?''

நந்தினியின் வார்த்தை ஒவ்வொன்றும் விஷபாணத்தைப் போல் வந்தியத்தேவனுடைய உள்ளத்தில் ஊடுருவிச் சென்றது. அவன் துடிதுடித்து மௌனமாயிருந்தான்.

''உம்முடன் கோடிக்கரைக்கு வந்த வைத்தியர் மகனைத்தான் உமக்குப் பதிலாகப் பிடித்துக் கொடுத்து அனுப்பினீர். அவன் என்ன ஆனான் என்று விசாரித்தீரா?''

''தங்களைக் கேட்க எண்ணினேன்.''

''சொல்லுகிறேன்; ஆனால் உம்முடன் இலங்கையிலிருந்து புறப்பட்ட இளவரசர் அருள்மொழி வர்மர் என்ன ஆனார்? அதைச் சொன்னால் நான் வைத்தியர் மகனைப் பற்றிச் சொல்லுவேன்.''

வந்தியத்தேவனுக்கு உடம்பை ஓர் உலுக்கு உலுக்கிப் போட்டது. இளவரசரைப் பற்றி அறிவதற்காகத்தான் தன்னை இவள் இப்படிப் பாடாய்ப் படுத்தினாளோ என்று தோன்றியது. ஏமாந்து போகக் கூடாது என்று தீர்மானித்துக் கொண்டான்.

''அரசி! அதைப் பற்றி மட்டும் என்னைக் கேட்க வேண்டாம்!'' என்றான்.

''ஆம்! அதைப் பற்றி மட்டும் கேட்கக் கூடாதுதான்! கேட்டாலும் உம்மிடமிருந்து மறுமொழி வராது என்று எனக்குத் தெரியும். உம்முடைய காதலி எப்படியிருக்கிறாள்? அதைப் பற்றியாவது எனக்குச் சொல்லலாமா?''

வந்தியத்தேவனுடைய கண்களில் தீப்பொறி பறந்தது. ''யாரைச் சொல்லுகிறீர்கள்? ஜாக்கிரதை!'' என்றான்.

''ஆகா! நான் ஜாக்கிரதையாகத்தான் இருக்கிறேன். அந்தப் பழையாறை மகாராணியைச் சொல்லுவதாக எண்ண வேண்டாம். அவள் உம்மைக் கண்ணெடுத்தும் பார்க்க மாட்டாள். தன் காலில் ஒட்டிய தூசிக்குச் சமானமாக உம்மை மதிப்பாள். உம்மை இலங்கையில் கொண்டு சேர்த்துத் திருப்பியும் அழைத்து வந்தாளே! அந்த ஓடக்காரப் பெண்ணைப் பற்றிக் கேட்கிறேன். பூங்குழலி உங்கள் காதலி அல்லவா?''

''இல்லை, இல்லவே இல்லை. அவளுடைய காதலர்களை அவளே எனக்குக் காட்டினாள். நள்ளிரவில் கோடிக்கரைச் சதுப்பு நிலத்தில் கிளம்பும் கொள்ளி வாய்ப் பிசாசுகளை எனக்குக் காட்டினாள். அவர்கள்தான் தன்னுடைய காதலர்கள் என்று சொன்னாள்.''

அவள் பாக்கியசாலி! ஏனெனில் அவளுடைய காதலர்கள் ஒளி வடிவம் பெற்றிருக்கிறார்கள். பிரகாசமாகக் கண் முன் தோன்றுகிறார்கள். என்னுடைய



காதலர்களோ இருள் வடிவமானவர்கள்; உருவம் அறிய முடியாதவர்கள். இருள் அடைந்த பாழும் மண்டபத்தில் நீர் எப்போதாவது நள்ளிரவு நேரத்தில் படுத்திருந்ததுண்டா? வௌவால்களும் ஆந்தைகளும் இறகுகளைச் சடபடவென்று அடித்துக்கொண்டு அந்த இருண்ட மண்டபங்களில் உருத் தெரியா வடிவங்களாகப் பறந்து திரிவதைப் பார்த்ததுண்டா? அம்மாதிரி வடிவங்கள் என் உள்ளமாகிய மண்டபத்தில் ஓயாமல் பறந்து அலைகின்றன. என் நெஞ்சைத் தாக்குகின்றன. என் கன்னத்தை இறகுகளால் தேய்த்துக்கொண்டு செல்கின்றன! அந்த இருள் வடிவங்கள் எங்கிருந்து வருகின்றன? எங்கே போகின்றன? ஏன் என்னைச் சுற்றிச் சுற்றி வட்டமிடுகின்றன? ஐயோ! உமக்குத் தெரியுமா?'' – இவ்விதம் கூறிவிட்டு நந்தினி வெறி கொண்ட கண்களால் அங்குமிங்கும் பார்த்தாள்.

வந்தியத்தேவனுடைய வயிர நெஞ்சமும் கலங்கிப் போயிற்று. ஒரு பக்கம் இரக்கமும் இன்னொரு பக்கம் இன்னதென்று தெரியாத பயமும் அவன் மனதில் குடிகொண்டது.

''தேவி! வேண்டாம்; கொஞ்சம் சாந்தி அடையுங்கள்!'' என்றான்.

''என்னைச் சாந்தி அடையும்படி சொல்வதற்கு நீர் யார்?'' என்று கேட்டாள் நந்தினி.

''நான் வாணர் குலத்தில் வந்த ஏழை வாலிபன். தாங்கள் யார், தேவி!''

''நான் யார் என்றா கேட்கிறாய்! அதுதான் எனக்கும் தெரியவில்லை. அதைக் கண்டுபிடிக்கத்தான் முயன்று கொண்டிருக்கிறேன். நான் யார்? மானிடப் பெண்ணா? அல்லது பேயா, பிசாசா என்று கேட்கிறாயா?''

''இல்லை, இல்லை! தெய்வ லோகத்திலிருந்து தவறி விழுந்த தேவப் பெண்ணாகவும் இருக்கலாம் அல்லவா? தெய்வ சாபத்தினால்...''

''ஆம்; தெய்வ சாபம் என் பேரில் ஏதோ இருக்கிறது. அது என்னவென்று மட்டும் தெரியவில்லை. நான் யார், எதற்காகப் பிறந்தேன் என்பதை அறியேன். இதுவரையில் ஒரே ஒரு சூசகத்தை மட்டும் தெய்வம் எனக்கு அளித்திருக்கிறது. இதோ பார்!'' என்று கூறி நந்தினி அவள் அருகில் இருந்த வாளை எடுத்துக் காட்டினாள். புதிதாகச் செப்பனிடப்பட்ட அந்தக் கூரிய வாள் தீப வெளிச்சத்தில் பளபளவென்று ஜொலித்துக் கண்ணைப் பறித்தது.

வந்தியத்தேவன் அந்த வாளைப் பார்த்தான். பார்த்த உடனே அது கொல்லன் பட்டறையில் தான் பார்த்த வாள் என்பதைத் தெரிந்து கொண்டான். இதுவரையில் நந்தினியின் வார்த்தைகளாகிற விஷ பாணங்களினால் அவன் துடி துடித்துக் கொண்டிருந்தான். இப்போது இரும்பினால் செய்த வாளாயுதத்தைப் பார்த்ததும் அவனுடைய மனம் திடப்பட்டது. ஏனெனில் வாள், வேல் முதலிய ஆயுதங்கள் அவனுக்குப் பழக்கப்பட்டவை. பிறந்தது முதல் அவனுடன் உறவு பூண்டவை. ஆகையால் பயமில்லை! நந்தினி அந்த வாளைத் தன் பேரில் உபயோகிப்பதாயிருந்தாலும் பயம் கிடையாது!

''தேவி! பார்த்தேன்; வாளைப் பார்த்தேன்; வேலைப்பாடு அமைந்த வாள்; அரச குலத்துக்கு உரிய வாள். வீராதி வீரர்களின் கைக்கு உகந்த வாள். அது மெல்லியல் கொண்ட தங்கள் அழகிய கையில் எப்படி வந்தது? அதன் மூலம் தெய்வம் தங்களுக்கு அளித்திருக்கும் சூசகம்தான் என்ன?'' என்று கேட்டான்.

(தொடரும்)

ஒரு நல்ல கச்சேரி!

பழைய காலத்தில் நம் முன்னோர்கள் நாட்டைப் பாதுகாப்பதற்கு வில், அம்பு, வேல், ஈட்டி முதலிய ஆயுதங்களை உபயோகப்படுத்தினார்கள். வீரர்கள் இந்த ஆயுதங்களைக் கொண்டே யுத்தம் செய்தார்கள். தற்சமயம் வில், அம்பு, வேல், ஈட்டி முதலியவற்றை 'மியூஸியம்' என்னும் காட்சிச் சாலைகளிலே பார்க்கலாம். மற்றபடி அந்த ஆயுதங்கள் இந்தக் காலத்துப் போர் முறைகளுக்குப் பயன்படுவதில்லை.

இந்த நாளில் யுத்தங்களில் உபயோகப்படும் துப்பாக்கி, பீரங்கி, டாங்கி, வெடிகுண்டு, எரிகுண்டு, அணுகுண்டு ஆகியவை இன்னொரு ஆயிரம் வருஷங்களுக்குப் பிறகு எந்த நிலைமையில் இருக்கும் என்று நாம் ஊகிக்கலாம். ஏன்? அவை வில்லையும் அம்பையும் போலவே 'மியூஸிய'ங்களில் இடம் பெற்று விடும்! யுத்தமே ஒழிந்து போகும்; அல்லது யுத்தத்துக்கு வேறு புதிய ஆயுதங்கள் ஏற்பட்டு விடும். இதைப் பற்றி யாதொரு சந்தேகமும் இல்லை.

ஆனால் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் நம் முன்னோர்கள் பாடி மகிழ்ந்த சங்கராபரணம், காம்போதி முதலிய ராகங்களை இன்றைக்கும் நாம் பாடியும் கேட்டும் மகிழ்கிறோம். ஆயிரத்து முந்நூறு வருஷங்களுக்கு முன்னால் மகேந்திர பல்லவன் வகுத்த தாள வகைகளை இன்றைக்கும் நாம் கையாளுகிறோம். ஆயிரத்தைந்நூறு வருஷங்களுக்கு முன்னால் பரத முனிவர் தொகுத்துச் சேர்த்த பரத சாஸ்திர முறைப்படி நாட்டிய வித்தை இன்றைக்கும் பயிலப்படுவதைப் பார்க்கிறோம்.

இன்னும் ஆயிரம் – இரண்டாயிரம் வருஷங்கள் சென்ற பிறகுகூட, இந்த ராகங்களை நமது சந்ததிகள் பாடுவார்கள். இந்தத் தாளங்களையே கையாளுவார்கள். இதே பரத நாட்டியக் கலையை முறைப்படி பயின்று அரங்க மேடைகளிலே ஆடுவார்கள்.



இதையெல்லாம் நினைத்துப் பார்த்தால் நமக்குப் புல்லரிக்கின்றது. ஒரு நாட்டின் மேன்மைக்கும் ஆனந்த வாழ்வுக்கும் எவ்வளவு முக்கியமான சாதனங்கள் கலைகள் என்பதை உணர முடிகின்றது.

அமரர் கல்கி

ஆகையினாலேதான் சுதந்தர மடைந்திருக்கும் தேசங்களெல்லாம் அந்தந்த நாட்டுக் கலைகளைப் பாதுகாப்பதில் அவ்வளவு கவனம் செலுத்துகின்றன. ருஷியா முதலிய தேசங்களில் ஆயுதச் சாலைகளையும் தொழிற்சாலைகளையும் பெருக்குவதைக் காட்டிலும் அதிகமாகவே கலைகளை வளர்ப்பதில் சிரத்தை காட்டுகிறார்கள்.

தமிழ்நாட்டின் புராதனமான கலைச் செல்வங்களில் மிகச் சிறந்தது கர்நாடக சங்கீதமாகும். பரம்பரையாகத் தோன்றிய மகா வித்வான்கள் பலர் நம்முடைய சங்கீதக் கலையை அதன் தூய்மை குன்றாமல் பாதுகாத்துத் தந்திருக்கிறார்கள். இன்றைக்கு அத்தகைய அருமையான திருப்பணியைச் செய்து வருகிறவர்களில் ஒருவர் ஸ்ரீமதி எம்.எல். வஸந்த குமாரி.

● ● ●

சில தினங்களுக்கு முன்னால் நண்பர் ஒருவர் சமீபத்தில் வெளியான தமிழ் டாக்கிகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். "இந்த வருஷத்தில் திரையிடப்பட்ட தமிழ்ப் படங்களில் பல நன்றாய் ஓட வில்லை. சில தமிழ்ப் படங்கள் வஸந்த குமாரியின் பாட்டினால் ஓடின!" என்று சொன்னார். "அப்படியா சமாசாரம்? வஸந்த குமாரியின் பாட்டைக் கண்டு அந்தத் தமிழ்ப்படங்களுக்கு அவ்வளவு பயம் ஏன்? எதற்காக ஓட வேண்டும்?" என்று கேட்டேன். "நல்ல சங்கீதத்துக்கும் நம் தமிழ்ப் படங்களுக்கும் அவ்வளவாக ஒத்துக் கொள்ளாததுதானே? ஆகையால் வஸந்தகுமாரியின் சங்கீதம் நன்றாயிருப்பதுதான் அவை ஓடுவதற்குக் காரணம்!" என்று சொன்னார். இத்துடன் அந்த சிலேடைப் பேச்சு முடிந்தது.

சங்கீத உலகில் ஸ்ரீமதி எம்.எல். வஸந்த குமாரியின் புகழ் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகிறதென்பது எனக்குத் தெரிந்திருந்தது. நல்ல இடத்தில், நல்ல சூழ்நிலையில், அந்த நல்ல சங்கீதத்தைக் கேட்க வேண்டும் என்று கொண்ட விருப்பம் இம்மாதம் 11-ந் தேதி தியாகராஜநகர் வாணி மகால் மண்டபத்தில் நிறைவேறியது. சென்னை நகரத்திலுள்ள சங்கீத சபைகளுக்குள்ளே சௌக்யமாக உட்கார்ந்து சங்கீதம் கேட்கக் கூடிய சங்கீத மண்டபம் எது என்று கேட்டால், தற்சமயம் தியாகராஜ நகர் 'வாணி மகால்' மண்டபந்தான் என்று சொல்ல வேண்டும். சபையில் எங்கிருந்து பார்த்தாலும் அரங்க மேடை சமீபமாகக் காணப்படுகிறது. ஆடுகிறவர்களையும் பாடுகிறவர்களையும் எல்லாரும் பார்க்க முடிகிறது. ஆசனங்கள் நல்ல முறையில் போட்டிருக்கிறார்கள். நடுவிலே பிரம்மாண்டமான தூண்கள் நின்று மறைக்கவில்லை. கச்சேரி ஆரம்பித்ததும் பனிச்சென்று மேளங் கட்டி விடுகிறது. பாட்டுக் கேட்க வருகிற ரஸிகர்களும் உண்மையாகவே பாட்டைக் காது கொடுத்துக் கேட்கிறார்கள். எனவே, நல்ல சங்கீதம் கேட்கத்தக்க சூழ்நிலை அமைகிறது.

தமிழிசைச் சங்கத்தார் ஒரு நல்ல சங்கீத மண்டபம் கட்டப் போவதாகப் பயமுறுத்திக் கொண்டேயிருக்கிறார்கள். அவர்கள் அந்தப் பயமுறுத்தலை நிறைவேற்றும் போது ஒருவேளை 'வாணி மகாலை'விட நல்ல சங்கீத மண்டபம் சென்னையில் ஏற்படக் கூடும்.

● ● ●

பல வருஷங்களுக்கு முன்னால் ஸ்ரீமதி எம்.எல். வஸந்தகுமாரி தம் தாயார் ஸ்ரீமதி லலிதாங்கியுடன் சேர்ந்து பாடிக் கொண்டிருந்தார். அப்பொழுது "இந்தப் பெண் சங்கீத உலகில் உன்னத ஸ்தானத்தை அடையப் போகிறாள்" என்று நான் ஜோசியம் சொல்லவில்லை. அப்படிச் சொல்வது சில சமயம் விபரீதமான பலனைத் தருகிறது. நாலுபேர் "இந்தக் குழந்தையின் பாட்டு நன்றாயிருக்கிறது; முன்னுக்கு வரும் அறிகுறிகள் இருக்கின்றன" என்று சொல்லி விட்டால், பெற்றோர்களுக்கு உடனே உற்சாகம் பெருகிவிடுகிறது. அப்போதே குழந்தை கச்சேரி செய்ய ஆரம்பித்து உலகத்தையே வளைத்துக் கட்டி விட வேண்டும் என்று ஆசைப் படுகிறார்கள். சங்கீத வித்தையை முறைப்படி பயிலுவதற்கு ஊக்கமோ அவகாசமோ

இருப்பதில்லை. கர்நாடக சங்கீதம் அபூர்வமான கலை; அதை அடைவதற்குக் கடவுள் அருள் வேண்டும்; அதோடு நீடித்த பிரயத்தனமும் வேண்டும். பிரயத்தனம் குறைந்து விடுவதால் 'முன்னுக்கு வரக் கூடிய' குழந்தைகளின் சங்கீதமும் முன்னுக்கு வராமல் 'அமெச்சூர்' ரேடியோ சங்கீதமாகப் பின்னாலேயே நின்று விடுகிறது.

ஸ்ரீமதி எம்.எல். வஸந்த குமாரியின் சங்கீத வித்தை அந்த அபாயங்களையெல்லாம் தாண்டி நிலையான மேன்மையை அடைந்து விட்டதைக் குறித்து மிகவும் மகிழ்கிறேன். 'கர்நாடக சங்கீத உலகத்தில் பழைய பரம்பரையில் வந்த பெரிய வித்வான்களுடன் சேர்த்துச் சொல்லக் கூடிய யாரும் இந்தப் பத்து வருஷத்தில் வெளிவந்து பிரகாசிக்கவில்லையே?' என்ற கவலை ஸ்ரீமதி வஸந்த குமாரியின் சங்கீதக் கச்சேரியைக் கேட்டதினால் ஓரளவு நீங்கி விட்டது.

• • •

அப்பழுக்குச் சொல்ல முடியாத கர்நாடக சுத்தமான வழிகளை அனுசரித்து ஸ்ரீமதி வஸந்தகுமாரி பாடுகிறார். அவருடைய குரல் சுருதியோடு சேர்ந்து குழைந்து இழைகிறது. சங்கதிகள் விவரமாகவும் ஒன்றோடொன்று மோதாமலும் கணீரென்று விழுகின்றன. ராகபாவம் கெடாத படி பிர்க்காக்களை ஜிலுஜிலுப்புடன் பொழியும் ஆற்றல் படைத்திருக்கிறார். ராகங்களை அதனதன் உருவம் நன்கு புலப்படும்படியாக ஜீவஸ்வரங்களில் நின்று அபூர்வ சஞ்சாரங்களுடன் விஸ்தாரமாக ஆலாபனம் செய்யக் கூடியவராயிருக்கிறார். ஸாஹித்யங்களை அக்ஷர சுத்தமாக உச்சரிக்கிறார். சவுக்க காலத்தில் சங்கீத வித்தைத் திறமை வெளியாகும்படி பாடக்கூடிய பெரிய கீர்த்தனங்களையும், கச்சேரி களை கட்டும் பொருட்டு விறுவிறுப்பாகப் பாட வேண்டிய மத்தியம கால கிருதிகளையும் உசிதமாகப் பொறுக்கிக் கச்சேரி பந்தாவை அமைக்கிறார். லயம் சுத்தமாயிருக்கிறது. ஸ்வரம் பாடும் முறை கச்சிதமாயிருக்கிறது. இவ்வளவு நல்ல அம்சங்களும் சேர்ந்திருக்கும்போது, ஸ்ரீமதி வஸந்த குமாரியின் கச்சேரி முதல் தரமாக அமைவது பற்றி வியப்பு ஒன்றும் இல்லையல்லவா?

ஸ்ரீமதி வஸந்த குமாரியின் சாரீரத்தில் போதிய அளவு 'காத்திரம்' இன்னும் ஏற்படவில்லை. பாடும் முறையில் இன்னும் போதுமான அழுத்தம் உண்டாகவில்லை. பொதுவாக எல்லா அம்சங்களிலும் 'மெருகு' ஏறுவதற்கு மேலும் இடமிருக்கிறது. ஆனால் சரியான இலட்சியத்தை நோக்கிச் சரியான பாதையில் போகத் தொடங்கி விட்டபடியால் ஸ்ரீமதி வஸந்த குமாரியின் சங்கீதம் மேலும் மேலும் உயர்வை அடையும் என்பது நிச்சயம்.

• • •

ஸ்ரீமதி வஸந்த குமாரி அன்று ஆலாபனம் செய்த ராகங்களில் தோடி, பைரவி, காம்போதி, ஹிம்மேந்திர மத்தியம ராகங்களைக் குறிப்பிட வேண்டும். காம்போதி ஆலாபனத்தில் கையாண்ட சஞ்சாரங்கள் அபூர்வமாயிருந்ததோடு செவிக்கு இனிமையாகவும் இருந்தன. சிம்மேந்திர மத்தியமத்தைப் பிரதான ராகமாக எடுத்து அதை எவ்வளவு விரிவாகவும் ரஞ்சகமாகவும் பாடலாம் என்பதைக் காட்டினார். "பராமுக மேல" "இவனாரோ அறியேனே" "நெனருஞ்சினானு" என்னும் கீர்த்தனங்கள் எடுப்பாகவும் அழகாகவும் இருந்தன. இதர உருப்படிகளில் 'தேஷ்' ராகத்தில் "சுட்டும் விழிச் சுடர்தான்" என்னும் பாரதியார் கீதம் செவிக்கு இன்பமளித்து மனதையும் கவர்ந்தது. "குனித்த புருவமும்" என்னும் அப்பர் சுவாமிகளின் பாசுரத்தை நாத நாமக்கிரியை, செஞ்சுருட்டி முதலிய மத்தியம சுருதி ராகங்களிலேயே கர்ணாமிர்தமாகப் பாடினார்.

தமிழ்நாட்டில் தற்போது ரஸிகர்களின் கவனத்தைக் கவர்ந்திருக்கும் வயலின் வித்வான்களில் ஸ்ரீ.ஆர்.எஸ். கோபால கிருஷ்ணன் ஒருவர். நல்ல பாணியும் சிறந்த வித்வத்தும் உடையவர். சில சமயம் அவர் வாசிப்பில் வேண்டுமென்று செய்யும் கோணல்கள் நிகழ்வதுண்டு. இந்தக் கச்சேரியில் அப்படி ஒன்றுமில்லாமல் சுத்தமான பாணியில் வாசித்துப் பல்லவி ஸ்வ

விலைகள் குறையுமா?

நோய்க்கு மருந்து கொடுப்பதில் அபிப்பிராய பேதம் இல்லாத டாக்டர்கள் உண்டா? அதுபோலவே அரசியல், பொருளாதார நோய்களுக்கும் பரிகாரம் தேடுவதில் அபிப்பிராய பேதம் இல்லாத நிபுணர்கள் இல்லை. பிரிட்டனின் நலனுக்காகப் பல பல மாதங்கள் வரையில் தீர்க்காலோசனை செய்தும் நிதி நிபுணர்களைக் கலந்தும் பிரிட்டிஷ் மந்திரிகள் பிரிட்டிஷ் நாணயமான ஸ்டர்லிங்கின் டாலர் மதிப்பைக் குறைத்தார்கள். அவ்வாறு குறைத்ததால் பிரிட்டிஷ் குடியே கெட்டு விட்டது என்று சர்ச்சில் கூட்டத்தார் ஓலமிட்டு வருகிறார்கள். ஸ்டர்லிங்கின் டாலர் மதிப்பு குறைந்து விட்டதால், அந்த அளவுக்கு ரூபாயின் டாலர் மதிப்பையும் குறைப்பதுதான் இந்தியாவின் பொருளாதார நிலைமை சீர்குலையாமல் இருப்பதற்கு வழி என்று இந்திய சர்க்கார் பொக்கிஷ மந்திரி டாக்டர் ஜான்மத்தாய் நிபுணர்களைக் கலந்தாலோசித்து முடிவு செய்தார். அவ்வாறு குறைத்தது சரியல்ல என்று இந்த நாட்டிலும் கூக்குரல் ஏற்பட்டிருக்கிறது. அவ்வாறு ஆட்சேபிப்பவர்களுக்கு பொக்கிஷ மந்திரி இந்தியா பார்லிமெண்டில் பதில் அளித்தார். இந்திய சர்க்கார் செய்த முடிவு முற்றிலும் சரி என்பதற்குத் தகுந்த ஆதாரங்களை அவர் எடுத்துக் காட்டினார். மற்றும் ரூபாயின் டாலர் மதிப்புக் குறைவால் ஏற்படக்கூடிய விபரீத நிலைமையைச் சமாளிப்பதற்கான முறைகளையும் விவரித்தார்.

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் யந்திர வகைகளின் விலைகள் குறைய வழி வகை தேட வேண்டும். சிக்கனம் செய்து அதிகமாகச் சேமிக்கும்படி ஜனங்களைத் தூண்ட வேண்டும். யுத்த காலத்தில் கொள்ளை லாபம் அடித்தவர்கள் பதுக்காமல் யோக்கியமாக வரிகளைச் செலுத்த வேண்டும். சர்க்கார் செலவினங்களில் இந்த வருஷம் நாற்பது கோடி ரூபாயும் அடுத்த வருஷம் எண்பது கோடி ரூபாயும் குறைக்க வேண்டும். சில்லரை விலை வாசிகளில் பத்து சத விகிதம் குறைக்க வேண்டும். - இவைதான் நிதி மந்திரி தயாரித்துள்ள திட்டத்தின் முக்கிய அம்சங்கள். ஏட்டிலுள்ள இந்தத் திட்டம் அனுஷ்டானத்தில் வர எவ்வளவு காலமாகுமோ? அது எப்படியாயினும், உடனடியாக விலைவாசிகள், குறிப்பாக உணவுப் பொருள்களின் விலைவாசிகள் குறைய வழி செய்ய வேண்டியது சர்க்காரின் முதற் கடமை.

— அமரர் கல்கி

(கல்கி, அக்டோபர் 16, 1949)

ரப் பிரஸ்தாரத்தில் சபையோரின் கரகோஷத்தையும் பெற்றார். ஸ்ரீ கோபால கிருஷ்ணன் வயலின் வாத்தியத்தில் நல்ல உயர்வை அடைவார் என்று நம்புகிறேன்.

ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ராவ் மிருதங்கமும், ஸ்ரீ வில்வாத்ரி ஐயர் கடமும் 'பொடி பொடி'த்துத் தள்ளி விட்டார்கள்.

● ● ●

கச்சேரியின் முடிவில் பாடகி மத்தியமாவதி ராகத்தில் "வாழிய செந்தமிழ்" பாடிக் கொண்டிருந்தபோது, யாரோ ஒருவர் (சபை நிர்வாகத்தைச் சேர்ந்தவராகவேயிருக்க வேண்டும்) அவசரமாக மேடை மீது வந்தார். ஒலி பெருக்கிக் கம்பத்தைக் கையில் எடுத்துக் கொண்டு பக்க வாட்டில் ஓடினார். பாடகியின் வாழ்த்துப் பாடல் முடிவதற்குள்ளே, திரை மறைவிலிருந்து "ஜன கண மன" என்னும் தேசிய கீதம் பயங்கரக் கூச்சலாக வெளி வந்தது. அதை டாக்டர் டாகூரின் ஆவி கேட்டிருந்தால், "என் பாட்டை ஏன் இப்படிக் கோரமாக்கி வதை செய்கிறீர்கள்!" என்று அலறியிருக்கக் கூடும். டாக்டர் டாகூர் மீது அந்த மனிதருக்கு என்ன கோபமோ தெரியவில்லை. என்ன கோபமாயிருந்த போதிலும் அதை 'வாழிய செந்தமிழ்' முடிந்த பிறகு காட்டியிருக்கக் கூடாதோ? சபை நிர்வாகிகள் தயவு செய்து கவனிக்க வேண்டும்.

(கல்கி, டிசம்பர் 25, 1949)



ராஜஸ்தான்

போக்ரன் குண்டு பரிசோதனை, வாஜ்பாய் ஆட்சியில் நிலைத்திருக்க உதவாவிட்டாலும் செல்வமணிக்கு ஒரு 'சப்ஜெக்ட்' கொடுத்திருக்கிறது.

நியாயமாக டைட்டில் கார்டில் அவர் கலாமுக்கு சலாமிட்டிருக்க வேண்டும். மாறாக, 'இந்தக் குண்டு வெடிப்பின் விளைவாக இன்னும் ஐந்து வருடத்தில் இந்தியா வல்லரசாகி விடும்(!)' என்று அந்நிய சக்திகள் கவலைப்படுவதாகவும், விளைவாக போக்ரன் விஞ்ஞானிகளை அழிக்க ஒரு நாசகாரக் கும்பலை அனுப்புவதாகவும் கதை பண்ணி விட்டார்.

அப்புறம்?

வேறென்ன! சரத்குமார் – விஜயசாந்தி கூட்டணி சதிகாரர்களை முறியடித்து, சுபம்.

இங்கே சரத்குமார், எல்லைக் காவல் அதிகாரி. பாலைவனத்தில் எதிரிப்படையை இயந்திரத் துப்பாக்கியால் சுட்டு வீழ்த்துவது தவிர மைக் டைசனாகவும் அவதாரம் எடுப்பதுதான் சிறந்த நகைச்சுவைக் காட்சி.

மறுபுறம் லேடி சூப்பர் ஸ்டார், குமுது சுப்ரீம் ஸ்டாருடன் டூயட் பாடுவது மாறுபட்ட நகைச்சுவை. இரண்டு நடுவயதுக்காரர்களின் காதல் பாடல் - ஆடலைக் காணக் கண்கோடி வேண்டும்.

தமிழனின் சகிப்புத்தன்மைக்கு ஒரு நல்ல சவால் விட்டிருக்கிறார் இயக்குநர். சர்வ மங்களம் உண்டாகக்கடவது.

படத்தில் காட்சிக்கொரு வில்லன் என்ற கணக்கில் அடுத்தடுத்துப் புதுப்புது வில்லன்கள் வந்து கொண்டே இருக்கிறாரகள். ஷூட்டிங் பார்க்க வருபவர்களுக்கெல்லாம் ஒரு வில்லன் வேடம் என்கிற செல்வமணியின் பெரிய மனசைப் பாராட்டலாம். ஆனால், படத்தோடு ஒன்ற முடியாமல் செய்யும் ஜவ்வுத்தனமையைத் தன் ட்ரேட் மார்க்காகக் காட்டி, இறுதியில் அவரே மெயின் வில்லனாகியிருப்பதைக் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

ஆக்ஷன் படத்துக்கேற்ற அட்டகாசமான பின்னணி இசை தந்திருக்கும் இளையராஜாவை மட்டுமே பாராட்ட முடிகிறது.

மற்றபடி, வாஜ்பாயிக்கு உதவாத போக்ரன், செல்வமணிக்கும் உதவப் போவதில்லை என்பதுதான் நிஜம்.

— கே.பி.எஸ்.

மனநோயால் பாதிக்கப்பட்ட பெண்கள் நிலை பரிதாபகரமானது. மருத்துவமனைகள் அவர்களைச் சேர்த்துக் கொள்ளுவதில்லை. அப்படியே சேர்த்துக் கொண்டாலும், சிகிச்சை முடிந்த பிறகு குடும்பத்தினர் அவர்களை ஏற்றுக் கொள்ளுவதுமில்லை. எனவே வீதிக்குத் தள்ளப்படுகிறார்கள். வீதிக்கு வந்த பிறகு, மறுபடியும் நோய் தலைதூக்குகிறது....



மும்பை, நாயர் ஹாஸ்பிடலின் மனநல மருத்துவ வார்டு. வீதிகளில் அலைந்து கொண்டிருந்த ரூபாவை, 'பிரயாஸ்' என்ற தொண்டு நிறுவனம் இங்கேதான் கொண்டு வந்து சேர்த்தது.

ஷிஸோஃப்ரனிக் என்பார்களே, அந்த மனச்சிதைவு நோய் ரூபாவுக்கு. எல்லாம் சரியாகி விட்டது, வீட்டுக்குப் போகிறேன் என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தாளே தவிர, வீடு எங்கே இருக்கிறது என்று சரியாகச் சொல்லத் தெரியவில்லை. ரூபா மாதிரி நிறையப் பேர். "பம்பாயின் சபர்பன் ஸ்டேஷன்களில் ஸ்டேஷனுக்கு இரண்டு பேராவது இப்படி இருப்பார்கள்!" என்கிறார் 'பிரயா'ஸின் சந்தா ஜாதவ்.

பொது மருத்துவமனைகளில் மனநோய் பாதித்த பெண்களைச் சேர்ப்பது எளிதான காரியமல்ல. ரூபாவைச் சேர்க்க, 'பிரயாஸ்' பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. ரூபாவைக் அழைத்துக் கொண்டு, போலீஸ் துணையுடன், அபலைப் பெண்கள் விடுதிக்குச் சென்றபோது, மனநோய் பிடித்த பெண்களைச் சேர்க்க இடமில்லை என்று கதவைச் சாத்தி விட்டார்கள். பிச்சைக்காரர் விடுதிக்கு அழைத்துக் கொண்டு போனால், பிச்சைக்காரர் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் அவள் பிடிபடவில்லை என்று நிராகரித்தார்கள்! நாயர் ஹாஸ்பிடலுக்கு அழைத்துக் கொண்டு போன போது, 'உறவினர் எங்கே?' என்று குடைந்து எடுத்து விட்டார்கள். அவர்களிடம் கெஞ்சிக் கூத்தாடி, எங்கள் 'பிரயாஸ்' ஊழியர்கள் இரண்டு பேரை அனுப்பி வைக்கிறோம். அவர்கள் இரவும் பகலும் இவளைப் பொறுப்பாகப் பார்த்துக் கொள்வார்கள் என்று உறுதி அளித்த பிறகே அனுமதி கொடுத்தார்கள். "இவர்களுக்கு கார்டியன் என்ற பொறுப்பை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் மருத்துவ மனைகள் எங்



களை நம்புவதில்லை. எந்தச் சட்டத்தின் கீழ் இந்த மருத்துவமனைகள் இவர்களுக்கு அனுமதி மறுக்கின்றன என்றே புரிபடவில்லை!" என்கிறார் 'பிரயா'ஸின் விஜய் ராகவன்.

"இதில் வருத்தமளிக்கக்கூடிய விஷயம் என்னவென்றால், குடும்பத்தினர் சும்மா கொண்டு வந்து நோயாளிகளைத் தள்ளி விட்டுப் போய்விடுகிறார்கள். எழுபது சதவிகிதத்துக்கு மேற்பட்டவர்கள் குணமாகி, வழக்கம் போல வேலை செய்கிற நிலைமை வந்த பிறகு, யாரும் அவர்களைத் திரும்ப அழைத்துக் கொள்வதில்லை! அரசாங்க ஆஸ்பத்திரிகள் என்ன தர்மச் சத்திரமா? இவர்கள் இங்கேயே தங்கிக் கொண்டிருந்தால் புதிதாக வரும் நோயாளிகளுக்கு இடம் கிடைக்குமா?" என்கிறார் டாக்டர் நிலேஷ் ஷா. இவர் லோகமான்ய திலக் மருத்துவமனையின் மனநலப்பிரிவு மருத்துவர்.

எங்கே போவார்கள் இந்தப் பெண்கள்?

பல குடும்பங்களில், மனநோய் குணமான பெண்களைத் திரும்ப அழைத்துக் கொள்ளு வதில்லை. மருந்துகளைத் தொடர்ந்து கொடுத்தால் இவர்கள் குணமடைவார்கள் என்று சொன்னாலும் அவர்கள் கேட்பதில்லை. பல கணவன்மார்கள், திரும்பிக் கூடப் பார்ப்பதில்லை. இன்னும் ஒரு சான்ஸ் கொடுங்களேன் என்று கெஞ்சினால் கூட, யாரும் சம்மதிப்பதில்லை.

மனநல மருத்துவ ஊழியர்கள் பலரும், ஆண்கள் மனநோய் வந்து பாதிக்கப்பட்டால், மனைவி அவனை அக்கறையோடு கவனித்துக் கொள்வதைச் சுட்டிக்காட்டுகிறார்கள். ஆனால் இதுவே பெண்களுக்கு மனநோய் வந்து விட்டால், பிறந்த வீட்டுக்கு அனுப்பி விடுகிறார்கள். ஒரே ஒரு புண்ணியவான் மட்டும் 'ஆறு மாதம் டயம் தருகிறேன். குணமாகி வந்தால் வைத்துக் கொள்கிறேன்' என்று சொன்னார். அவளுடைய அம்மா பாவம், அவளை டாக்டரிடம் அழைத்துப் போய், ஒழுங்காக மருந்துகளை வாங்கிக் கொடுக்கிறாள். சாதாரணமாக இம்மாதிரி மனநோயாளிப் பெண்கள் நிலை - ஒன்று பிறந்த வீடு, இல்லை என்றால் நடு வீதி!

ஆண்களை விட, பெண்களைத்தான் மனநோய் அதிகம் தாக்குகிறது என்கிறார் டாக்டர் ராஜேஷ் பாரிக். "உலகம் முழுதும் எடுக்கப்பட்ட ஒரு புள்ளி விவரப்படி, மன அழுத்தம் - டிப்ரஷன் - தான் பெண்களைத் தாக்கும் நம்பர் ஒன் நோய். WHO வெளியிட்டிருக்கும் ஆராய்ச்சி அறிக்கை இதை உறுதி செய்கிறது" என்கிறார் பாரிக்.

"அவர்களின் ஹார்மோன்கள் காரணமாகவும், கலாசார ரீதியாகவும் மனநோய் பெண்களைத் தாக்குகிறது. ஆண் உடல் நலம் சரியில்லை என்றால் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம். பெண்கள் விஷயம் அப்படி அல்ல. டிப்ரஷன் வந்த பெண்மணி, வீட்டில் சும்மா இருந்தால், அவளைச் சோம்பேறி என்று முத்திரை குத்தி விடுவார்கள்" என்கிறார் பாரிக். இதனால் பிரச்னை இன்னும் சிக்கலாகிறது.

அந்தேரியில் இருக்கிற அந்தாக்ஷி ஆசிரமம், பார்வை இழந்த பெண்களுக்குத்தான் புகலிடம் கொடுத்து வந்தது. பிறகுதான் மனநோய் பாதிக்கப்பட்ட பெண்களுக்கும் இடம் கொடுத்தது. ஆனால் இவர்கள் எல்லாருமே ஆதரவற்ற அனாதைகள் அல்ல. பலருக்குச் சொத்து இருக்கிறது. தாக்ஷாவின் சகோதரர் ஏர் இந்தியாவில் ஓர் உயர் அதிகாரி. ஆனால் அவள் ஒரு பெரிய சுமை என்கிறார்! மனநோய் பாதிப்புள்ள 22 பேரில், 18 பேர் திருமணம் ஆனவர்கள். இவர்களில் 10 பேர் செல்வச் செழிப்பான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

சிரத்தா புனர் வாழ்வு அமைப்பு வீதிகளில் திரியும் மனநோயாளிப் பெண்களை அழைத்து வந்து சிகிச்சை அளிக்கிறது. ஆனால் இவர்கள் குணமாகித் திரும்பிப் போவதற்குள் கணவன்மார்கள் மறுமணம் செய்து கொண்டு விடுகிறார்கள். "அவர்களை ஆயுசு முழுக்க வைத்துக் காப்பாற்ற வேண்டியிருக்கிறது'' என்கிறார் டாக்டர் ஸ்மிதா வட்வானி.

தொழிற்சாலை ஒன்றில் வேலை பார்த்து வந்த கருணா ஷிசோஃப்ரனியா நோய் தாக்கியதும், வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்டாள். போலீஸ் அவளை 'சிரத்தா'வில் கொண்டு போய்ச் சேர்த்தது. அவள் கணவன் அவளை விவாகரத்து செய்தான். அவளை அவள் பெற்றோரும் ஏற்கவில்லை. கணவனும் ஏற்கவில்லை!

ஆக, பெண் என்பவள் இன்னமும் ஒரு மனுஷியாக - ஏன் ஒரு ஜீவனாகக் கூட மதிக்கப்படுவதில்லை என்பதற்கு மனநோயால் பாதிக்கப்பட்ட பெண்களையும், அதிலிருந்து குணமடைந்த பெண்களையும் இந்தச் சமூகம் நடத்தும் கேவலமான முறைகளிலிருந்து தெரிகிறது. முதலில் இதற்கு நாம் ஏதாவது செய்வது அவசியம்.

— சித்தார்த்

நன்றி : HUMANSCAPE

"ஓர் ரூபா... ஓரே ரூபா... ஒரு லட்சம் ரூபா! போனா வராது. ஓரே ரூபாண்ணே. அப்பால பங்களா கட்டலாம், கார்ல போவலாம். கால் மேல கால் போட்டு உக்காந்து கோழிக் கால் சூப்பா குடிக்கலாம். ஓர் ரூபா... ஓரே ரூபா! ஒரு லட்சம் ரூபா..."

சீட்டு விரித்த மாதிரி லாட்டரிச் சீட்டை விரித்துப் பிடித்துக் கொண்டு அந்தச் சிறுவன் ஒரு லட்சத்தை ஒரு ரூபாய்க்குத் தந்தே தீரும் துடிப்புடன் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தான்.

சரியான வியாபாரக் குரல். படிய வாரிய தலை. பட்டைக் குங்குமம். ஆனால் அழுக்



குச் சட்டை, முட்டியில் கிழிந்து தைக்கப்பட்ட கறுப்புப் பேண்ட்.

காலில் செருப்பில்லை. பதிலுக்கு கண்ணில் நெருப்பிருந்தது. வாங்காமல் விட மாட்டேன் என்பது போல அவன் வசனம் பேசி ஆசை மூட்டி அலைந்து திரிவதில் ஒருவகை ரசமும் எனக்கு இருக்கத்தான் செய்தது.

இன்று நேற்றா பார்க்கிறேன்? ஏழெட்டு மாதக் காட்சி.

மதுரை பஸ் ஸ்டாண்டில் பஸ்ஸுக்காக நானும் என்னைப் போல பல சகாக்களும் காத்திருக்கவேண்டும் என்பது எந்த ஜென்மத்து சாபமோ தெரியாது.

மதுரைக்கு வெளியில் புல் கூட முளைக்க மறுக்கும் ஒரு வறண்ட நிலப்பகுதியில் இருக்கிறது எங்கள் தொழிற்சாலை.

மூன்று ஷிப்ட் கொண்ட ஒரு யந்திரச் சுழற்சியில் பஸ் ஸ்டாண்டில் காலை மாலை இரவு என்று எல்லா கால நிலையிலும் நாங்கள் பஸ்ஸுக்காகக் காத்திருந்தாக வேண்டும்.

அப்படிக் காத்திருக்கும் சமயத்தில் ஏகக் கூத்துகளைப் பார்க்கலாம். அதில் இந்த லாட்டரிச் சிறுவனின் ஆசை வசனம் ஒரு கண்டைக்காய்தான்.

அழுகல் பேரீச்சம்பழத்தை அம்பாரமாக

இந்திரா சௌந்தர்ராஜன்

குவித்து வைத்துக் கொண்டு திருட்டுத் தராசோடு நடக்கும் வியாபாரத்தில் இருந்து, அடுத்த நாளே கருகப் போகும் செப்புச் சங்கிலியைப் பதினெட்டு காரட் தங்கம் என்று சொல்லி விற்கப் பார்க்கும் இந்திர ஜாலம் வரை ஏகக் காட்சிகள்.

இதில் ஒருவன் பேனா விற்பான் பாருங்கள். படு போஷாக்கான காட்சி அது. பருத்த அட்டை மேல் கிறுகிறுவென எழுதிக் காட்டி விட்டு அப்படியே பேனா முனையால் அந்த அட்டையை சதக் சதக் எனக் குத்தி 'குத்தலாம் குடையலாம் கும்முன்னு எழுதிக் கலக்கலாம். காதல், மோதல் காரசாரமான கதை – குறிப்பா மர்மக் கதையை மணக்க மணக்க எழுதலாம். கடைக்குப் போனா கண்ணாடி ஷோகேஸ்ல வெச்சு அம்பது ரூபாம்பாங்க. இங்கே விளம்பரத்துக்காகத் தாரேன். அஞ்சே ரூவா! கூடவே மூணு பொருள். கண்ணாடி, ரப்பர், கன் மைன்னு மூணு பொருள். வாங்க சார், வாங்கம்மா, வாங்க்கா, வாங்கண்ணே, வாங்க பெரிசு, அஞ்சே ரூவா... அஞ்சே ரூவா...'



1 குபேரசாமி

நான் பார்த்துக் கொண்டே நிற்பேன். வயிற்றுப் பாட்டுக்காக ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் நமது பர்ஸை குறிவைத்துச் செய்யும் சபதபமல்லவா அது? மதுரைக்காரர்களுக்கு நெற்றியை நன்றாகப் படிக்கத் தெரியும்.

நாகர்கோவில்காரர்கள் நெற்றி என்றால் அதில் ஏமாளிகள் என்று பெரிய எழுத்தில் எழுதியே ஒட்டியிருக்குமோ என்னமோ?

'வாங்க அண்ணாச்சி' என்று வரவேற்று ஊளை ஆரஞ்சு, புளித்த திராட்சை, அழுகல் பேரீட்சை என்று சகலத்தையும் தலையில் கட்டுவதில் ஒரு சாதனையே நடத்திக் காட்டுவார்கள்.

நடுவில் ஒருவன் அழுதபடி வந்து துணி விற்பதைச் சொல்லியே தீர வேண்டும்.

"சார், சார்! அருமையான பாலியெஸ்டர் சட்டைத் துணி சார்! நூறு ரூவா துணி சார்! எழுபத்தஞ்சு ரூவா. பில்லக் கூடக் காட்றேன் சார்!"

"ஏனக்கு விருதுநகர். ஒரு வேலையா மதுரை வந்தேன். வந்த இடத்துல சட்டைத் துணி வாங்குனேன். வழியில பர்ஸ் தொலைஞ்சு போச்சு. ஊருக்குப் போயாகணும். என்ன சார் பண்ண... பாத்து போட்டுக் கொடுங்க சார்..." என்று ஆஸ்கார் விருதுக்குத் தகுதி பெறும் தினுசில் ஏற்ற இரக்கம் மிகுந்த பேச்சோடும் வருத்தத்தோடும் ஒருவன் ஒவ்வொரு பஸ்ஸிலும் ஏறி இறங்கிக் கத்தாழை நாரில் ஆன கால் காசு பெறாத சட்டைத் துணியைத் தலையில் கட்டப் பார்ப்பான்.

ஒருமுறை வாங்கி உதைபட்ட பிறகுதான் நமக்கும் ஞானம் வரும். கண்டக்டர் மட்டும்

நமுட்டுச் சிரிப்புடன் கண்டு கொள்ளாமல் போய் வந்து கொண்டிருப்பார்.

ஒருமுறை நான் ஏமாறப் பார்த்து விளிம்பில் தப்பித்தேன். கண்டக்டரை கூப்பிட்டு, "இப்படி டுபாக்கூர் பார்ட்டியை எல்லாம் பஸ்ல ஏத்தறியே தலைவா நியாயமா?'' என்று கேட்டும் விட்டேன்.

நக்கீரனைப் பொசுக்கும் முன் சொக்கநாதன் பார்த்தானே ஒரு பார்வை!

"அவனை நான் பஸ்ல ஏத்தாட்டி அவன் கத்தி என் வவுத்துல ஏறும். தேவையா எனக்கு? நீங்கதான் சார் ஷுகுரா இருக்கணும். உங்களுக்கென்ன பி.எஃப்., கிராஜுட்டி, அந்த லோனு, இந்த லோனு



''மேடையில நான் அ.இ.ப. கட்சியின் ஊழல்களை அம்பலப்படுத்தி, அந்தத் தலைவரின் முகத்தைக் கிழித்து விட்டேன்.''

''நாசமாப் போச்சு... இதுக்குத் தான் அடிக்கடி கட்சி மாறவேண்டாம்னு சொல்றது... இப்போ நீங்க இருக்கிற கட்சிதான் அ.இ.ப.!''

– வெ. நாகராஜ்

மெடிக்கலுன்னு ஆயிரம் வசதிங்க. எங்களுக்கு என்னா இருக்குது? அவன் ஒரு சட்டை பிட்டு வித்தா ஒரு பத்து ரூவா வெட்டுவான். தீபாவளிக்கு தீபாவளி கூட நீங்க தர மாட்டீங்களே..."

கண்டக்டரின் விளக்கத்தில்தான் எத்தனை பொருளாதாரச் சிந்தனை!

நான் சிந்தித்தவண்ணம் நின்று கொண்டிருந்து விட்டு, எனக்கான பஸ் வரவும் பின் சீட்டிலாகப் பார்த்து ஏறி அமர்ந்தும் கொள்வேன்.

நான் ஒரு சொற்ப தூரப் பயணி. அதனாலே சீட்டில் உட்கார்ந்திருந்தாலும் கண்டக்டர் கடுப்பில் இருந்தால் எழுப்பி விடுவார். சமயங்களில் பஸ் கிளம்பி பஸ் ஸ்டாண்ட் வளைவில் போகும் போது அரைமனதாக என்னைப் பார்க்க ஓடிப் போய் ஏறிக் கொண்டு வியர்வையை வழிப்பேன். நான் மட்டுமில்லை எங்கள் கூட்டத்துக்கே இப்படி அனுதினமும் ஓடுவதுதான் வேலை.

என்னைப் போலத்தான் டாவ்.. தமிழ் மணியும்.

'டாவ்' அவன் கேரக்டர் நிமித்தம் எங்கள் தொழிலக அன்பர்கள் மனமுவந்து அளித்த பத்மஸ்ரீ போன்ற விருதாகும்.

பில்கிளின்டன் மோனிகா லெவன்ஸ்கி விவகாரத்தில், தான் ஆரம்பத்திலேயே எச்சரித்ததைக் கேட்கவில்லை; அதனால்தான் அவர் அவஸ்தைப்படுகிறார் என்று டாவ் தமிழ்மணி பேசும் போது கேட்க வேண்டும். பிளந்த வாயை மூடத் தோன்றாது. நாம் நம்புகிறோம், நம்பவில்லை என்பதைப் பற்றிய கவலையோ பிரக்ஞையோ இன்றி எப்படித்தான் இப்படி அடித்து விடுகிறானோ?

'நாலு பேர் தன்னைப் பார்க்க வேண்டும். தன் பேச்சைக் கேட்க வேண்டும் வியந்து கொண்டே இருக்க வேண்டும்.' இது மட்டும்தான் அவன் எதிர்பார்ப்பு என்பது கடந்த பதினைந்து வருடங்களாக மாத்ருபூதம் போல மனக்கூறுகளை அளந்து நான் கணித்து வைத்திருக்கிறேன்.

பஸ் ஸ்டாண்டில் கால் கடுக்க நின்று கொண்டிருக்கும் தருணங்களில் தமிழ் மணி இருந்தால் பொழுது போவதே தெரியாது. அன்றைய நாட்டு நடப்பை ஒட்டிய சமாசாரங்களாக எடுத்து கொத்திக் கிளறி குருமா சேர்த்துச் சுடச்சுட அவன் வழங்கும் போது சினிமா, டீவி போன்ற பொழுது போக்குச் சமாசாரங்களே தேவையில்லை என்று தோன்றும்.

அதிலும் வாஜ்பாய், ஜெயலலிதா ஊடல் கூடல் பற்றி அவன் பேசும் போது சிரித்து மாளாது.

இப்படிப்பட்ட டாவ் தமிழ்மணி கடந்த பத்து நாட்களாக வேலைக்கு வரவில்லை.

புருனே சுல்தானுக்கு ஏதோ பிரச்னை. தீர்த்து வைக்கப் போயிருப்பதாகச் சிலர் அவன் பாணியில் சொல்லிக் கொண்டிருக்க, தமிழ்மணி ஒரு வாரத் தாடை முடியோடு பஸ் ஸ்டாண்டுக்குள் பிரசன்னமானபோது எனக்கு என்றில்லை எல்லோருக்குமே ஒரு சந்தோஷ பரவசம் ஏற்படத்தான் செய்தது.

"என்னா தமிழ் ஆளைக் காணோம்... எங்க போயிட்டே..."

"ப்ச்ச்... ஒரு பாம்பே பார்ட்டிக்கு பிராப்ளம். அதான் வந்தாகணும்ன்னான். போய்ட்டேன்."

"என்னாச்சு... பிராப்ளம் சால்வ்டா?"

"தோடா... நான் போயிருக்கேன். சால்வாகாம இருக்குமா? என்னா கொமார் கேக்கறே நீ?"

"சரி போறது போறே, லீவ் லெட்டர் கொடுத்துட்டுப் போலாம்ல?"

"ஏன் டிபார்ட்மென்ட்ல ஒப்பாரி வெச்சானா சூப்பு..."

"பின்னே.. இன்னிக்கு மட்டும் நீ வரலேன்னு வை. நோட்டீஸ் போர்ட்ல போட்டுருப்பாங்க."

"கிழிச்சாங்க. அப்பால அவன் சமாசாரத்தைப் பூரா நான் நோட்டீஸ் போர்ட்ல போட்டா தாங்குவானா அவன்?"

"அது என்ன அவன் சமாசாரம்...?"

"அது இருக்குது ஒரு மூட்டை... சின்ன வீட்ல ஆரம்பிச்சு, கமிஷன் காண்ட்ராக்ட் ஊழல் வரைல ஒரு மூட்டைல்ல இருக்குது?"

தமிழ்மணி தான் தப்பிக்க பாதை போட்டுப் பேசும் அந்தத் தருணத்தில்தான் திரும்ப வந்தான் வழக்கமாக வரும் அந்த லாட்டரிச் சீட்டு விற்கும் சிறுவன். *

"ஓர் ரூவாண்ணே. ஒரே ரூவாண்ணே! விழுந்தா லட்சம்ணே. கார்ல போலாம். கால் மேல கால் போட்டு பிரியாணியா சாப்பிட்லாம். ஒரு ரூவாண்ணே. ஒரு சீட்டு வாங்குங்கண்ணே..."

சுத்திச் சுத்தி வந்தான். சரியாக போணி ஆகவில்லை போலும். கையில் சீட்டு அப்படியே இருந்தது. தமிழ்மணிக்கு சிவுசிவு என்று சீவிக் கொண்டு வந்தது கோபம்.

"டேய் போங்கு. போடா அப்பால. ஓர்ருவாய்க்கு ஒரு லட்ச ரூபாய தன்ற மூஞ்சியப் பாரு. கார்ல போலாமாம் பிரியாணி சாப்பிடலாமாம்... சாப்ட்டு? திரும்ப இந்த பஸ் ஸ்டாண்டுல வந்து நின்னு சிங்கி அடிக்கவா? வெண்ணே."

"அப்படிச் சொல்லாதீங்கண்ணே. ஒரு சீட்டு வாங்குங்கண்ணே லட்ச ரூவாண்ணே..."

"டேய் போங்கு... இப்பத்தானடா சொன்னேன், போடா அப்பால. இத வாங்கறதுக்குத்தான் ஒரு கோஷ்டி நாயா அலையுதுல்ல, அவங்ககிட்ட போடா."

"இன்னிக்கு வியாபாரமே சரியில்லண்ணே. யாரும் வாங்க மாட்டேங்கறாங்க. என் கை ராசியான கை அண்ணே. நீங்க மட்டும் நம்பி வாங்குங்க. விழுவாட்டி கேளுங்கண்ணே."

"ராசியான கைய்யா... கட்டாயம் உழுவுமாக்கும்... அடடா... பை கொண்டு வரலியே - எதுலடா ரூவாயை போட்டு எடுத்துக்கிட்டுப் போக?"

"வாங்குங்கண்ணே... ஒரு சீட்டுண்ணே."

"ஒண்ணுல்ல... பத்து வாங்கறேன். உழுவாட்டி என்னா பண்றது?"

தமிழ்மணிக்கு இன்று ஆள் மாட்டியாயிற்று.

"உழுவும்ணே.. கட்டாயம் உழுவும்ணே. நம்புங்கண்ணே."



"என் மருமகன் ரொம்பவும் பொசசிவ்!"

"அப்படியா?"

"குழாயடில என்னிக்காவது சண்டை போட்டா, நா இங்கே இருக்கறப்ப அங்கே உங்களுக்குச் சண்டை போட எப்படி மனது வந்ததுனு கேட்கறா!"

– அம்பை தேவா

"சரி நம்பறேன். ஒருக்கால் உழுவாட்டி?"

தமிழ்மணி விடாமல் அவனைப் புரட்டி எடுக்க, அவனும் சளைக்காமல் பதில் சொல்லிக் கொண்டிருந்தான்.

"உம், சொல்லுடா டவுசர். உழுவாட்டி என்னா பண்றதாம்?"

"உழுவும்ணே. நம்புண்ணே."

"சரி ஒரு பந்தயம் வெச்சுக்கலாமா?"

"என்னண்ணே?"

"உழுவாட்டி டிக்கெட் காசை நீ தந்துடணும். உழுந்தா உழுவறதுல பாதிய நான் உனக்குத் தரேன். என்ன சொல்றே?"

"......................................"

"சொல்றா வெண்ணை. பஸ் வந்துருச்சி பார். என்னா சொல்றே?"

"சரிண்ணே..."

இஷ்ட தெய்வம் என்று ஒன்று இருக்கலாம். ஆனால் அதுதான் எல்லாமாயிருக்கிறது என்பதால் அதுவேதான் மற்ற தெய்வங்களுமாகியிருக்கிறது என்ற எண்ணம் இருக்க வேண்டும். ஒன்றைப் பிடித்துக் கொண்டதற்காக இன்னொன்றை நிந்திக்கக் கூடாது. விஷ்ணுதான் கடவுள், சிவன் ஒரு ஜீவன்-அல்லது சிவன்தான் கடவுள், விஷ்ணு ஒரு ஜீவன்-என்றால் கூட ஒரு மூர்த்தியிடம் துவேஷம் பாராட்ட இடமில்லை, ஒருத்தர் ஸ்வாமி, இன்னொருத்தர் பக்தர் என்றாலும் பக்தருக்குரிய மரியாதையை செய்யத்தானே வேண்டும்? சிவன் விஷ்ணுவுக்கு பக்தன்; அல்லது சிவனுக்கு விஷ்ணு பக்தன் என்றே சொல்கிறார்களே தவிர இருவருமே பரஸ்பரம் துவேஷித்துக் கொள்ளும் விரோதிகள் என்று யாரும் சொல்லவில்லையே. அப்படியிருக்க அவர்களில் ஒருவரை நாம் ஏன் துவேஷிக்க வேண்டும்?



அருள்வாக்கு

ஒரு புராணத்தில் சிவன் விஷ்ணுவை நமஸ்கரிக்கிறார்; இன்னொரு புராணத்தில் விஷ்ணு சிவனை நமஸ்கரிக்கிறார் என்பதால் இவர்கள் சின்னவர்களாகி விடவில்லை. சிவனை நமஸ்காரம் பண்ணு என்று சிவனே சொல்லாமல் விஷ்ணு அதை நமக்குக் காரியத்தில் உபதேசிக்கிறார்; இப்படியே நமக்கு விஷ்ணு பக்தி உண்டாக்கவே சிவன் விஷ்ணுவைப் பூஜிக்கிறார். ஜனங்களின் விதவிதமான ருசிக்குத் தகுந்த மாதிரி ஒரே பரமாத்மா வேறு வேறு ரூபத்தில் வருகிறார். அவரவருக்கும் தங்கள் இஷ்ட மூர்த்தியிடம் திடபக்தி உண்டாவதற்காக, தாமே இன்னொரு மூர்த்தியால் இந்த மூர்த்தியை நமஸ்காரம் பண்ணுகிறார். பகவானைப் பூஜிக்கிற மாதிரியே பாகவதர்களையும் பூஜிக்க வேண்டும் என்று வைஷ்ணவர்கள் சொல்கிறார்கள். சிவனைப் போலவே சிவனடியாரையும் வழிபட வேண்டும் என்று சைவர்களும் சொல்கிறார்கள். எனவே, இவர்களில் ஒருத்தர் இன்னொருத்தரைப் பூஜை செய்கிறார் என்னும்போதுகூட, பூஜை செய்பவரை நாம் நமஸ்கரிக்கத்தான் வேண்டும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.

அவன் பலவித நினைப்போடு தலையாட்ட, தமிழிடம் ஒரே ஆச்சரியம். ''தராட்டி கண்ணு முழிய நோண்டிப்பிடுவேன்'' என்று பத்து சீட்டை வாங்கிக் கொண்டு ஒரு பத்து ரூபாயைத் தட்டி விட்டான் தமிழ்மணி.

அந்தச் சிறுவனிடம் இமாலயம் ஏறி கொடி நட்ட திருப்தி.

டாவ் தமிழ்மணியும் என் பக்கம் திரும்பியபடியே பத்து டிக்கெட்டையும் கசக்கிப் பந்தாக்கி பாக்கெட்டில் போட்டுக் கொண்டான்.

"ஏய்... என்னப்பா காசைக் கொடுத்து வாங்கிட்டுக் கசக்கிப் போட்றே..."

"அட போ கொமாரு! லாட்ரி விழுந்து தான் விடியப் போவுதாக்கும்? இதெல்லாம் சும்மா. அப்படியே விழுந்தாலும் ஏதாவது நல்ல காரியத்துக்குக் கொடுத்துருவேன். ஆனா அதெல்லாம் நடக்கப் போறதில்ல. நீ வேணா பார், இந்தப் பய இனி என்கிட்ட என்ன பாடுபடப் போறான்னு. என்னப் பார்த்தாலே ஓடப் போறான் பாரு..."

சொன்னபடியே இளம்பப் பார்த்த பஸ்ஸில் ஏறினான். நானும்...

அன்று பஸ்ஸுக்குக் காத்திருக்கும் போது அந்த ஒர்ருவா சிறுவன் என்னை நோக்கி ஓடி வந்தான்.

"சார் சார், எங்க சார் நம்ம தமிழ் சார்?" என்றான்.

"என்னாடா... இன்னிக்கும் சீட்ட தலைல கட்டப் பாக்கறியாக்கும்"

"நான் கட்ட வேணாம் சார். என் ராசி தான் நிருபணமாயிடிச்சுல்ல? அவர் வாங்குன ஒரு சீட்டுக்கு லட்ச ரூவா விழுந்துடிச்சு சார்..." என்றான்.

(தொடரும்)

பாரத ஸ்டேட் பாங்கு அதிகாரிகள் சங்க ஆய்வு மற்றும் பயிற்சி மையம்

229, என்.எஸ்.சி. போஸ் சாலை, மெர்கன்டைல் பிளாஸா,
தபால் பெட்டி எண். 1279, சென்னை – 600 001.
தொ. பே : 5340226, 5227170, 5228773 ஃபாக்ஸ்: 5261013

பேச்சு மொழி ஹிந்தி டிப்ளமோ சான்றிதழ்

(ஹிந்தி மொழியில் இயல்பாகவும், சரளமாகவும், பேச, உரையாட பயிற்சி)

1. நுழைவுத் தகுதி : ஆர்வமுள்ள அனைவருக்கும்
2. பாடத் திட்டம் : எழுத்துக்களை செவ்வனே உச்சரிக்கப் பயிற்சி, அடிப்படை பேச்சு மொழி இலக்கணம், பல சூழ்நிலைகளில் பேசுவதற்கு பயிற்சி. பயிற்சியின் இறுதியில் 'பேச்சு மொழி ஹிந்தி சொற்களஞ்சியம்' வழங்கப்படும்.
3. பயிற்று மொழி : தமிழ்
4. பயிற்சி காலம் : 6 மாதங்கள் (ஜூலை 1999 முதல் டிசம்பர் 1999 வரை)
5. நேர்முகப் பயிற்சி : மூன்று நேர் முகப் பயிற்சி வகுப்புகள். (ஞாயிறு அல்லது பொது விடுமுறை நாளில்) ஒவ்வொரு நாளுக்கு நடத்தப்படும். (பயிற்சியின் போது மதிய உணவும் அளிக்கப்படும்)
6. தேர்வு : டிசம்பர் 99, (இறுதி வாரத்தில்) தேர்வு நடத்தப்படும். தேர்ச்சி பெற்றவர்களுக்கு 'DIPLOMA IN CONVERSATIONAL HINDI' சான்றிதழ் வழங்கப்படும்.
7. நேர்முகப் பயிற்சி மற்றும் தேர்வு மையம் : 1) சென்னை மற்றும் 30 மாணவர்களுக்கு மேற்பட்ட இடங்களில் நேர்முக வகுப்புகள் நடத்தப்படும். 2) தேர்வு சென்னை, திருச்சி, கோயமுத்தூர், ஹைதராபாத் மற்றும் தில்லியில் நடத்தப்படும்.
8. பயிற்சி கட்டணம் : ரூ. 425/- (தேர்வு மற்றும் நேர்முகப் பயிற்சிக் கட்டணம் உட்பட)

பயிற்சியில் சேர விருப்பமுள்ளவர்கள் ரூபாய் 75/க்கான வரைவோலை (D.D)/ உள்ளூர் காசோலை (Local Cheque) S.B.I.O.A. Institute, Chennai என்ற பெயருக்கு, சுயவிலாசமிட்ட தபால் தலையுடன் (ரூ. 6/-) கூடிய உறையுடன் மேற்கண்ட முகவரிக்கு எழுதவும். (பயிற்று மொழியைக் குறிப்பிட்டு எழுதவும்) இந்த ரூ. 75/- பயிற்சி கட்டணத்தில் கழித்துக் கொள்ளப்படும்.

நிர்வாக இயக்குநர்.

இப்பயிற்சி ஆங்கிலத்திலும் நடத்தப்படுகிறது. விபரங்களுக்கு 6.6.99 'கல்கி'யை பார்க்கவும்.

நேரிலும் தபாலிலும்

ஓவிய ஆசிரியர் பயிற்சி

அரசு தேர்வுக்குரியது

- இன்றைய வேலை இல்லா திண்டாட்ட காலத்தில் அரசு வேலைக்கே உத்தரவாதமளிக்கும் அற்புதமான வேலைவாய்ப்புப் பயிற்சி
- நாளைக்கே வேலை கிடைத்துவிடும் என்று நாங்கள் சொல்லவில்லை. பயிற்சியை முடித்தவுடன், அரசுப் பள்ளிகளிலும், தனியார் பள்ளிகளிலும் ஏராளமான வேலை வாய்ப்புகள் உண்டு.
- டைப்ரைட்டிங், ஐ.டி.ஐ., பாலிடெக்னிக், பட்டப்படிப்பு இவைகளோடு ஒப்பிட்டால் இப்பயிற்சியில் வேலை வாய்ப்பு அதிகம். பயிற்சி பெற்றவர் எண்ணிக்கைக் குறைவு.
- போட்டி குறைவான வேலை வாய்ப்பு.
- இடைநிலை ஆசிரியருக்குச் சமமான ஊதிய விகிதம் (அடிப்படைச் சம்பளம் ரூ 4/500,– இதர படிகளோடு சேர்த்து ரூ 6,300 வரை மாதச் சம்பளம்)
- குறைந்த பட்சக் கல்வித்தகுதி SSLC தேர்ச்சி போதும். மதிப்பெண் பற்றி கவலையில்லை. அற்புதமான அஞ்சல்வழிப்பயிற்சி, நேர்த்தியான நேர்முகப்பயிற்சி
- பயிற்சி கட்டணம் ஆயிரம், இரண்டாயிரம் இல்லை. வெறும் 800 ரூபாய் மட்டும். தவணைமுறையில் செலுத்தலாம். பயிற்சிக்காலம் நவம்பர் வரை. அரசுத் தேர்வு
- விவரப்புத்தகம் இலவசம்





விண்ணப்பிக்கவும்

AJANTHA SCHOOL OF ARTS
(GOVT. REGD. No. 1075/89/M.S/R/D)
6, MUTHU NAGAR,
(NEAR) SUNDAR THIRUMANA MANDAPAM,
POONAMALLEE, CHENNAI - 600 056.



ஆச்சரியப்பட வைத்த

என் சகோதரி அமெரிக்காவில் பப்ளிக் ஸ்கூல் ஒன்றில் பணி புரிகிறாள். அமெரிக்காவில் பப்ளிக் ஸ்கூல் என்பது நம் ஊர் அரசாங்கப் பள்ளிக் கூடம் போல. இந்தியா உள்பட பல நாட்டவர்களின் குழந்தைகளும் அந்தப் பள்ளிகளில் படிப்பார்கள்.

நான் அமெரிக்கா போய் இறங்கியதும், என் விருப்பத்தைச் சொன்னதுதான் தாமதம். மறுநாளே, தமது பள்ளிக் கூடத்தைப் போல அந்தப் பகுதியில் இருக்கிற அனைத்து ஸ்கூல்களுக்கும் பொறுப்பான அதிகாரியிடம் என்னை அழைத்துப் போய் விட்டாள். என்னை அறிமுகப்படுத்திவிட்டு, பெண்களின் பொழுது போக்குச் சங்கம் வெகு சாதாரணமாக ஒரு பள்ளிக் கூடத்தை ஆரம்பித்து, மாநில அளவில் ரேங்க் வாங்கும் மாணவர்களை உருவாக்கும் அளவுக்கு வளர்ந்த விதம் பற்றிச் சுருக்கமாகச் சொன்னவுடன், அந்த அதிகாரிக்கு வியப்பு.

"இந்தியாவிலிருந்து வந்திருக்கும் உங்களுக்கு, இந்த உதவியைக் கூட செய்யாவிட்டால் எப்படி!" என்று சொல்லிவிட்டு, உடனடியாக அவர் கட்டுப் பாட்டிலுள்ள பள்ளிகளுக்கு நான் சென்று பார்க்க அனுமதி கொடுத்தார். அது மட்டுமின்றி, தினமும் வீட்டுக்கு வந்து, என்னை அழைத்துக் கொண்டு போய், பல பள்ளிக் கூடங்களையும் பார்ப்பதற்கு வசதியாக ஒரு காரையும் ஏற்பாடு செய்து விட்டார்! அமெரிக்காவிலிருந்து யாராவது இந்தியாவுக்கு வந்து, நமது அரசாங்கப் பள்ளிக் கூடங்களைப் பார்வையிட வேண்டும் என்று சொன்னால், இது போல, சுலபமான அனுமதியும், வசதியான ஏற்பாடுகளும் சாத்தியமாகுமா என்று எனக்கு நானே நினைத்துப் பார்த்துக் கொண்டேன்.

கிண்டர்கார்டன் வகுப்புக்குச் சென்று பார்த்தபோது, அங்கேயும் குழந்தைகளுக்கு இங்கிலீஷ், கணிதம் என்றெல்லாம் பாட திட்டத்தில் வைத்திருக்கிறார்கள். ஆனால், நம் ஊர் பள்ளிகள் போல சொல்லிக் கொடுப்பதில்லை. குழந்தைகளைச் சுதந்தரமாக விட்டு விடுகிறார்கள். விளையாட்டுடன் இணைத்து பாடங்களைச் சொல்லிக் கொடுக்கிறார்கள். இந்த அணுகுமுறையை குழந்தைகள் ரொம்பவும் நன்றாக ரெஸ்பாண்டு பண்ணுகிறார்கள். விளையாட்டாகவே எதையும் சொல்லிக் கொடுப்பதால், குழந்தைகளின் ஆர்வமான பங்கேற்பைப் பெற்றுத் தந்தது. விளையாட்டு மூலமே அவர்கள் விஷயங்கள் பலவற்றையும் கற்றுக் கொண்டு விடுகிறார்கள்.

பிற நாடுகளிலிருந்து வந்து இப்பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு, ஆசிரியர்கள் பேசும் அமெரிக்க ஆங்கிலம் புரிவதில்லை. இதற்கு அங்கே பள்ளிக் கூடங்களில் என்ன செய்கிறார்கள் தெரியுமா? அத்தகைய மாண வர்களைக் கண்டறிந்து தனியே பிரித்து விடு கிறார்கள். அவர்களுக்கு, பிரத்யேக பயிற்சி கொடுக்கிறார்கள். இந்த கூடுதல் பயிற்சி, நாளடைவில், மற்ற மாணவர்களுக்கு ஈடான திறமையை அளிக்கிறது. இதில் இன்னொரு பாராட்டுக்குரிய விஷயம் என்ன வென்றால், இந்த மாதிரியான கூடுதல் பயிற்சிக்காக மாணவர்களிடமிருந்தும் கூடுதலாக கட்ட ணம் ஏதும் வசூலிக்கப்படுவதில்லை; அது மட்டுமில்லை, இது போன்ற அதிகப்படி யான வேலை செய்வதற்காக, ஆசிரியர்களும் ஓவர் டைம் போல அதிகப்படியான சம் பளம் கேட்பது இல்லை. அத்தனை ஈடுபாடு!

அதே போல, குழந்தைகளின் பெற்றோர் களும், வகுப்பு ஆசிரியர்களும் அடிக்கடி சந்திக்கிறார்கள். குழந்தை வீட்டில் எப்படி நடந்து கொள்ளுகிறது? அவனால் என்ன பிரச்னை என்று பெற்றோர்கள், ஆசிரி யரிடம் விவாதிக்கிறார்கள். ஆசிரியர்களும், வகுப்பில் அந்தக் குழந்தையின் நிலை என்ன என்று சொல்லுகிறார்.

இதைப் பார்த்துவிட்டு வந்தபின்தான்,

லாகத்தான் கற்பிக்கப்படுகிறது. உதாரணமாய் வெறுமனே நீண்ட கழுத்து வரைந்த உடனே மாணவர்கள் அது ஒட்டைச்சிவிங்கி என்று சொல்லி விடுகிறார்கள். அதே போல வால் போட்டால் குரங்கு. தும்பிக்கை போட்டால் யானை. இப்படி, அவற்றுக்குரிய பிரத்யேக அம்சங்களை குழந்தைகள் மனசில் ஆழ மாகப் பதிய வைத்து விடுகிறார்கள்.

நம் ஊரில், காலாண்டுப் பரீட்சைக்குப் பின், அரையாண்டுப் பரீட்சை வருகிற போது, காலாண்டுத் தேர்வுக்கான பாடங் கள், அதன் பிறகு, அரையாண்டுத் தேர்வு வரை நடந்த பாடங்கள் என இரண்டையும் படிக்க வேண்டும். அதே போல, முழு ஆண்டுத் தேர்வுக்கு மொத்த புத்தகத்தையும் படித்தாக வேண்டும். ஆனால் அமெரிக்கா வில் இந்த மாதிரி இல்லை. அங்கே, ஒரு பகுதியை நடத்தி முடித்ததும் ஒரு டெஸ்ட். அதிலே அந்தப் பகுதியிலிருந்து மிக ஆழ மான கேள்விகள் இடம் பெறும். அப்புறம், அந்தப் பாடப் பகுதி அத்தோடு போச்சு. அதன் பின் நடத்துவது, அடுத்த பரீட்சைக்கு. இப்படி நடத்தப்படும் தேர்வுகளை அங்கே 'சைக்கிள் டெஸ்ட்' என்று குறிப்பிடுகிறார் கள். அதைப் பார்த்து விட்டு நான் எங்கள் பள்ளிக் கூடத்திலும் இந்த சைக்கிள் டெஸ்ட் முறையை அறிமுகப்படுத்தினேன்.

அமெரிக்கப் பள்ளிகள்!

நான் எங்கள் பள்ளிக் கூடத்தில் இருந்த பெற்றோர் - ஆசிரியர் சங்கத்துக்கு புத்துயிர் அளித்தேன். பெற்றோர்கள், மாதமொரு முறை வகுப்பு ஆசிரியரைச் சந்தித்து, தன் மகன் அல்லது மகளின் முன்னேற்றம் பற்றி அறிந்து கொள்ளுவதற்கு வழி செய்தேன்.

இது தவிர, ஒவ்வொரு term முடிந்து, மாணவர்களுக்கு புரோகிரஸ் ரிப்போர்ட் வழங்கும் தினத்தன்று, பெற்றோரையும் கண்டிப்பாய் வரச் சொல்லி, பெற்றோர் - வகுப்பு ஆசிரியர் நேரடியாய்க் கலந்தாலோ சிக்கும் முறையைச் செயல்படுத்தினேன்.

மாணவ, மாணவிகள் பாடங்களை, மனப்பாடம் செய்வது என்பது அங்கே அறவே கிடையாது. எல்லாமே விஷுவ

இந்த சைக்கிள் டெஸ்ட் முறையினால், ஒவ்வொரு டெஸ்ட்டுக்கும் குறிப்பிட்ட அளவு பாடமே இருக்கும். மாணவர்கள், ஆழமாய்ப் படிக்க வேண்டும். அப்போது தான் பரீட்சையில் கேட்கப்படும் கேள்வி களுக்கு விடையளிக்க முடியும். கேள்விகள் அப்படி அமையும்! தவிர, பாடத்தில் படித்த கருத்துகளின் அடிப்படையில் யோசித்து, விடை கண்டு பிடிக்கும்படியாகவும் கேள்விகள் இருக்கும்.



படித்ததையே மீண் டும் மீண்டும் படித்து, காலாண்டு அரையாண்டு, முழு ஆண்டுத் தேர்வு எழுது வதற்கு கீழ் வகுப்புகளைப்

திருமதி. ஒய்.ஜி.பி

பொறுத்த வரை முற்றுப் புள்ளி வைத்தாகி விட்டது. ஆனாலும் மேல் வகுப்புகளுக்கு, பப்ளிக் எக்ஸாமினேஷன் என்று ஒன்று இருக்கிறதே! அதனால், சைக்கிள் டெஸ்ட் முறையை அங்கே, முழுமையாகச் செயல் படுத்துவது சாத்தியமில்லாமல் போய் விட்டது.

இன்னும் ஒரு சிறு விஷயம் என்னை மிகவும் கவர்ந்தது. நம் ஊர் பள்ளிக் கூடங் களில், முதல்மாடி, இரண்டாவது மாடிகளில் வகுப்பறைகள் இருக்கும். மணியடித்தவுடன், திபுதிபுவென்று மாணவர்கள் படிகளில் இறங்குவதும், ஏறுவதும் சகஜம். சில சமயங் களில், தடுமாறி கீழே விழுந்து சிலர் அடி படுவதும் உண்டு. ஆனால், அமெரிக்காவில் நான் பார்த்த ஒரு பள்ளியில், படிக்கட்டுப் பகுதியினை இடம், வலம் என்று பிரித்து நடுவில் பட்டையாய் ஒரு கோடு போட்டிருப் பார்கள். நம் ஊர் பிரதான சாலைகளின் நடுவே போடுவார்களே, அது போலத்தான்! அந்தப் படிக்கட்டுகளில் எந்தவித ஆர்ப் பாட்டமும்மில்லாமல் அமைதியாக இடது புறப் பாதியில் ஏறும் மாணவர்களைப் பார்த்து ஆச்சரியப்பட்டுப் போனேன். மறு பாதியை மேலே இருந்து கீழே இறங்கும் மாணவர்கள் பயன்படுத்தினார்கள். மறுபாதி காலியாகவே இருந்தால் கூட, இடதுபுறம் தான் செல்ல வேண்டும் என்கிற விதியை ரொம்பக் கண்டிப்புடன் அந்த மாணவர்கள் கடைப்பிடிக்கிறார்கள்!

எங்கள் பள்ளிக் கூடங்களிலும், அந்த மாதிரி, படிக்கட்டுகளில் கோடு போட்டு, ஏற, இறங்க வசதி செய்து விட்டேன். அதை மாணவர்களும் கடைப்பிடிக்கிறார்கள்.

எங்கள் பள்ளிக் கூடத்தில், சிறுவர் வகுப்புகளில், லஞ்ச் இடைவேளையில் குழந்தைகள் சாப்பிடும்போது வகுப்பு டீச்சரும், வகுப்பிலேயே இருந்து கவனிப் பார்கள். சரியாகச் சாப்பிடாத குழந்தையைச் சாப்பிடவைப்பார்கள். இதுவும் கூட, அமெரிக்கப் பள்ளியில் நான் கண்ட விஷயம்தான். ஆனால், அந்த அளவுக்கு இங்கே என்னால் முழுமையாகச் செயல் படுத்த முடியவில்லை.

அங்கே, என்ன செய்கிறார்கள் தெரியுமா? குழந்தைகள் வீட்டிலிருந்து லஞ்சுக்கு என்ன கொண்டு வருகிறார்கள் என்பதை டீச்சர் கவனிக்கிறார். புரோட்டீன், கார்போஹைடி ரேட், கொழுப்பு, தாது உப்புகள், வைட்ட மின்கள் என்று பலவிதமான சத்துக்களும் கொண்ட உணவு தானா அது என்று ஆராய் கிறார்கள். குழந்தையின் உணவில் ஏதாவது ஒரு சத்து, குறைபாடு இருக்கும் பட்சத்தில், என்னென்னவற்றை உணவில் சேர்த்து, அந்தக் குறைபாட்டை நீக்கலாம் என்று பெற் றோர்களுக்கு ஆலோசனை சொல்லுகிறார் கள்; குழந்தைகளுக்கும் விளக்குகிறார்கள். இதனால் சத்தான உணவு என்பது குறித்த பாடம் நடத்தாமலேயே, குழந்தைகளுக்குச் சத்துணவு பற்றித் தெரிகிறது.

இங்கே, நான் கூட மாணவர்கள் பச்சைக் காய்கறிகளை நிறைய சாப்பிட வேண்டும் என்ற நோக்கத்தில், வாரம் ஒரு நாள் கேரட், தக்காளி, வெள்ளரி போன்ற பச்சைக் காய்களைக் கொண்டு தயாரித்த 'சாலட்' எடுத்துவர வேண்டும் என்று சொன்னோம். ஆனால், இது விஷயமாக, பெற்றோர்களிட மிருந்து எங்களுக்கு முழுமையான ஒத் துழைப்பு கிடைக்கவில்லை. இதற்கு அவர் களையும் குறை சொல்ல நான் விரும்ப வில்லை.

ஆனால், இன்னமும் சில தாய்மார்கள், தங்கள் குழந்தைகளுக்கு, சாலட் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். இதைப் படிக் கிற தாய்மார்கள், வாரம் ஒன்றிரண்டு நாட் களிலாவது, தங்கள் குழந்தைகளுக்கு மதிய உணவுடன் சேர்த்து, சாலட் கொடுத்தனுப்ப லாம் என்பது என்னுடைய ஆலோசனை.

அமெரிக்காவில் பள்ளிக் கூடங்கள், வீடுகள் என்று பெரும்பாலும் மரத்தால் கட்டப்பட்டவையே. எனவே, மாணவர் களுக்கு பள்ளிக் கட்டடத்தில் திடீரென்று தீப் பிடித்துக் கொண்டால், அப்போது எப்படி தப்பிப்பது, தீயை எப்படி அணைப் பது என்று கூட சிறு வகுப்புகளிலேயே பயிற்சியளித்து விடுகிறார்கள்.

ஒரு பள்ளிக் கூடத்திற்கு நான் போயிருந்த போது, அங்கே ஏழெட்டு வயது மாண வர்கள் சிலர் சேர்ந்து ஒரு நாடகம் நடத்திக் காட்டினார்கள். அதைப் பார்த்தபோது, 'அட! இந்த வயசு மாணவர்களுக்கு இது பற்றியெல்லாம் கூடத் தெரிந்திருக்கிறதே!' என்று ஆச்சரியப்பட்டுப் போனேன். அந்த நாடகம் மதுவிலக்கு பற்றியது. அதை அவர் கள் நாடகமாக்கியிருந்த விதம் என்னை பிரமிப்பில் ஆழ்த்தியது.

(அடுத்த வாரம் சொல்கிறேன்)



• கடல் கடந்த முத்து!

● கே. சபாபதி, கோவை – 42.

? நம் நாட்டின் பாதுகாப்பைப் பற்றிய காரணங்களினால் தமது ஆதரவை விலக்கிக் கொண்டு விட்டதாக ஜெயலலிதா சொல்கிறார். ஆனால் நம்பிக்கை வோட்டுக் கோரும் விவாதத்தின் போது எந்த ஒரு அ.தி.மு.க. எம்.பியும் இதுபற்றி ஆவேசப்படவில்லையே...?

! அது உண்மைக் காரணமல்லவே; அதனால்தான் சேடப்பட்டி நம்பிக்கை வாக்கெடுப்பின் போது நிஜ காரணத்தைச் சொல்லி விட்டார் – அதாவது தி.மு.க. அரசைக் கலைக்கவில்லை என்பதே அதிருப்திக்கும் ஆதரவு வாபஸுக்கும் காரணம்.

● வாசுதேவன், பரோடா – 20.

? சூப்பர் ஸ்டார் ரஜினியின் 'முத்து' படம் ஜப்பானில் பிய்த்து உதறுகிறதாமே?

! ஜப்பானில் இருப்பவர்களும் "தப்பித் தலை" நாடுகிறார்கள் என்று தெரிகிறது.

● ஆர். ராஜதுரை, சீர்காழி.

? 'இந்தியாவில் சிறிய அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவது பெரும் பிரச்னையாக இருக்கும். இதனைக் கட்டுப்படுத்த வேண்டும்' என்று அமெரிக்க அரசியல் நிபுணர் வெர்னி கூறியிருக்கிறாரே?

! தேசியக் கட்சிகளின் யோக்கியத் தன்மை குறைந்து போவதால்தான் பிராந்தியக் கட்சிகள் தலையெடுக்கின்றன என்பதை அவர் உணரவில்லையே!

● எம். ரேவதி, மன்னார்குடி.

? தமிழகத்தில் சைக்கிள் போகும் பாதை பற்றித் தங்கள் கருத்து...?

! பஞ்சராகாமலிருக்கப் பிரார்த்திக்கிறேன்.

● ராஜதாசன், தேனி.

? பி.ஜே.பி. கூட்டணியில் சேர்ந்து இருந்ததால்தான் அ.தி.மு.க.வுக்குக் கெட்ட பெயர் ஏற்பட்டிருக்கிறது என்று முன்னாள் அமைச்சர் கா. காளிமுத்து கூறியிருப்பது பற்றி...?

! காளிமுத்து கட்ட தோசையைத் திருப்பிப் போட்டுப் படித்தால் பி.ஜே.பிக்குக் கெட்ட பெயர் வந்தது எதனால் என்பது புரியும்.

● பி. பிரகாஷ், மதுரை – 16.

? 'கடவுளின் அருள் + கடும் உழைப்பு + தன்னம்பிக்கை = இந்தியாவுக்கு உலகக் கோப்பை' என்பது சரியா...?

! இன்னொன்றைச் சேர்த்துக் கொள்ளுங்கள்; டீம் ஸ்பிரிட்.

● செ. சல்மான் பாரீஸ், பாம்பன்.

? கோயில் நிலங்களை விவசாயிகளிடம்

• 'நோ பிராப்ளம்!'



விற்கலாம் என்று கலைஞர் யோசனை கூறியுள்ளாரே?

! விற்கத் தயார் என்றுதான் கூறியிருக்கிறார். ஆனால், சந்தையில் நிலவும் விலைக்குத்தான் விற்க வேண்டும்; தவணைகள் கிடையாது; முழுப் பணம் தரவேண்டும்; தவணைக்கு வாங்கினால் விவசாயிகள் சங்கத்தினர் சில ஆண்டுகள் கழித்து, பாக்கியுள்ள தவணைகளை ரத்து செய்யச் சொல்லுவார்.... என்று எதிர்ப்படக்கூடிய அபாயங்களையும் சுட்டிக்காட்டியுள்ளாரே. மிகவும் யோசித்து, முறைப்படி இவ் விஷயத்தில் செயல்பட வேண்டும்.

• ப. சுகுமார், தூத்துக்குடி - 1.

? ரேணுகா சௌத்ரி காங்கிரஸில் இணைந்திருப்பது பற்றி...?

! காங்கிரஸுக்கு ஜஸ்ட் இன்னொரு வோட்டு!

• ச. தங்கமணி, சத்திரப்பட்டி - 2.

? எங்கள் ஆதரவு இல்லாமல் ஆட்சியில் நீடிக்க முடியாது என்ற பாடத்தை பி.ஜே.பிக்குப் புகட்டி விட்டோம் என்று 'ஜெ' கூறுகிறாரே?

! பி.ஜே.பி. அல்லது காங்கிரஸின் ஆதரவு இல்லாமல் இவரால் அரசியலிலேயே நீடிக்க முடியாதே!

• எம். அசோக்ராஜா, திருச்சி - 15.

? 'ஜெ'வின் ஊழல் இப்போது முக்கியப் பிரச்னை அல்ல என்கிறாரே திண்டிவனத்தார்...?

! அது எப்படி முக்கியப் பிரச்னை ஆகும்? எப்படி போஃபர்ஸ் ஊழலில் சோனியா, குவாட்ரோச்சி போன்றவர்களுக்கு சம்பந்தமில்லையோ, அப்படியே ஜெ ஊழல்களில் ஜெக்கு ஒரு சம்பந்தமும் இல்லை. சென்னைக்குப் பவார் வந்திருக்கிறார் ஐயா, பேச்சு வார்த்தை நடத்த!

• ஆர். காயாம்பு, சோழபுரம்.

? மூப்பனார், தி.மு.கவுடன் உறவு சுமுகமாக உள்ளதாக இப்போதும் சொல்கிறாரே...?

பாதை எப்படி?

! சட்டசபை நிகழ்ச்சிகள் அப்படி உணர்த்தவில்லை. த.மா.கா. தாக்குதல்களின் தொனி மாறியிருக்கிறது. எனினும் தலைவர்கள் பண்பாடு கருதி இப்படிப் பேசுவது நல்லதுதான். மேலும் உள்ளாட்சி துணைத் தேர்தல்களில் ஏற்கெனவே செய்து கொண்ட ஒப்பந்தம் நீடிக்க வேண்டும் அல்லவா!

• நா. இராசமாணிக்கம், கோவில்பட்டி. ❑

? தங்களுடைய அரசியல் கூட்டாளியான லாலு, பீஹார் மாநிலத்தில் தேர்தல் வரவிருக்கும் சமயத்தில், அரசு அதிகாரிகளை அதிரடியாக மாற்றியது குறித்துக் கண்டுகொள்ளாமல் இருக்கிற காங்கிரஸ் கட்சி, மத்தியில் பா.ஜ.க. அதுபோன்ற மாற்றங்களை நிகழ்த்தியதற்காகக் குறை கூறுகிறதே... இதற்குத்தான் ராஜதந்திரம் என்று பெயரா?

! லாலு அதிகாரிகளை மாற்றியபோது பா.ஜ.க. கூடத்தான் தேர்தல் கமிஷனிடம் சென்று எதிர்ப்புத் தெரிவித்தது.


❑ ரூ. 50 பரிசு பெறுபவர் :
ஞா. இராசமாணிக்கம்,
201 டி, இராகுல் இல்லம்,
சண்முகசிகாமணி நகர்,
கோவில்பட்டி - 628 501.

• ந. வந்தியக்குமாரன், சென்னை - 41.


? பெண்கள் 'நாட்டின்' கண்களாக இருத்தல் வேண்டுமா? 'வீட்டின்' கண்களாக இருக்க வேண்டுமா...?



• உண்மை விளம்பி



• தோல்வியின் மறுபக்கம்!



• அபாயம் உணர்ந்து...



• மாற்றலில் முன்னோடி!



• 'ஆதரவு' வேட்டை...!



• நிகர லாபம்...!

! வீட்டின் கண்களுக்கு நாடு தழுவிய பார்வை இருந்தால் நல்லது.

• வே. முருகேசன், சென்னை - 4.

? மூப்பனார், தலையும் வாலும் பிடி கிடைக்காமல் திண்டாடுகிறாரே?

! விழுங்கிவிட அனுமதிக்காமல் தப்பித்தால் சரி. அப்புறம் வேறு பிடிமானம் தேடலாம்!

மறுக்கிறது

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,

"கல்கி" வார இதழில் காதில் விழுந்தவை பகுதியில் வந்த செய்திக்கான மறுப்பும் விளக்கமும் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப் படுகிறது.

வடசென்னையில் உள்ள டீ கடைகளில் விற்பனை செய்யப்படும் போண்டா, வடை போன்ற தின்பண்டக் கடைகள் மூடப் படுகின்றன என்ற செய்தி வெளிவந்துள்ளது.

சென்னை மாநகராட்சி எல்லைக்குட் பட்ட பகுதிகளில் டீ கடைகளுக்கு உரிமம் வழங்கப்படுகிறது. அவ்வாறு உரிமம் வழங் கும்போது அக்கடைகளில் தின்பண்டங் களை- போண்டா, வடை, பஜ்ஜி போன்ற வைகள் விற்பதற்கான அனுமதி வழங்கப்படு வதில்லை. இம்மாதிரியான தின்பண்டங் களை விற்பனை செய்வதற்கு சிற்றுண்டிச் சாலைகள் மூலம் உரிமம் வழங்கப்படுகின் றது.

உரிமம் வழங்கப்பட்ட டீ கடை வியா பாரிகள் தங்களுடைய கடைகளில் தின்பண் டங்களான போண்டா, வடை, பஜ்ஜி முதலி யவைகளை வைத்து வியாபாரம் செய்து வரு கின்றனர். இவ்வாறு இவர்கள் வியாபாரம் செய்யும் தின்பண்டங்களில் கொசு, ஈ மற்றும் சாலை போக்குவரத்தினால் காற்றில் பறக்கும் மண், தூசு போன்றவைகள் படிந்து அவற்றை உட்கொள்ளும் பொது மக்களுக்கு தொற்று நோய்கள் ஏற்படுகின்றன.

இம்மாதிரி விற்பனை செய்யும் தின்பண் டங்களை பொது மக்கள் உண்ணக் கூடாது என்றும், உண்பதால் ஏற்படும் வியாதிகள் பற்றியும் பொது மக்களின் விழிப்புணர்ச்சிக் காக பத்திரிகை, சினிமா விளம்பரங்கள் மூலம் அறிவுறுத்தப்பட்டு வருகின்றன.

ஆகவே சென்னை மாநகராட்சி எல்லைக் குட்பட்ட பகுதிகளில் உள்ள டீ கடைகளில் இம்மாதிரியான சுகாதாரமற்ற தின்பண்டங் களை விற்பனை செய்யும் கடைகளில், உதவி சுகாதார அலுவலர்கள் மற்றும் சுகாதார ஆய்வாளர்கள் திடீர் ஆய்வு நடவடிக்கை களை மேற்கொண்டு உரிமம் வழங்கப்படாத பொருள்களை விற்கும் கடைகளுக்கு சீல் வைக்கப்படுகின்றன.

தமிழக அரசு அறிவித்துள்ள கணிப் பொறி பயிற்சித் திட்டத்தில் மாநிலத்திலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகள் இடம்பெற வில்லை. மேலும் அரசாங்கம் வருகிற கல்வி யாண்டில் இதை நடைமுறைப்படுத்த உள் ளது. ஆனால் மாநகராட்சி கடந்த 2 ஆண்டு களாக அதாவது 1997-98 மற்றும் 1998-99-ம் ஆண்டுகளில் கணிப்பொறிக் கல்வி மற்றும் பன்முறைக் கணிப்பொறி வாயிலாகக் கல்வி ஆகியவற்றை மேல்நிலைப் பள்ளிகளில் செயல்படுத்தி வருகிறது. 1997-98 ஆம் ஆண்டில் 4 மேல்நிலைப் பள்ளிகளில் ஒரு பள்ளிக்கு 20 கணிப்பொறி வீதம் 80 பன் முறை கணிப்பொறிகள் வாங்கப்பட்டு வழங் கப்பட்டன. இது தவிர "டாட்டா இன் போடெக்" என்ற நிறுவனம் தனது சொந்த 10 கணிப்பொறிகளை வழங்கியுள்ளது.

1998-99-ம் வருடம் 8 மேல்நிலைப் பள்ளி களுக்கு 20 கணிப்பொறிகள் வீதம் 160 கணிப் பொறிகள் வாங்கப்பட்டு வழங்கப்பட்டது. மேலும் 1998-99-ம் ஆண்டில் வார்டு உறுப் பினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வார்டு உறுப்பினர்கள் கோரிக்கையின்படி 185 பன்முறை கணிப்பொறிகள் 23 மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளுக்கும் 39 மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகளுக்கும் வாங்கி வழங்கப் பட்டது. மாநகராட்சியின் மின்துறை இதற் கான ஏற்பாடுகளைச் செய்து, முறைப்படி மன்றத்தின் அனுமதி பெற்று ஒப்பந்தம் கோரப்பட்டு வாங்கி வழங்கப்பட்டது. கல்வி நிலைக்குழு கணிப்பொறி வாங்கத் தேவை யில்லை என்று சொல்வதாகக் கூறியிருப்பது முற்றிலும் தவறானது. உண்மைக்குப் புறம் பானது. இந்தக் கணிப்பொறிகள் 1998-99-ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் வாங்கப் பட்டன.

அரசாங்கம் கணிப்பொறி வாங்குவதற்கு வகுத்துள்ள வழிமுறைகளைப் பின்பற்றி இந்த கணிப்பொறிகள் வாங்கப்பட்டுள்ளன. இதில் எந்த விதமான தவறும் நடைபெற வில்லை. எனவே, பிரசுரிக்கப்பட்ட செய்தி உண்மைக்கு மாறானது மட்டுமல்ல. மக்களி டையே ஒரு தவறான எண்ணத்தை ஏற்படுத் துவதாகவும் அமைந்துள்ளது வருந்தத்தக் கது.

மேம்பாலம் கட்டும் பணிக்காக, பெரம்பூரில் ஒரு பள்ளியின் விளையாட்டு மைதானத்தைக் குறுக்காகப் பிளந்து கொண்டு மேம்பாலம் செல்வதால், அந்தப்

பள்ளியின் விளையாட்டு மைதானத்தைக் கையகப்படுத்த இருக்கின்றார்கள் எனவும், பாலத்துக்கு எவ்வளவு இடம் தேவையோ அந்த அளவு இடத்தை மட்டும் கையகப் படுத்த முயலாமல் தேவைக்கு அதிகமாகக் கையகப்படுத்தும் திட்டத்தில் இருக்கிறார்கள் எனவும் தேவைக்கு அதிகமாக பெறப்படும் நிலத்தை விற்றுவிட திட்டமிடப்பட்டுள்ள தாகவும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பொருட்டு சமர்ப்பிப்பது யாதெனில், சென்னை மாநகராட்சி மாமன்றத் தீர்மானம் எண்.888/98, நாள் 16.11.98-ல் பெரம்பூர் ரெயில் நிலையம் அருகில் மேம் பாலம் கட்டுவதற்குத் தேவையான இரயில்வே, அரசு மற்றும் தனியார் நிலங்களை கையகப்

மாநகராட்சி!

படுத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டன. அரசாணை எண்.21, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 22.01.99-ல், தென்னக இரயில்வேக்கு சொந்தமான நிலங்களை நிலமாற்று விதியின் கீழ் ரூ. 6,11,56,766/-க்கு நிலமாற்றம் செய்யவும், தனியார் நிலங்களை மாவட்டாட்சியர் மூலம் ரூ. 23,74,724/-க்கு கையகப்படுத்தவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.



சென்னை இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் திருத்தி வடிவமைக்கப்பட்ட வரைபடத்தின்படியும், பாலங்கள் துறையின் கருத்தின்படியும் கீழ்க்கண்ட அரசு நிலங் களை நிலமாற்றம் செய்யக் கோரி சென்னை மாவட்ட ஆட்சியரைக் கோரப்பட்டது.

1. அரசுக்குச் சொந்தமானதும், பெரம்பூர் ஆர்.பி.சி.சி.பள்ளிக்கு விளையாட்டு மைதானத்திற்கென சென்னை மாவட்ட ஆட்சியரால் குத்தகைக்கு வழங்கப்பட்டு குத்தகைக் காலம் முடிவுற்று புதுப்பிக்கப் படாமல் உள்ள நிலத்தின் ஒரு பகுதி. (21,761 சதுர அடி)

2. அரசுக்குச் சொந்தமானதும், மோகினின் ரெஸ்டாரன்ட் உணவு விடுதிக்கு சென்னை மாவட்ட ஆட்சியரால் குத்தகைக்கு வழங்கப்பட்டு குத்தகைக் காலம் முடிவுற்று புதுப்பிக்கப்படாமல் உள்ள பரப்பளவின் ஒரு பகுதி. (1,200 /சதுர அடி)

3. அரசுக்குச் சொந்தமானதும், தற்போது புரசைவாக்கம் பெரம்பூர் வட்டாட்சியர் அலுவலக வளாகத்திற்குள் ஊர்திகள் நிறுத்து மிடமாகவும் பயன்படுத்துமிடத்தின் ஒரு பகுதி. (771 சதுர அடி)

தேவையான அரசு நிலத்தின் மொத்த பரப்பளவு : 23,723 சதுர அடி.

மேற்கண்ட அரசுக்கு சொந்தமான நிலங் களில் மேம்பாலம் கட்டுவதற்காக முன் நுழைவு அனுமதி சென்னை மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை எண். ஓ4/55539/95, நாள் 09.03.99-ன் வாயிலாக அளிக் கப்பட்டுள்ளது.


இதன்படி மேற்கண்ட அரசுக்குச் சொந்த மான நிலத்தில் மேம்பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. செய்தித் துணுக்கில் குறிப்பிட்டுள்ள நிலம் ஆர்.பி.சி.சி.க்கு சொந்தமான நிலம் அல்ல. அரசுக்குச் சொந்தமானது.

மேற்படி மேம்பாலம் கட்ட தேவையான நிலங்கள் மட்டுமே சென்னை மாவட்ட ஆட்சி யரிடமிருந்து பெற முன் மொழிவுகள் அனுப்பப்பட்டு முன்நுழைவு அனுமதியும் பெறப்பட்டுள்ளது. தேவைக்கு அதிகமாக நிலங்கள் ஏதும் பெறப்படவில்லை.

பெ. கோலப்பன், இ.ஆ.ப.,
ஆணையர்,
சென்னை மாநகராட்சி.



காட்டுக்குள் தலைமறைவாகியிருக்கும் ஒரு கொடூரக் கொலை குற்றவாளியின் குமுறும் வாக்குமூலம் புத்தகமாக வந்திருப்பது உலகிலேயே இது தான் முதல்முறை!
நக்கீரன்
"பதறப்பதற... 132 பயங்கர கொலைகளை ஏன் செய்தேன்? எப்படிச் செய்தேன்? எனக்குப் பின்னணியில் உள்ள பிரமுகர்கள் யார், யார்?
-இன்னும் பல 'பகீர்' தகவல்கள்...
-வண்ணப் படங்களுடன்...
பரபரப்பான விற்பனையில்...
ரூ.100/-
• தங்களுக்குத் தேவையான புத்தகங்களைப் பெற தொகையினை டிமாண்ட் டிராப்ட், மணியார்டர் மூலம் நக்கீரன் பப்ளிகேஷன்ஸ், 49 ஜூரிங்டன் ரோடு, சென்னை-30 என்ற முகவரிக்கு அனுப்பவும். • காசோலைகள் ஏற்றுக்கொள்ள இயலாது. • தனிப் பிரதி விரும்புவோர் ரூ.100/- செலுத்தி பதிவுத் தபால் அல்லது கூரியர் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.



கிரிக்கெட் விநோதங்கள்!

தென் ஆப்பிரிக்காவின் ஜோகன்ஸ் பார்க் மைதானத்தில் 1972ம் ஆண்டு ஒரு மேட்சில் விளையாடிய 'பீட்டர் மோரீஸ்' என்ற பேட்ஸ்மேன் வித்தியாசமான முறையில் 'அவுட்' ஆனார். இவருக்கு முன்னால் திடீரென்று ஒரு பாம்பு வந்தது. அதனால் பயந்து போய் 'கிரீஸ் லைனை விட்டு சிறிது தூரம் வெளியே வந்தார். இது தெரியாமல் விக்கெட் கீப்பர் விக்கெட்டின் பெயிலைத் தட்டி விட்டு 'அவுட்' கேட்டு அவரை அனுப்பி வைத்தார்.

1950 ஆம் ஆண்டு அக்டோபர் 26ம் தேதி ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் நடந்த மாவட்ட அளவிலான கிரிக்கெட் மேட்சில் 'நெய்ல் ஹார்வி' எனும் புகழ் பெற்ற பேட்ஸ்மேன் 17 ரன்களுக்கு எதிரணி பௌலர் வீசிய பந்தில் 'கிளீன் போல்டு' ஆனார். ஆனால் என்ன அதிசயம்! விக்கெட் மீதுள்ள பெயில் கீழே விழாமல், சரியாக விக்கெட் மீதே மேலே எழும்பி, பழையபடி அதே இடத்தில் உட்கார்ந்து விட்டது. பெயில் கீழே விழுந்தால்தான் அவுட் கொடுக்க முடியும் என்று அம்பயர் அவுட் கொடுக்க மறுத்து விட்டார்!

பாகிஸ்தானின் பிரபல கிரிக்கெட் ஆட்டக்காரர் யூனூஸ் அகமதுதான் கிரிக்கெட் வரலாற்றிலேயே மிக வித்தியாசமான முறையில் ஆறு ரன்கள் பெற்றவர். ஆம்! 1972ம் ஆண்டு ஆகஸ்ட் 26ம தேதி விளையாடிய ஒரு கிரிக்கெட் போட்டியில் அகமது ஒரு பந்தை அடித்தார். அது கவர் திசையில் ஓடியது. அந்தப் பக்கம் இருந்த லாரன்ஸ் வில்லியம் என்ற பீல்டர் பந்தைத் தடுக்கும் நோக்கத்தில் விளையாட்டாகத் தம்முடைய தொப்பியை அந்த பால் மீது போட்டு தடுக்க நினைத்தார். இதைக் கவனித்த அம்பயர் வில்லியம் குற்றம் புரிந்ததாகக் கருதி அகமதுக்கு அவர் ஓடியிருந்த ஒரு ரன்னுக்கு மேல் ஐந்து சேர்த்து 6 ரன்னாகக் கொடுத்து விட்டார்!

உலகின் தலைசிறந்த பேட்ஸ்மேனாகக் கருதப்படுபவர் இங்கிலாந்தின் விக்டர் டிரம்பர்.

இவர் 1914ம் ஆண்டு நியுசிலாந்தில் டெஸ்ட் ஆடச் சென்றபோது, ஒருநாள் ஒரு சிறுவன் ஓடிவந்து 'டிரம்பர், என் பேட்டை பயன்படுத்துவீர்களா?' என்று கேட்டான். புன்னகையுடன் டிரம்பர் அந்த மட்டையைப் பெற்றுக் கொண்டார். அது அவரது மட்டையை விடச் சிறியதாக இருந்தது. இருப்பினும் களம் புகுந்து முதல் பந்திலேயே 'சிக்சர்' அடித்தார். 90-வது ரன் எடுத்தபோது அந்த பேட் லேசாக முறிந்தது. அந்தவேளையிலும் டிரம்பர் மட்டையை மாற்ற மறுத்து விட்டார்! அதே மட்டையை வைத்து 190 நிமிடங்களில் 293 ரன்களை எடுத்து பெரும் சாதனை படைத்தார்.

— கே.பி. இராஜேந்திரன்

நமக்கு வர வேண்டிய தபால்கள் நம் வீட்டுக்கே வந்து சேர்ந்துவிடும். அதற்காகத்தான் இருக்கிறார்கள் தபால்காரர்கள். ஆனாலும் சிலர், தபால் ஆபீஸ்களுக்கே நேராகச் சென்று, தங்களுக்குத் தபால் ஏதும் வந்திருக்கிறதா என்று தபால் காரரைக் கேட்கிறார்கள். அப்படியென்ன அவசரம் அவர்களுக்கு? குரோம்பேட்டை தபால் ஆபீஸுக்குச் சென்று அங்கு வந்திருந்தவர்களிடம் விசாரித்தோம்!

தாம்பரம் கடப்பேரியில் வசிக்கும் டி.கே. நாராயணன். நுங்கம்பாக்கத்திலிருக்கும் ஒரு காஸ் கம்பெனியில் வேலை பார்க்கிறார். கொச்சினிலிருக்கும் இவருடைய தம்பி சண்முகம் பிள்ளை மாதா மாதம் டி.டி. அனுப்புவார். அதாவது இவருக்கு வரவேண்டிய குடும்பச் சொத்துத் தொகை கொஞ்சம் கொஞ்சமாக வருகிறது. டி.டி.யை வாங்கி வங்கியில் கலெக்‌ஷனுக்குப் போட்டு விட்டுப் போவதுதான் வசதி என்பதால், மாதா மாதம் போஸ்டாபீஸுக்கே லெட்டர் வாங்க வந்து விடுகிறாராம்.

"முன்னல்லாம் கரெக்டா பத்தாந்தேதிக்குள்ள தபால் வந்துடும். இப்போ ரொம்ப டிலே ஆகுது. நம்ம ஊரு போஸ்டாபீஸ்ல நல்லா சர்வீஸ் பண்ணினாலும் (இஸ்!) கேரளாவுல போஸ்டாபீஸ்களில் ரொம்ப புவர் சர்வீஸ். முன்னல்லாம் ரெண்டு நாள்ல கொச்சின்ல இருந்து இங்கே வந்த லெட்டர், இப்போ சமயத்துல ஒரு வாரம் கூட ஆய்டுது" என்கிறார் நாராயணன்.

தாம்பரம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் குடியிருப்பில் வசிக்கும் சரத்சந்திரன், "என் பொண்ணு ஹரிணி, க்ரைஸ்ட் கிங் கான்வென்ட்ல (Christ King Convent) ஆறாவது படிக்கிறா. ஸ்கூல்லருந்து பரீட்சை ரிசல்ட்டை தபால்ல அனுப்பிட்டாங்கன்னு கேள்விப் பட்டேன். அதான், ரிசல்ட் என்ன ஆச்சுன்னு பார்க்கறதுக்காக போஸ்டாபீசுக்கே வந்துட்டேன். வீட்டுக்கு லெட்டர் வந்துரும்னாலும், முன்னாடியே





• கித்தேரியம்மாள்


• டி.கே. நாராயணன்

பாக்குறதுல ஒரு ஆர்வம். அவ்வளவுதான்'' என்றார்.

முல்லை நகரில் வசிக்கும் கித்தேரி அம்மாளிடம் கேட்டபோது, ''எனக்கு ரெண்டு பசங்க. ஒருத்தன் கூலி வேலை பாக்குறான். இன்னொருத்தன் எக்ஸ்போர்ட் கம்பெனில வேலை பாக்குறான். எக்ஸ்போர்ட்ல வேலை பாக்குற பையன் கல்யாணம் பண்ணி தனிக்குடித்தனம் போய்ட்டான். அவன்தான் என்னை கவனிச்சுட்டு இருந்தான். எக்ஸ்போர்ட் கம்பெனில அப்படி என்ன பெருசா சம்பளம் வந்துடப் போகுது? தனிக்குடித்தனம், மூணு மாசமா கம்பெனி வேறே ஸ்டிரைக்ல இருக்கு. வீட்டு வாடகையே குடுக்க முடியாம கஷ்டப்படுறான். என் தம்பி ஒருத்தன் குஜராத்ல – ஏர்ஃபோர்ஸ்ல வேலை பாக்குறான். 'ரொம்ப கஷ்டமாயிருக்கு; ஏதாவது பணம் அனுப்பு'ன்னு லெட்டர் போட்டேன். இப்போ, அவன்ட்டருந்து 29-ம் தேதி பணம் அனுப்சிருக்கேன்னு லெட்டர் வந்திருக்கு. இன்னிக்கு தேதி பதினொண்ணு. இப்ப வரைக்கும் பணம் வரலை. அதான் பணம் வந்திருக்கான்னு கேட்டுட்டுப் போக வந்திருக்கேன்!'' என்றார்.



• சாரதாம்மா



• சரத்சந்திரன்

சாரதாம்மா, ''நான் ஒரு அனாதைங்க. வீட்டு வேலை செஞ்சு பொழைப்பை ஓட்டிக்கிட்டு இருக்கேன். எம்.ஜி.ஆர். காலத்துலருந்து 'முதியோர் பென்ஷன்' வாங்கிட்டிருக்கேன். அப்போ முப்பதஞ்சு ரூபாயா இருந்த பென்ஷன் இப்போ 150 ரூபாயா ஆகியிருக்கு. அதுவும் ஒழுங்கா வர்றதில்லை. நாலு மாசமா பென்ஷன் வரலை. தாசில்தார் ஆபீஸ்ல போய்க் கேட்டா 'வந்துரும் வந்துரும்'னு சொல்றாங்க. தினமும் போஸ்டாபீசுக்கு நடையா நடந்து திரும்பிப் போறதுதான் மிச்சம்'' என்றார்!

''இப்படி அவசரத் தபால்களுக்கு மட்டும்தான் மக்கள் தபால் நிலையத்துக்கு வருகிறார்களா?'' என்று ஒரு தபால்காரரிடம் கேட்டபோது, ''குரோம்பேட்டைல மொத்தம் பன்னண்டு பீட் இருக்கு. இருவத்தி நாலு போஸ்ட்மேன்கள் இருக்கோம். வர்ற தபால்கள்

அப்படி என்ன அவசரமாம்...?

அதிகம். ஆனா, போஸ்ட்மேன்கள் குறைவு. தபால்களை பட்டுவாடா பண்றதுக்கு லேட்டாய்டுது. சில சமயம் சாயந்தரம் ஆறு மணி வரைக்கும் கூட தபால்களை டெலிவரி செஞ்சுட்டு வர்றோம். அதனாலயே நிறையப் பேர் போஸ்டாபீஸுக்கே வந்து வாங்கிட்டுப் போறாங்க!'' என்றார்.

— கே. பாலசுப்ரமணியன்

படங்கள் : **எம். சண்முகம்**

பணம்

பணத்தால் கிடைத்தன பல அனுபவங்கள்!

நான் ராமகிருஷ்ணா மிஷன் பள்ளிக்கூடத்தின் முன்னாள் மாணவன். வகுப்பில் நன்றாகப் படிக்கும் மாணவர்களில் நானும் ஒருவன். ஒருநாள், வகுப்பில் போடும்படி சொல்லி, ஐந்து கணக்குகளை கணித ஆசிரியர் போர்டில் எழுதினார். கணக்குகளை எழுதி முடித்து விட்டுத் திரும்பிய அவருக்கு ஆச்சரியம். நான் அந்த ஐந்து கணக்குகளையும் போட்டு, விடை கண்டுபிடித்து விட்டேன். கணக்கு ஆசிரியர் தமது ஆச்சரியத்தை வெளிக் காட்டிக் கொள்ளாமல், மறுபடியும் ஒரு கணக்கை போர்டில் எழுதி விட்டுத் திரும்புகிறபோது, நான் அதற்கும் விடை எழுதி முடித்து விட்டேன். என்னை, மனம் விட்டுப் பாராட்டினார் ஆசிரியர். இதை எதற்குச் சொல்கிறேன் என்றால், அந்த அளவுக்கு நான் படிப்பில் ஆர்வம் செலுத்தினேன். அதனால்தான் பள்ளியிறுதித் தேர்வில் நான் தமிழ்நாட்டிலேயே மூன்றாவது மாணவனாகத் தேறினேன்.

மேலும் மேலும் தொடர்ந்து படித்து, பெரிய ஆளாக வேண்டுமென்கிற ஆசை என்னுள்ளே இருந்தது. பட்டு வியாபாரத்தில் காலூரன்றி விட்ட எங்கள் குடும்பம் ஓரளவுக்கு வசதியாகவே இருந்தது. மேற்கொண்டு படிப்பைத் தொடர, பணக் கஷ்டமில்லை. ஆனாலும், என் குடும்பச் சூழ்நிலை என்னை மேலே படிக்க அனுமதிக்கவில்லை.

காரணம் என் அப்பாவின் மரணம். திடீரென்று நிகழ்ந்து விட்ட அவரது மரணம், படிக்க வேண்டும் என்கிற என்னுடைய ஆசைக்குத் தடைபோட்டது. பள்ளியிறுதி வகுப்பை, நல்ல மார்க்குடன் முடித்த கையோடு, வியாபார நுணுக்கங்களைக் கற்றுக் கொள்ள நான் கடைக்கு வந்து விட்டேன். நன்றாகப் படிக்கும் மாணவர்களுக்குப் பணமில்லாமல் படிப்புத் தடைபடுவது உண்டு. ஆனால், பணமிருந்தும் என்னால் தொடர்ந்து படிக்க முடியவில்லையே என்ற ஏக்கம் எனக்குள் ஏற்பட்டது.

இந்த ஏக்கம் காரணமாகத்தான், பின்னால் நான் தலையெடுத்து, வியாபாரத்தைப் பெரிய அளவில் விருத்தி செய்தபின் கணிசமான அளவில் பள்ளிக்கூடங்களுக்கும், கல்லூரிகளுக்கும் நன்கொடைகள் வழங்க ஆரம்பித்தேன். இது மட்டுமின்றி நல்லி சார்பாகவே ஒரு பள்ளியும் நடத்தப்படுகிறது.

ஒருநாள், வேலூர் ஜெயிலில் ஆயுள் தண்டனை அனுபவித்து வருகிற ஒரு கைதியிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. 'நீங்கள், ஏழை மாணவர்கள் படிப்புக்கு நிறைய உதவிகள் செய்வதாகக் கேள்விப்பட்டேன். நான் ஆயுள் தண்டனைக் கைதி. வெளியில் இருக்கும் என் மனைவி, எங்கள் மகளைப் படிக்க வைக்க மிகவும் சிரமப்




படுகிறாள். என் மகளின் படிப்புச் செலவுக்கு நீங்கள் ஏதாவது உதவி செய்தால், நன்றியுடையவனாக இருப்பேன்' என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது.

இந்தக் கடிதம் என் மனதை மிகவும் நெகிழச் செய்து விட்டது. அவருக்குக் கடிதம் எழுதி, அவரது குடும்பத்தினரை என்னை வந்து சந்திக்கும்படி கேட்டுக் கொண்டேன். அதன்படி, அந்த ஆயுள் தண்டனைக் கைதியினுடைய மனைவியும், அவரது மகளும் என்னை வந்து சந்தித்தனர். அவர்களின் தேவையை அறிந்து, கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த அவரது மகளின் கடைசி வருட கல்லூரிச் செலவுக்கு நான் உதவி செய்தேன்.

இன்னொரு சமயம், முழு வருடத்துக்குமான வருமான வரியை மூன்று தவணைகளில் கட்டத் திட்டமிட்டிருந்தோம். ஆனால், இன்கம்டாக்ஸ் டிபார்ட்மெண்ட்டில், ஒரே தவணையில் கட்டச் சொன்னார்கள். அப்படிக் கட்டி விட முடியும். ஆனால், அதன் காரணமாக, அடுத்த சில மாதங்களில் பணப் புழக்கம் பாதிக்கப்படும். இதை எப்படிச் சமாளிப்பது என்று நான் யோசித்துக் கொண்டே இருந்தபோது ஒரு பைனான்சியர் டெலிபோன் செய்து, 'உங்களுக்கு அவசரமாகப் பணம் தேவை என்று தெரிகிறது. கொடுத்து உதவட்டுமா?' என்றார். பேசிய பைனான்சியர் எங்கள் வாடிக்கையாளரும் கூட. நான் சரி என்றேன். பணம் கொடுத்து உதவினார். பண முடை தீர்ந்தது. சில மாதங்களில் கடனும் அடைந்தது.

என் நெருங்கிய நண்பர் ஒருவர், "அந்த பைனான்சியர், எப்படியோ இன்கம்டாக்ஸ் டிபார்ட்மென்டிலிருந்து விஷயத்தை மோப்பம் பிடித்து விட்டுத்தான் உங்களுக்கு போன் செய்தார்" என்று இப்போது கூடச் சொல்லுவது உண்டு. நான், "அவருக்கு விஷயம் எப்படித் தெரிந்தால் நமக்கென்ன. தக்க நேரத்தில் உதவினாரா? இல்லையா?" என்பேன்.



அவசரத் தேவையில் இருப்பவருக்குத் தானே பணத்தின் அருமை தெரியும்?

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**

வாக்களிக்க ஒரு தலையங்கம்!

✉ நடுநிலையோடு தீட்டப்பட்ட தலையங்கம் அருமை. பெரும்பான்மை பலம்; ஆனால் மிருகபல மெஜாரிட்டி கூடாது என்ற வரிகள் கவனிக்கப்பட வேண்டியவை. வாக்குச் சாவடிக்குச் செல்வதற்கு முன் வாக்காளர்கள் படித்து விட்டு, வாக்களிக்க வேண்டிய அருமையான தலையங்கம்.

தூத்துக்குடி - 2, சிவராமசுப்பிரமணியன்

✉ அரசியலில் காலைச் சுற்றிய பாம்பாக ஜெயலலிதாவைச் சித்திரித்த கார்ட்டூன் கனஜோர்!

பொறையாறு, கங்காகணேசன்

✉ 'அம்மா'வின் எதிர்காலம் குறித்த பெட்டிச் செய்தி சுவையாக இருந்தது. தி.மு.க.-பா.ஜ.க கூட்டணி மக்களிடையே எடுபடாது என்று அ.தி.மு.க.வினர் கூறுவது வேடிக்கையாக இருக்கிறது. காங்கிரஸ் தனித்து ஆட்சி அமைப்போம் என்று கூட்டணிக்கு நிபந்தனை விதிக்கிறது. இது வரை மத்தியில் ஒருமுறை கூட காங்கிரஸ் கூட்டணி ஆட்சி அமைந்தது கிடையாது. இந்த வகையில் பி.ஜே.பிக்கு நிறைய அனுபவம் ஏற்பட்டிருக்கிறது. தவிர, அ.தி.மு.கவைத் தவிர மற்ற கூட்டணிக் கட்சிகள் (மம்தா பானர்ஜி உள்பட) பெரிய தொல்லைகள் கொடுத்தது கிடையாது. ஒரு எம்.பி. உள்ள கட்சிக்குக் கூட பா.ஜ.க. ஆட்சியில் இடம் கிடைத்தது என்பதை மறந்து விடலாகாது. அ.தி.மு.க.வினர் தப்புக் கணக்கு போட்டுக் கொண்டிருக்கிறார்கள். எப்போதும் போல!

கோவை-42, கலை. அரசு

✉ பெண்களால் அழிவா? அன்பும், பண்பும், நிறைந்த பெண்களும் உண்டு! அகம்பாவமும் ஆடம்பரமும் கொண்டு, ஆட்டிப் படைப்பவரும் உண்டு. இதில் பெண் என்ன? ஆண் என்ன?

பெங்களூர் - 10, என்.கே. ஈகவரி

✉ ஆண்களை விட பொறுப்புணர்வும் இரக்க உணர்ச்சியும் அதிகமாக உள்ள பெண்கள் செய்யும் தவறுகள், பொது ஜனத்தை எளிதாக அதிர்ச்சிக்குள்ளாக்குகின்றன என்பதை அரசியல் துறையிலுள்ள பெண்கள் உணர்ந்து கொண்டால் நிச்சயம் நல்லது நடக்கும்.

புனே, ஜெ. ரஜினி ராம்கி

✉ பாலகுமாரன் பணத்தைப் பற்றிய உண்மையை ஒரு ஞானியைப் போல் உணர்த்திவிட்டார்! 'பத்து ரூபாய் திருடினேன்' பக்கத்தைக் கிழித்து பத்திரப்படுத்திவிட்டேன்.

கும்பகோணம்-1, டி.எஸ். சீதாராமன்

✉ இவ்வார ஜோக்குகள் யாவும் வயிறு குலுங்க சிரிக்க வைத்து விட்டன. அதே மாதிரி தராசாரின் பதில்கள் யாவும் நகைச்சுவையாகவும், அர்த்தமுள்ளதாகவும் அதே சமயத்தில் சிந்திக்கத் தூண்டுவதாகவும் இருந்தன.

விருப்புரம், வை. வெங்கடேசன்.

✉ அருள் சரண்யாவின் 'கொஞ்சம் சிரித்தாலென்ன?' சிறுகதை படித்து முடித்ததும் உள்ளம் நெகிழ்ந்தது! வட்டார வழக்கு மொழியில் உமா கல்யாணியின் சிறுகதையைப் படித்ததும் மனம் குளிர்ந்தது.

நெய்வேலி, எஸ். இந்துமதி

✉ 'வி.ஐ.பியைத் தெரிஞ்சுக்குங்க!' பகுதியில் முரசொலி மாறனைப் பற்றி எங்களுக்குத் தெரியாத நிறைய விஷயங்களை எழுதியிருந்ததற்குப் பாராட்டு. இன்றைய அரசியல் சூழ்நிலையில் தி.மு.கவுக்கென ஒரு பிரதிநிதியை டெல்லியில் நிரந்தரமாக நங்கூரம் பாய்ச்சியிருப்பதில் வெற்றி கண்டிருக்கிறார் கலைஞர்.

மொரட்டுப்பாளையம், சு.நா.இராஜேஸ்வரன்,

✉ முரசொலி மாறன் பற்றிய கட்டுரைக்கு 'மிஸ்டர் கட் அண்ட் ரைட்' என்று தலைப்பிட்டிருந்தீர்கள். கட் அண்ட் டிரைட் (cut and dried) என்பதே சரியான பதம். வெட்டி உலர்த்தப்பட்ட மீனைப் போல் என்று பொருள்! அதாவது, தாம் எடுத்த முடிவு அல்லது தீர்மானத்தில் உறுதியாய் இருப்பவர் 'கட் அண்ட் டிரைட்' நபர். கருவாடு மீனாகாது என்று ஒரு தமிழ்ப் பழமொழியும் உண்டு. ஆங்கிலப் பதத்துக்கு இதுவே மூலவேராக இருக்கக் கூடும்.

புது தில்லி - 1, பி. கிருஷ்ணமூர்த்தி

காதில் விழுந்தவை





வாழப்பாடிக்கு எதிராக ஜெ.-சூளுரை!


● கோயம்புத்தூர் குண்டு வெடிப்பைத் தொடர்ந்து 'பயங்கரவாதிகள் தடுப்புச் சட்டம்' (போடா) என்ற ஒரு கடுமையான சட்டத்தை இயற்ற நினைத்து தமிழக அரசு. தீர்மானம் நிறைவேற்றி ஜனாதிபதிக்கு அனுப்பியது. ஆனால் உள்துறை இலாகா சில சந்தேகங்களை எழுப்பியதால், சட்டம் ஜனாதிபதியால் அங்கீகரிக்கப்படவில்லை. "இஸ்லாமிய தீவிரவாதிகள் மேல் தி.மு.க. அரசு தீவிர நடவடிக்கை எடுக்கவில்லை" என்று கடுமையாக எதிர்க்கட்சிகள் விமர்சனம் செய்யவே, அரசு 'போடா' சட்டத்தைக் கொண்டு வர முனைந்தது. இதற்கு சிறுபான்மை மக்களிடையே கடுமையான எதிர்ப்பு இருந்தது. ஆனால் மாறியுள்ள அரசியல் சூழ்நிலையில், அதாவது பா.ஜ.க., தி.மு.க. வோடு நெருங்கி வந்துள்ள இந்த நிலையில், "சட்டம் - ஒழுங்கு நன்றாகவே இருக்கிறது, எனவே 'போடா' சட்டத்தை வாபஸ் வாங்கிக் கொள்ளுகிறோம்' என்று கலைஞர் அறிவித்தது மிகவும் சாணக்கியமான செயல் என்று பல கட்சிகளைச் சேர்ந்த சிறுபான்மை சமூகப் பிரமுகர்களும் கூறுகிறார்கள். "தி.மு.க. தயவோடு தேர்தலைச் சந்திக்க இருக்கும் பா.ஜ.க., தி.மு.க. அரசின் இந்தச் செயலை எந்த விதத்திலும் விமர்சனம் செய்ய முடியாது. அதே சமயத்தில் பா.ஜ.க.வுடன் தி.மு.க. கூட்டணி சேர்ந்ததில் எங்களுக்கு மனவருத்தம் இருந்தது. இப்போது கொஞ்சம் ஆறுதலாக இருக்கிறது'' என்று நம்மிடம் சொன்னார் இஸ்லாமியப் பிரமுகர் ஒருவர்.

● இந்தமுறை சேலம் பாராளுமன்றத் தொகுதியில் வாழப்பாடியை எதிர்த்து யார் நின்றாலும் தோற்றுப் போவார்கள். ஏனென்றால், தொகுதியில் ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு காஸ் கனெக்ஷன் வாங்கிக் கொடுத்திருக்கிறார். இது தவிர பெட்ரோலிய கம்பெனிகளின் சமூக நல நிதி மூலமாக தொகுதியில் உள்ள பள்ளிகளுக்கு கம்ப்யூட்டர் உள்பட பல வசதிகளைச் செய்திருக்கிறார். இது அரசியல் உலகில் பரவலாகச் சொல்லப்படும் செய்தி. ஆனால் அம்மா விடுவதாக இல்லையாம். 'அவர் எத்தனை கோடி வேண்டுமானாலும் செலவு செய்யட்டும். இந்தமுறை அவரை சேலத்தில் மண்ணைக் கவ்வ வைப்பேன்' என்று சூளுரைத்திருக்கிறாராம். வாழப்பாடியை எதிர்த்து அம்மா த்யார் செய்யும் வேட்பாளர் முன்னாள் அமைச்சர் செல்வகணபதி. செல்வ கணபதியும் மண்ணின் மைந்தர்தான் என்பதால் சரியான போட்டிதான்!

● சென்றமுறை ம.தி.மு.க., பா.ம.க என்று கச்சிதமாக் கூட்டணி அமைத்து வெற்றி பெற்றார் ஜெ. இந்தமுறை நிலைமையே தலைகீழாக இருக்கிறது. "அவர்கள் போனால் போகட்டும். இந்தமுறை வேறு வியூகம் வகுக்கிறேன்" என்று சிறு சிறு அமைப்புகளை வளைத்து வருகிறார் ஜெ. முக்குலத்தோரில் பல அமைப்புகள் இருந்தாலும் எல்லோரும் அ.தி.மு.க.வுக்குத்தான் வோட்டளிப்பார்கள் என்பது தெரிந்த கதையாம். ஏனென்றால் 'நாச்சியார்' (சசிகலா) தோழி ஜெ.வாம். கிறிஸ்துவ ஜனநாயக முன்னணி, தீரனின் த.பா.ம.க., சமாஜ்வாடி கட்சி ஆகிய 'பெரிய' கட்சிகளின் தலைவர்(?)களும் ஜெ.வைச் சந்தித்திருக்கிறார்கள். ஜெ.வின் இந்த அணுகுமுறையைப் பார்த்த கட்டடத் தொழிலாளர் சங்கம், தையல்காரர் சங்கம், முடிதிருத்துவோர் சங்கம் என்று பல சங்கத்தினர் போயஸ்தோட்டத்தின் கதவைத் தட்டி அம்மாவிடம் அப்பாயிண்ட்மெண்ட் கேட்டுக் கொண்டிருக்கிறார்களாம். "அம்மாவைச் சந்தித்துவிட்டால் போதும். வெளியே வரும்போது கணிசமான 'வெயிட்டுடன்' வரலாம்'' என்கிறார்கள். "இதே ரீதியில் சென்றால் எங்கள் கூட்டணிக் கட்சிகளுக்கு என்று தனி ரயில் ஏற்பாடு செய்ய வேண்டிய நிலை வந்துவிடும் போலிருக்கிறதே" என்று கிண்டலடித்தார் அ.தி.மு.க பிரமுகர் ஒருவர்!


— சஞ்சயன்

மே 19 முதல் 25 வரை




மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

இந்த வாரம் அலைச்சலும் செலவும் ஏராளமா இருக்கும். உடல் நலன் சீரா இருக்காது. வேலைப் பளு அதிகமாகவும் பலன் குறைவாகவும் இருக்கும். தவிர, கணவன் - மனைவி உறவுல சில பிணக்குகள் வரும். வீட்டுல அமைதி இருக்கணும்னா, நீங்க கொஞ்சம் பொறுமையோட விட்டுக்குடுத்து நடந்துக்கணும். ஆபீஸ்ல மேலதிகாரிகளோட அதிருப்திக்கு ஆளாகலாம். எச்சரிக்கையா இருங்க.



ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

உங்க புத்திசாலித்தனம் வெளிப்பட்ற வாரம் இது. பேச்சு சாதுர்யத்தால ஒரு முக்கியமான காரியத்தை இப்ப சாதிப்பீங்க. எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்பு ஏதோ வரப்போவுது. சிலருக்குத் திருமணம் கைகூடலாம். வெளியூர்ப் பயணமோ, வெளியூர்லேருந்து முக்கியச் செய்தியோ கண்டிப்பா உண்டு. பெண்களுக்கு ப்ரமோஷன் கிடைக்கலாம். ஆபீஸ்லேயோ வீட்டுலேயோ!




மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

11ல சனி. அதனால, நீங்க சிரமமே இல்லாம எதிலும் ஜெயிக்கலாம். இந்த வாரம் உங்க நீண்டநாள் கனவு ஒண்ணு நனவாகும். வீடு, கார் ஏதாவது வாங்குவீங்க. நண்பர்களால ஆதாயம் உறுதி. பெண்களுக்குத் தாய் வீட்டுலேருந்து சொத்து ஏதாவது கிடைக்கலாம். உத்தியோக ரீதில பெரிய அபிவிருத்தி இருக்காதுன்னாலும் சிலருக்குப் புகழ் கூடும். குறிப்பா, எழுத்தாளர்களுக்குப் பிரமாதமான வாரம் இது.




கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

போன வாரம் எதிர்பாராத சங்கடங்களால கொஞ்சம் சிரமப்பட்டிருப்பீங்களே. இப்ப எல்லாம் சரியாயிடும். வீட்டுல நடக்கப் போற ஒரு விசேஷம், உங்க வாழ்க்கைத் துணையோட இருந்த ஊடலை நீக்கிடும். நண்பர்கள் உதவுவாங்க. அறிமுகமில்லாத நபர்கள்கிட்ட கொஞ்சம் எச்சரிக்கையா இருங்க. பண இழப்பு, பெயர் கெட்டுப் போறது நடக்கலாம்! வெளியூர்ப் பயணங்கள் வேணாம். யாராவது ஏழைக்கு ஒரு வேளை சாப்பாடு போட்டுட்டுத் தொடங்கற முக்கிய காரியங்கள் பிரமாதமா ஓர்க் அவுட் ஆகும்.



சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

எதிரிகள் ஓடி ஒளியற வாரம். தொழில்ல இருந்து வந்த பிரச்னைகளெல்லாம் காணாமல் போகும். கலைத் துறையினருக்கு நல்ல புகழும் வருமானமும் கூடும். மக்களால ஆதாயம் உண்டு. ஷேர் மாதிரி முதலீடுகள் வேண்டாம். பயணத்துல எச்சரிக்கையா இருங்க. ரொம்ப நெருக்கமான உறவினர் ஒருத்தரைப் பிரிய வேண்டி வரலாம். சிலருக்கு வெளியூர் டிரான்ஸ்ஃபர் இருக்கும். பெண்களுக்கு இது ஜாலி வாரம்.



கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

குரு பார்வை ஸ்ட்ராங்கா இருக்கு. இந்த வாரம் உங்க காரியங்களுக்குத் தடையே வராது. மனசுல உற்சாகம் பொங்கும். ராப்பகலா உழைச்சி நல்ல பேர் அடைவீங்க. ஆனா, நிர்வாகத் துறையினருக்குச் சில பிரச்னைகள் வரலாம். தொழில் துறையினருக்கு, கூட வேலை பார்க்கறவங்க, பார்ட்னர்களால ப்ராப்ளம் வரும். புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும்னாலும் எதையும் தீர யோசிச்சி செயல்படறது நல்லது.

துலாம் : *(சித்திரை 3-ம்*



நடக்குமென்பார், நடக்கும்!

பாதம் முதல் சுவாதி, விசாகம், 3-ம் பாதம் வரை)

எதையும் ஒரு தடவைக்கு ரெண்டு தடவை யோசிச்சி செய்யுங்க. யாரையும் 100 பர்சன்ட் நம்பிடாதீங்க. குறிப்பா, அறிமுகமில்லாதவங்களோட அதிக சகவாசம் வேணாம். வீட்டுல சில பிரச்னைகள் வரலாம். சொத்து விஷயத்துல சிக்கல்கள் வரும். கோர்ட் கேஸ்னு கூட சிலருக்கு அலைய வேண்டி வரும். பெற்றோர் உடல் நலத்துல கவனமா இருங்க. உங்க அலுவலகப் பிரச்னைகளை நண்பர்கள்கிட்ட பேச வேணாம். கண்ட இடங்கள்ல சாப்பிடாம இருக்கறது நல்லது.

விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

மனசு உற்சாகமா இருக்குமே? சுறுசுறுப்பா ஆக வேண்டியதைப் பாருங்க. நண்பர்கள், உறவினர்கள் எல்லாருமே உங்க சப்போர்ட்டுக்கு வருவாங்க. வீடு வாங்கறதோ, கல்யாணம் போன்ற காரியங்களுக்கோ, தொழிலை மாத்திக்கறதுக்கோ இது சரியான நேரம். ஆனா, மனைவி உடல் நலத்துல கவனமா இருக்கறது அவசியம். ராத்திரி பயணம் வேணாம். சிலருக்கு செருப்புக்கடி, அலர்ஜி மாதிரி, ஏதாவது கோளாறு வரலாம். வாரக் கடைசில ஒரு இன்ப அதிர்ச்சி உங்களுக்கு இருக்கு.

தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

பிரச்னைகள் நிறைய வரும்தான். ஆனா, எதையும் சமாளிக்கற உறுதியும் சாமர்த்தியமும் உங்களுக்கு இருக்கு. இந்த வாரம் மின்சார சம்பந்தப்பட்ட பொருள்கள் விஷயத்துல எச்சரிக்கையா இருக்கணும். பல்பு மாட்டற வேலை கூட வேணாம். பொதுப் பிரச்னைகள்ல தலையிடாதீங்க. வம்பு தும்புகள் பக்கம் போக வேணாம். ஆபீஸ்ல அதிகாரிகள் பத்தி கமென்ட் அடிக்காதீங்க. நண்பர்களே எதிரியாகி, மாட்டி விடறதுக்கு வாய்ப்பிருக்கு.

மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

கிரகங்கள் சாதகமா இல்லை. உங்க நடவடிக்கைகள்ல அதிக கவனம் அவசியம். புதிய திட்டங்கள் எதுவும் இப்ப வேணாம். சிலருக்குக் காதல் கசக்கும். மனைவியோட ஊடல் வரலாம். பணப் பிரச்னை வரும். கடன் குடுத்தவங்களால தொல்லை அதிகரிக்கும். யாருக்கும் இப்ப ஜாமீன் கையெழுத்துப் போடாதீங்க. வழக்கு ஏதும் இருந்தா வாய்தா வாங்கப் பாருங்க. வீட்டு மனுஷங்ககிட்ட அன்பா நடந்துக்கங்க.

கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

சமூக சேவைல நாட்டமுள்ள உங்களுக்குப் புகழ்ப் பஞ்சமே இல்லை. இப்ப நீங்க தொட்டதெல்லாம் துலங்கற நேரம். உறவினர்களால் ஆதாயம் உண்டு. சிலருக்குத் திருமண யோகம் கூடி வரும். பணப் பிரச்னை இருக்காது. வீடு கிடு வாங்குவீங்க. பழைய பாக்கிகள் வந்து சேரும். பையன்களால சில நல்ல காரியங்கள் நடக்கும். வீட்டுப் பிரச்னைகளை வெளில பேசாம இருக்கறது நல்லது.

மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

ஜென்ம ராசில குரு இருக்கறது அவ்வளோ நல்லதில்லை. ஆனாலும் உங்க பிரச்னைகள் வந்த சுவடுல காணாம போயிடும்! வழக்கு விவகாரங்கள் சாதகமான பலனையே தரும். கலைத் துறையினருக்கு ஆதாயமான வாரம். பெண்களால சில பிரச்னைகள் வரலாம். பயணத்துல கவனமா இருங்க. டூ வீலர் பயணம் வேணாம். கைல கால்ல அடிபட்டுப்பீங்க. சிலருக்கு நாய்க்கடி சான்ஸ் உண்டு! எச்சரிக்கை அவசியம்.

ஒரு காதல் டைரி

11

அது என்னிடம் எந்த உணர்ச்சியையும் ஏற்படுத்தவில்லை. இரவிலே பயம் வரும்போது துணைக்கு ஏட்டனை (மாமவின் மருமகனை)க் கூப்பிட்டிருப்பேன்.

சாது! தப்பாய்ப் புரிந்து கொண்டான்.

உறவினர்கள் உற்சாகப்படுத்தினர்.

ஆனால் என்னிடமிருந்து சௌஜன்யத்தைத் தவிர அதிகமாய் எதுவும் கிடைக்காது என்று நான் தெளிவு படுத்தினேன்.

கல்லூரியின் முதல்வனாகப் பாஸ் செய்த அவன், கண்ணீரோடு என்னிடம் விடை பெற்றான். அப்புறம் இதுவரை அவனை நான் பார்க்கவில்லை.

இப்போது வட இந்தியாவில் ரயில்வேயில் பணியாற்றுகிறான். கிட்டாத பொருளின் மீதுள்ள ஆசை அவனை விட்டு இன்னும் நீங்கவில்லை. ஆனால் அவனுக்கு வழங்குவதற்கு ஒன்று மட்டுமே என்னிடம் உள்ளது. களங்கமற்ற சௌஜன்யம்.

நான் கல்லூரியில் சேர்ந்தேன். வேலை குறைந்தது. அண்ணன்களுக்கும் வேலை கிடைத்தது. அப்பாவின் பணம். கடற்கரையிலும் பிளாட்பாரங்களிலும் வசிக்க முயன்றேன். ஆனால் துயரம் என்னைக் கொன்று விட்டிருந்தது.

பலரும் ஆசைப்பட்டனர்; என்னைத் திருமணம் செய்து கொள்ள.

அம்மா அழுது கொண்டே சொன்னாள், நான் ஊருக்குப் போனபோது. நான் கேட்கவில்லை.

அந்த வாழ்க்கை எனக்கு இயலாதது என்று நான் வாதித்தேன். தன் இறுதி ஆசை அதுதான் என்று அம்மா தெரிவித்தாள். வற்புறுத்தினாள். நான் கேட்கவில்லை. அம்மா பொறுத்துக் கொள்ளேன்!

நினைவுகள்.

நான் சீனியர் இண்டர்மீடியட்டிற்கு வந்தேன். ஒரு கடிதம்! பயங்கரமான கடிதம்! அம்மாவை கோர்ட்டின் மூலம் விவாகரத்து செய்திருக்கிறார் என்று!!

எனக்குத் தலை சுற்றியது. அவமான பீதியாலும், மனோவேதனையாலும் நான் கதறி அழுதேன். ஆனால் கண்ணீர் வரவில்லை. தலைவலி அதிகரித்தது.

டாக்டர் கண்ணாடி போட்டுக் கொள்ளச் சொன்னார். அந்த மருந்துவரின் முட்டாள் தனத்தைக் கண்டு நான் சிரித்தேன்.

பிறகு நான் நடிக்கத் தொடங்கினேன். உள்ளே அழும்போது வெளியே சிரிப்பது! இதுதான் என் பாத்திரம். உலக நாடக மேடையில்.


சகோதரா!

நான் அனுபவித்த மனோ வேதனைக்கு எல்லை இல்லை. மனோ வேதனை என்னை எரிக்கத் தொடங்கியது. எடை 104 பவுண்ட் ஆயிற்று.

மருந்துகளுக்குப் பணம் செலவழிக்கத் தொடங்கினேன். அதுவும் மற்றொரு முட்டாள் தனம்.

கல்லூரி விடுமுறைக்கு மூடுவதை நினைத்தால் ஒரு பவுண்ட் எடை குறையும். யாரிடம் போவேன்? யார் எனக்கு ஆறுதல் தருவார்கள்? உத்தியோக ஆசை, குடும்ப வாழ்வில் உள்ள வெறுப்பு இவை என்னைக் கல்யாணம் செய்து கொள்ள விடவில்லை (இன்றும் அதைக் குறித்து நான் வருந்தவில்லை).

இதன் நடுவில் ரங்கூனிலிருந்து ஒரு பொல்லாத சேதி வந்தது. மூன்றாவது அண்ணன் கல்யாணம் செய்து கொண்டானாம். ஒரு பர்மாக்காரியை (இப்போதும்



அண்ணன் மனைவி அவள் தான்; ஒரு நாயுடுப் பெண். அது ஒரு பயங்கர 'ரொமான்ஸ்' ஆக இருந்தது. எப்படியோ அது நடந்து விட்டது).

வைக்கம் முகம்மது பஷீர்

தமிழில் : வையவன்

அம்மா மூச்சுமுட்டி அழத் தொடங்கி னாள். பழிவாங்கிய வெறியால் அப்பா புன் னகை செய்தார். (அப்பா! எப்படிப்பட்டவர் ஆனாலும் நான் தங்களைப் போற்றி வணங்குகிறேன்; நேசிக்கிறேன்).

பிரிய நண்பரே,


எனது இரண்டு ஆண்டு கல்லூரிப் படிப்பு ஓர் ஒளிமயமான காலமாய் இருந்தது. ஒரு மாணவி என்ற வகையில் எல்லாப் புகழையும் நான் எய்தினேன்.

மாகாண அளவில் 'ராங்க்' உடன் நான் கல்லூரியின் முதல் மார்க்கும், மற்ற செயல்பாடுகளில் ஏராளமான பரிசுகளும் பெற்றுப் பாஸா னேன்.

பிரின்சிபல் இன்றும் என்னை 'வாத்சல் யத்துக்குரிய மாணவியே!' என்றுதான் புகழ்ந்து கொண்டாடுகிறார்.

சொன்ன பேச்சை நான் கேட்காது போனதால் சௌமினி விஷயத்தில் சிரமம் ஆரம்பித்தது. இரண்டாவது அண்ணனுக் கும், அவளுக்கும் பெண் மாப்பிள்ளையை 'எக்ஸ்சேஞ்ச்' செய்து கொள்வது என்ற நிலையில்.

அப்பாவும் சம்மதித்தார். ஆனால் மனப் பூர்வமாக காலத்தை நீட்டினார். அதை



அவர் நடத்தி வைக்கவில்லை. அம்மாவை வஞ்சம் தீர்ப்பதில் உள்ள வெறி.

அம்மா சந்தோஷப்படுவதைப் பார்க்க ஒருவகையிலும் அப்பாவால் முடியாது. போதாக்குறைக்கு, அப்பாவின் மருமக்கள் எல்லோருக்கும் கல்யாணம் ஆகிவிடவில்லை.

தெய்வமே! தீன தயாளா! அப்பாவுக்கு மன்னிப்புக் கண்ணீர் வற்றியது.

அம்மா அழுதாள். நான் அழுதேன். அழு தழுது கண்ணீர் வற்றியது.

செத்துப் போக விரும்பினேன்.

ஆனால் அம்மா!

அதுவே. அந்த சினேகப் பிரவாகம்தான் என்னைத் தடுத்தது.

அன்று நான் விரும்பியது போல மெடிக்கல் காலேஜில் ஸீட் கிடைக்கவில்லை. நான் பி.எஸ்ஸியில் சேர்ந்தேன். படிப்பதற் கான துடிப்பு போய்விட்டது.

வாழ்க்கை வெறுத்தது.

செத்துக் கொண்டிருக்கும் ஒரு வாழ்க்கை.

மருந்துகள் அதிகரித்தன.

ஆனால் எடை 100 பவுண்ட்.

லாபரட்டரியில் சோதனை நடத்திக் கொண்டிருந்தேன். ஒரு கடிதம். ஐயோ அது என் இதயத்தைப் பிளந்து எறிந்தது.

சகோதரா! அழுங்கள்! இவளுக்காக அழுங்கள். பிரார்த்தனை செய்யுங்கள்!

சுயமரியாதை சற்றுக் கூடுதல் எனக்கு. நான் யார் முன்பும் நின்று கெஞ்சி யாசித்த தில்லை. சகோதரா அழுங்கள்.

அப்பா தன் 69வது வயதில் இரண்டாவ தாக (பத்தாவது என்பதுதான் மிகவும் சரி யாக இருக்கும். ஆனால் கண்களால் பார்த்த தில் இரண்டாவது) ஒரு பெண்ணைக் கல் யாணம் செய்து கொண்டாராம்.

அதனால் மனமுடைந்து எந்த சாகசமா வது செய்து விடாதே! அம்மாவைப் பார்க்க வும். சமாதானப்படுத்திக் கொள், அவள் இதயம் இங்கேதான் என்று சொல்லியபடி ரங்கூனிலிருந்து வந்த ஒரு கடிதம். அண்ணன் களின் கடிதம்.

எனக்கு யாரும் விவரம் அறிவிக்க வில்லை. எனக்கும் தெரியாது. வாஸ்தவத்தில் இந்த உலகில் அப்பாவுக்கு ஒருவர் மீதாவது பயம் உண்டெனில் அது என்னிடம்தான்!

பொட்டாஸியம் சயனைடை (பயங்கர விஷம்) வைத்துச் செய்யும் ஒரு 'எக்ஸ்பெரி மண்ட்' டைத்தான் நான் அன்று செய்து கொண்டிருந்தேன்.

புகையை வெளியேற்றும் 'ப்யூமிங் - கப் போர்டி'ல் வைத்துத்தான் அதை சூடு படுத்த வேண்டும். நான் என்ன செய்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை.

நான் கண் திறந்து பார்த்தபோது புரொ பஸரின் தனி அறையில் சாய்வு நாற்காலியில் படுத்திருந்தேன். டாக்டர் பக்கத்தில் இருந் தார்.

அந்தக் கடிதம் என் கையில் இல்லை.

ஆனால், 'ஸாரி'யிலும்' ப்ளவுஸிலும் ஏராளமாக ரத்தம் சிந்தியிருந்தது.

"அம்மா" என்றேன். அர்த்த புஷ்டியுடன்.

மாஸ்டர் அந்த நாற்காலியில் உட்கார்ந் திருந்தார்.

தலை திரும்பி விழுந்தபோது முகம் எங் கேயோ சென்று இடித்து வாயிலிருந்து ரத்தம் வழிந்திருந்தது.

"நான் எங்கே இருக்கேன்?"

"பதறாதே. படுத்திரு." அவர் சொன்னார்.

அவரை நான் மறக்கமாட்டேன். அவர் தன் காரில் என்னை வீட்டிற்கு அழைத்துச் சென்றார்.

அக்கடிதம் – கட்டுங்கடங்காத ஓர் எரி மலை வெடித்ததை அவர் வாசித்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. அதை என் கையில் தந்தார்.

அடுத்த நாள் கல்லூரிக்குப் போகவில்லை.

அதற்கடுத்த நாள் போனேன். அன் போடும் இரக்கத்தோடும் எல்லோரும் என் னைப் பார்த்தனர். அதே சமயம் அக்கறை யோடு.

பதினெட்டு வயசான ஓர் இளம் பெண்,

ஒரு கடிதம்.

மயக்கம்.

எல்லோரும் சரஸ்வதீ பிரசாதம் போலப் பேசினார்கள்.

எப்படியோ எனக்குக் கொஞ்சம் 'சயனைட்' சம்பாதிக்க முடிந்தது.

வீட்டை அடைந்தேன்.

அதற்கு முன்னரே உடல் நலம் இல்லாத தால் படிப்பை நிறுத்திக் கொள்ளப் போவ தாக எல்லோரிடமும் அறிவித்து விடை பெற்றுக் கொண்டேன்.

கொஞ்சம் விஷத்தைப் பூனைக்குக் கொடுத்தேன். அது உடனே செத்து விழுந் தது. அதன் குட்டிகள் நாலு பக்கமும் நிற் பதைக் கண்டேன்.

என் அம்மா!

"அம்மா நான் எப்படிச் சாவேன்? எனக்கு செத்துப் போக வேண்டும்." நான் அந்தப் பல்லவியை மீண்டும் தொடங்கினேன்.

அந்த 'சமாச்சாரம்' இன்னும் என் கைவசம் உண்டு.

ஆனால் நிர்ப்பாக்கியமான நான் மட்டும் செத்துப் போகவில்லை.

அம்மா எனக்கு மஹாதேவியாக மாறினாள். நான் இப்போது அவளைப் பூஜிக்கிறேன்.

இதற்கிடையே நான் வெள்ளைக் கதர்த் துணியை ஒதுக்கிவிட்டு தனி 'ஸில்க்'குக்கு மாறினேன். ஒரு தமாஷ்.

அம்மாவும் பிறரும் ஒரு வீடு வாடகைக்குப் பிடித்து வசிக்கத் தொடங்கினர். அப்பாவின் பணத்தை ஏற்கவில்லை. அண்ணன்கள் பணம் அனுப்பினர். நான் அங்கே சென்றேன்.

வழிப் பயணத்தில் வண்டியில் ஒரு பெண்ணின் உடல் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. அந்த முகத்தில் என் அம்மாவின் சாயல்.

கழுத்திலிருந்து அகன்றிருந்த அந்தத் தலையும் இயற்கை அன்னையின் ஒழுக்கு நிற்காத ரத்தப் பெருக்கும் எனக்கு வரவேற்பு நல்கின.

படிப்பை நிறுத்தியதற்காக யாரும் என்னைக் கோபித்துக் கொள்ளவில்லை. ஆனால் ஆறு மாதம் கொஞ்சம் சகித்துக் கொண்டிருந்தால் ஒரு 'டிகிரி' கிடைத்திருக்கும் என்று எனக்குப் புரியவைத்தனர்.

கனன்று ஜொலிக்கும் ஓர் எரிமலை!

நான் எப்படிப் படிப்பேன்?

கொடுங்கல்லூர் தேவியைத் தொழுது வர ஒரு நாள் போயிருந்தேன். கையை வெட்டி தேவிக்கு என் ரத்தம் சமர்ப்பித்தேன். பிரார்த்தித்தேன். 'சாவதற்குத் தைரியம் தாயேன்' என்று.

அண்ணன்கள் ரங்கூனில் இருந்து வந்தனர். என்னைக் கண்டு ஒவ்வொருவரும் அழுதனர். கொஞ்ச நாள் இடம் மாறி வசித்தால் நன்றாய் இருக்குமென்று ஒருவன் சொன்னான்.

அதற்கு நானும் இசைந்தேன்.

நாங்கள் கோயம்புத்தூர் 'மோஹன் லாட்ஜில்' ஒரு மாதம் இருந்தோம். அதுவும் மற்றொரு முட்டாள்தனம்.

மூன்று வருடம் கழித்து வந்து அம்மாவோடு கூட இருக்கச் சம்மதியாது அண்ணன் பேச்சைக் கேட்டது தவறு என்று எனக்குத் தோன்றியது.

நான் உடனே வீடு திரும்பினேன். என் தாளத்துக்கு அவர்கள் ஆடினர். காரணம் களங்கமற்ற நான் அழுவதற்கென்றே பிறந்த ஜீவன் என்பது அவர்களுக்குத் தெரியும். என் எடை 96 பவுண்ட் ஆயிற்று.

ஒரு நாளாவது மனம் திறந்து சிரிக்க வேண்டும் என்று நான் ஆசைப்பட்டேன்! அது என் ஜாதகத்தில் இல்லை போலும். அழகிற்கு நான் ஆசைப்பட்டதில்லை. சொத்துக்காக வெம்பியதுமில்லை.

ஆனால் மன சாந்தி – அதற்காக நான் உள்ளம் உருகி வேண்டினேன்.

ஒரு மாத காலம் அழுது தீர்ப்பது என்று முடிவெடுத்தேன். என் வாழ்வில் நான் எதையும் சாதிக்கவில்லை. சாதிக்கப் போவதுமில்லை என்று ஓர் உணர்வு என் ஆசைகளைக் கொன்றது.

நான் எல்லோருக்கும் என் சாவுக்கடிதம் எழுதி அனுப்பினேன்.

மனித வாழ்க்கை!

எனக்கு வாழத்தான் ஆசை.

அதன் பலன் இதுதான்.

அப்பா புது மனைவியை ஒதுக்கி வைத்தார். நாங்கள் எல்லோரும் ஒன்று கூடி இணைந்து வசித்தோம். என் சபதம். மீண்டும்



''அந்த பாங்க் மானேஜரை நல்லவர்னு நினைச்சேன்; மகா மட்டமான ஆளுன்னு தெரிஞ்சு போச்சு.''

''எப்படி?''

''மூணு வருஷத்துக்கு முந்தி வாங்கின கடனை அடைக்கச் சொல்லி நச்சரிக்கிறார்!''

– சீர்காழி ரேவதி

ஒரு முறை (கொடுங்கல்லூரில்) என் ரத்தத்தைக் கொண்டு 'குருதி கழித்தல்' என்ற சடங்கு நிறைவேற்றும் பிரதிக்ஞையுடன் நான் நிறைவேற்றினேன்.

நான் மீண்டும் கல்லூரியில் சேர்ந்தேன். சௌஜன்யத்திற்காக வாழ்க்கையையும் உயிரையும் பலியிடத் துணிந்துள்ள ஒரு பெண்தான் நான்.

எனக்கு நேசிக்க மட்டுமே தெரியும். வெறுக்கத் தெரியாது.

அண்ணன்கள் எனக்கு எப்போதும் எழுதுவார்கள். "தங்கம், யூ ஆர் டூ குட் ஃபார் திஸ் வர்ல்ட்."

இந்த உலகத்தில் பிறக்க வேண்டியவள் அல்லவென்று!

(தொடரும்)

மாலை வெயில் கொஞ்சம் உக்ரம் குறைந்து இருந்தது.

மகாதேவன் வாசல் பக்கம் போட்டிருந்த பிளாஸ்டிக் வலைப் பின்னல் நாற்காலியைத் தூக்கி உள்ளே வெராந்தாவில் போட்டார். லக்ஷ்மி வெளியே போயிருந்தாள் போலிருக்கிறது. ஒருமுறை உள்ளே பார்த்துக் கூப்பிட்ட போது, நாட்டுப் பெண் ரமா மட்டும் தலையை எட்டிப் பார்த்துவிட்டு இழுத்துக் கொண்டு விட்டாள்.

ஒரு வேளை லக்ஷ்மி, கோயிலுக்குப் போயிருக்கலாம் என்று நினைத்துக் கொண்டார் மகாதேவன். அப்படியானால் அவள் வருவதற்குக் கொஞ்சம் நேரம் ஆகும்.

வெளியே தலைநீட்டிப் பார்த்தாளே ரமா, 'என்ன வேணும்?' என்று ஒரு வார்த்தை கேட்டிருக்கலாம் என்று மகாதேவனுக்குத் தோன்றியது. எப்போது அவள் அப்படிக் கேட்கவில்லையோ, அப்போதே, 'ஒரு தம்ளர் காபி கிடைக்குமா?' என்று, கேட்க நினைத்ததை அவர் கேட்கவில்லை.

ஒரு வேளை பதிலே கிடைக்காமலும் போகலாம். 'பிற்பகல் காபி குடித்தது நினைவு இல்லையோ? மறுபடியும் எதற்கு?' என்று காபியைவிடச் சூடாகப் பதில் வந்தாலும் வரலாம். மத்தியதரக் குடும்பங்களில் மனஸ்தாபம் ஏற்பட, ஒரு கப் காபி கூடச் சில சமயங்களில் காரணமாகி விடுகிறது என்று யாரோ வெகு யதார்த்தமாகச் சொன்னது மகாதேவனுக்கு நினைவுக்கு வந்தது. தமக்குள்ளேயே சிரித்துக்கொண்டார்.

பிற்பகல் மருமகள் படித்த பிறகு, விட்டுப் போன பக்கங்களை நியூஸ் பேப்பரில் மேய்ந்தார். முதியோர் ஆண்டு பற்றிய இரண்டொரு செய்திகள் அவர் கவனத்தைக் கவர்ந்தன. எல்லாமே வெளிநாட்டில் எப்படி முதியோர் நடத்தப்படுகிறார்கள் என்ற செய்திகளின் அடிப்படையில் எழுதப்பட்ட செய்திகள்...

கேட்டைத் திறந்து கொண்டு லக்ஷ்மி வருவது தெரிந்தது.

கதவைத் திறந்தவரிடம், நெற்றிக்கு இட்டுக் கொள்ள விபூதியை நீட்டினாள் லக்ஷ்மி.

வயது அறுபதை எட்டப் போகிறது என்றாலும், களை சொட்டுகிற முகம். பருமனும் அல்லாமல் மெலிதாகவும் இல்லாமல், சாதாரண நூல் சேலையிலும் பளிச்சென்று இருப்பாள் லக்ஷ்மி. அதிலும் விசேஷ நாட்களில் அல்லது பண்டிகை தினங்களில், பட்டில் அவள் அழகு இன்னும் பளீரிடும்...

விளையாடப் போன பேரன் குமார் இன்னும் வரவில்லை. அவன் பள்ளியிலிருந்து திரும்பி வந்து உதறிவிட்டுப் போன யூனிஃபார்ம், பூட்ஸ் எல்லாம் தாறுமாறாகக் கிடந்தன.

லக்ஷ்மி அவற்றை ஒழுங்காக ஓர் இடத்தில் வைத்தாள்.

உள்ளே ரமாவுக்கு உதவியாக இருக்கலாம் என்று சமையலறைக்குள் போனாள் லக்ஷ்மி.

''எப்போ போபாலுக்குப் போகணும்னு ராமுவுக்கு



தகவல் வந்து விட்டதோ?" என்று ரமாவிடம் கேட்டாள்.

"இல்லே. அவர் வந்தால்தான் தெரியும். ஆனால் இந்த வீட்டை வாடகைக்கு அடுத்த மாதம் முதல் தேதியிலிருந்து விட்டு விடலாம் என்று சொல்லியிருக்கிறார். அதனால இந்த மாசக் கடைசிக்குள் போபால் போய்விடு வோம். குமாரோட ட்ரான்ஸ்பர் சர்ட்டிபி கேட் கூட வாங்கி வைக்கச் சொல்லிட்டார்!"

"இந்த மாசமேயா?"

"ஆமாம்!"

உடலில் மெல்ல ஓர் அதிர்வு உண்டா யிற்று. ராமகிருஷ்ணனுக்கு போபாலுக்கு மாற்றல் உத்தரவு வந்தது தெரியும். வீடு தேடி அலைய வேண்டாம் என்றான்.

மாசச் கடைசிக்குள் மூர்த்தி வந்து லக்ஷ்மி யையும் மகாதேவனையும் அழைத்துக் கொண்டு போகிறேன் என்று போனில் பேசும்போது சொல்லியிருந்தான். வீட்டை வாடகைக்குக் கொடுத்து விட்டால், முதல் தேதி அன்றே குடித்தனக்காரர் மூட்டையும் முடிச்சுமாக வந்து சேர்ந்து விட மாட் டாரோ?

ராமகிருஷ்ணன் வரும் போதே மணி ஒன் பதைத் தாண்டிவிட்டது. வேலைப் பளு. ஆபீஸ் சிக்கல்களில் ஏற்கெனவே எள்ளும் கொள்ளும் வெடிக்கிற முகம்.

அவன் வந்தவுடன் எதைப் பற்றியும் வாயைத் திறக்கக்கூட லக்ஷ்மியால் முடிய வில்லை. மகாதேவன், அவனாகச் சொல்லட் டும் என்று காத்திருக்கிற வகை.

இரவு படுக்கப் போன சமயம், இரண்டா வது பிள்ளை மூர்த்தியிடமிருந்து போன் வந்தது.

அப்பாவும் அம்மாவும் தூங்கிவிட்டார் களா என்று கேட்டான்.

"என்னடா, என்ன விஷயம்?" என்றான் ராமு.

"சின்ன பிராப்ளம் ராமுண்ணா... நீங்க போபால் போற தேதி நிச்சயமாயிட்டுதா?"

"எஸ். மாசக் கடைசில நாங்க கிளம்ப றோம். ஒண்ணாம் தேதியிலிருந்து வீட்டை வாடகைக்குக் கொடுத்துடப் போறேன். நல்ல டீசன்ட் ஃபாமிலி. நீ முப்பதாம் தேதியே

கூடு திரும்பும் பறவைகள்

வந்து அம்மாவையும் அப்பாவையும் அழைத்துக் கொண்டு போயிடு. ஏன்னா, சாமான் எல்லாம் முதல் நாளே பாக் பண்ணி லாரிலே போட்டுடப் போறேன். அவங்க சமைக்கணும்னாக் கூட முடியாது..."

"அதான் சின் பிராப்ளம்னேனே ராமுண்ணா. என்னால முப்பதாம் தேதி வர முடியாது. அன்னிக்கு பெங்களூரில் இருந் தாகணும் நான். எப்படியும் இரண்டு நாள் ஆகிவிடும் அங்கே வேலை முடிய!"

"என்ன இப்படி குண்டைத் தூக்கிப் போடறே - கடைசி நிமிஷத்துல?"

"மூர்த்தி வந்து எங்களை அழைத்துக் கொண்டு போன பிறகு வாடகைக்கு விடலாமே? வரப் போகிறவரிடம் ஏற்கெனவே ராமு சொல்லி விட்டானோ?"

"நாங்கள் புறப்பட்டுப் போன உடன் நீங்கள் இரண்டு பேரும் தனியாக இருப்பீர் கள் என்று அவருக்குத் தெரியுமே? அதனால உடனே வந்து உங்களைக் கூட்டிக் கொண்டு போய்விடுவார் என்றுதான் இவர் சொல்லிக் கொண்டிருந்தார். பார்ப்போம். இன்னும் முழுசாகப் பதினைந்து நாள் இருக்கிறதே!" என்றாள் ரமா.

குருதேவ்

"என்ன பண்ணறது அண்ணா? அர்ஜென்ட் ஒர்க். நான்தான் போயாகணும். அதனால ரெண்டு நாள் கூட அவங்க அங்கேயே இருக்கட்டும். ஜஸ்ட் டு டேஸ்தானே? மூணாவது நாள் நானே வந்து கூட்டிட்டுப் போயிடறேன். குடித்தனம் வரவங்ககிட்ட நீ கொஞ்சம் டயம் கேளு!"

"நான்சென்ஸ்!" என்று இரைந்தான் ராமகிருஷ்ணன். "கடைசி நிமிஷத்துல போய் என்னால எந்த அட்ஜஸ்ட்மென்ட்டும் பண்ண முடியாது. வரப் போறவர் ஒரு பாங்க் ஆபீசர். அட்வான்ஸ் எல்லாம் கூட வாங்கிட்டேன். அவரும் அவரோட லேண்ட்லார்ட்கிட்ட முப்பதாம் தேதி வெக்கேட் பண்றேன்னு பிராமிஸ் பண்ணிட்டார்."

"நீ கொஞ்சம் டயம் கேட்டுக்கன்னு தானே சொல்றேன்?"

"இம்பாஸிபிள். நீ என்ன பண்ணுவியோ, எனக்குத் தெரியாது!" – ரிசிவரை டக்கென்று வைத்து விட்டான் ராமகிருஷ்ணன்.

அதற்குப் பிறகும் இரண்டு முறை, விட்டு விட்டு டெலிபோன் மணி அடித்தது. ஆனால் ராமகிருஷ்ணன் அதை எடுக்கவே இல்லை.

நங்கநல்லூரில் அந்த வீட்டைக் கட்டுகிற போது ராமகிருஷ்ணனுக்குக் கொஞ்சம் பணம் தேவைப்பட்டது. யாரிடமும் அவன் கை நீட்டிக் கேட்கக் கூடாது என்று தீர்மானித்திருந்தான்.

"லாக்கர்ல இருக்கறதை வேணுமானா இப்போதைக்கி யூஸ் பண்ணிக்குங்களேன்?" என்று ரமா கூடச் சொன்னாள். அவனுக்கு அது உடன்பாடாய் இருக்கவில்லை.

தம்பி மூர்த்தியிடம் கேட்க விருப்பம் இல்லை. ஒரே தங்கை ஜானகியின் கணவரிடம் கேட்கலாம். பெரிய எக்ஸ்போர்ட் பிஸினஸ் செய்கிறவர் அவர். எண்பதாயிரம், தொண்ணூறாயிரம் எல்லாம் அவருக்கு ஒரு பெரிய தொகையே அல்ல. ஆனால் ஜானகியிடமா? என்று தயக்கம் ஒரு தடுப்பைப் போட்டது.

பிரச்னையைத் தீர்த்து வைத்தவள் லக்ஷ்மி தான்.

ரிடையரான அன்று பிராவிடன்ட்ஃபண்ட் தொகை செக்கை, சைக்கிளில் இருந்து இறங்கியதும் இறங்காததுமாக அவளிடம் கொண்டு வந்து மகாதேவன் காண்பித்தாரே? பிள்ளைக்கு வீடு கட்ட அது தேவைப்படும் போது, கொடுக்கத்தானே வேண்டும்?

"கையில் கொஞ்சம் பணம் இருந்தால் தான் நல்லது லக்ஷ்மி. எப்போது என்ன தேவைப்படும் என்று இப்போது ஒன்றும் தெரியாது. இரண்டு பேருமே நம்மை வைத்துக் கொள்ளவில்லை என்றால் நம் நிலைமை என்ன?" என்றார் மகாதேவன்.

"சீ, என்ன பேசுகிறீர்கள்? ராமுவும் மூர்த்தியுமா நம்மை வைத்துக் கொள்ள மாட்டார்கள்? யாராவது கேட்டால் கூடச் சிரிப்பார்கள். நாளைக்கே ராமுவுக்கு வேண்டியதை பாங்குலேருந்து வாங்கிக் கொண்டு வந்து கொடுத்து விடுங்கள். அப்புறம் அவனாகத் திருப்பித் தந்தால் வாங்கிக் கொள்ளலாம்!"

லக்ஷ்மி இத்தனை உறுதியாகச் சொன்ன பிறகு, மகாதேவனால் வேறு எதுவும் யோசிக்கவே முடியவில்லை.

ஆனால் வீடு கட்டி, குடி வந்து, இந்த ஏழு வருடங்களில், அப்பா கடைசி நிமிடத்தில் கொடுத்த பணம் பற்றி ஒரு வார்த்தை கூட ராமுவோ, ரமாவோ தங்கள் பேச்சில் மறந்தும் கூடக் குறிப்பிட்டதாக மகாதேவனுக்கு நினைவில்லை.

இன்னொரு பிள்ளை மூர்த்தி இருக்கும் கோயம்புத்தூருக்கு லக்ஷ்மியுடன் போய் ஒரு மாதம், இரண்டு மாதம் தங்க நேரும்போது எல்லாம், அவனுக்கும் "இந்தாடா மூர்த்தி, வைத்துக் கொள்!" என்று சந்தோஷமாகக் கொடுக்கவோ, அவன் பெண் கிரிஜாவுக்கு ஒரு சின்ன செயினாவது பண்ணிக் கொண்டு போய்க் கொடுக்கவோ இயலாது போய்விட்டது குறித்து மகாதேவனுக்கும், லக்ஷ்மிக்கும் மிகப் பெரிய மனத்தாங்கல் இருந்தது என்னவோ உண்மை.

அதிலும், ராமுவுக்கு வீடு கட்டும் போது அப்பா கிட்டத்தட்ட ஒரு லட்ச ரூபாய் கொடுத்திருப்பது மூர்த்திக்குத் தெரிந்து போய், அவனும் மனைவி ஜனனியிடம் அதைச் சொன்ன பிறகு, அடுத்த தடவை



"தையலைப் பிரிக்கக் கூடாதுன்னு நாலாம் நம்பர் ரூம் பேஷண்ட் அடம்பிடிக்கிறார் டாக்டர்..."

"ஏன், என்ன காரணம்?"

"மூவாயிரம் செலவு செஞ்சு போட்ட தையலை ஏன் பிரிக்கணும்னு கேட்டுச் சத்தம் போடறார்!"

– பாலு

அவர்கள் கோயம்புத்தூர் போனபோது அதன் விளைவு தெரிந்தது.

எப்போதும் ஸ்டேஷனுக்கு வந்து அழைத்துப் போகும் மூர்த்தி அப்போது வரவே இல்லை. மகாதேவனும் லக்ஷ்மியுமாக ஒரு ஆட்டோ பிடித்து, பெட்டிகளைத் தூக்கி வைத்து, சாய்பாபா காலனியில் உள்ள அவன் வீட்டைத் தேடிப் போக வேண்டி வந்தது. எத்தனை நாள் இருக்கப் போகிறார்களோ என்கிற பார்வை, ஜனனியின் முகத்தில் தெரிந்தது.

ஆனால் குழந்தை கிரிஜாவைக் கொஞ்சியதில் இருவருக்குமே மனசு சற்றே ஆறுதல் அடைந்தது—

வீட்டு வாசலில் லாரி நின்று கொண்டிருந்தது. ராமகிருஷ்ணன் பாக் செய்த ப்ரிஜ்ஜையும், காத்ரெஜ் அலமாரிகளையும் ஏற்றுவதில் மும்மரமாய் இருந்தான்.

ரமாவும், குமாரும் முதல் நாளே புறப்பட்டு போபால் போய் விட்டனர்.

மாலை நெருங்குகையில் சாமான்கள் முழுக்க லாரியில் ஏற்றப்பட்டு, ராமகிருஷ்ணன் உடைகளை மாற்றிக் கொண்டு புறப்பட்டான்.

வெராந்தாவில் மகாதேவனும் லக்ஷ்மியும் இருந்தார்கள்.

"நான் வரேன்பா. வரேன்மா. இன்னிக்குள்ள மூர்த்தி இங்க வந்துடுவான். உங்களைக் கூட்டிக் கொண்டு போயிடுவான். நான் போபால் போய்ச் சேர்ந்ததும் போன் பண்ணுகிறேன்னு அவன் கிட்டே சொல் விட்டால் போதும்!'' என்றான் ராமகிருஷ்ணன்.

மகாதேவன் சரி என்று கூடச் சொல்ல முடியாமல் அவர் தொண்டை அடைத்துப் போயிருந்தது.

"இன்றைக்கு மூர்த்தி வந்து விடுவான் இல்லையா?'' என்று லக்ஷ்மி கேட்டாள். அவள் குரலில் அப்போதுதான் பயம் தெரிந்தது. "நாளைக்குப் புதுக் குடித்தனக்காரர்கள் வந்து விடுவார்களே?"

"நீங்க கவலையே படவேண்டாம். நான் மூர்த்தி கிட்டே கண்டிச்சுச் சொல்லியிருக்கேன்! வரட்டுமா? டயம் ஆச்சு!"

தாமும் ஒரு இக்கட்டான கட்டத்தில் கணிசமான தொகை கொடுத்துச் சொந்த மகனுக்கே உதவியிருந்தும் கூட, அதைக் கொண்டு எழுப்பப்பட்ட வீட்டில், நாளையிலிருந்து தாங்கள் ஒரு விநாடி கூடத் தங்க முடியாது என்கிற பயங்கரமான சூழலை



''டைரக்டர் அரிசி ஊற வைக்கச் சொல்லி இருக்காரே எதுக்கு?''

''தொப்புள்ள மாவு ஆட்டுற காட்சி எடுக்கப் போறாராம்!''

– ஆறுபாதி திருமால்

மகாதேவனால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

ராமகிருஷ்ணன் புறப்பட்டுப் போனவுடன் விளக்கை ஏற்றிவிட்டு வந்த லக்ஷ்மியைப் பார்த்தார் மகாதேவன்.

வாசலில் பாக்கு கலர் மாருதி எஸ்டீம் வந்து நின்றதைக் கூட அவர்கள் கவனிக்கவில்லை.

"அம்மா... யார் வந்திருக்கேன் பாரு!'' என்று குரல் கேட்டது.

ஜானகி!

"என்னம்மா இது! தனியாவா வந்தே? மாப்பிள்ளை எங்கே?"

"அவர் பிஸியா இருக்கார் பிஸினஸ்ல. டிரைவரோட வந்தேன். எங்க உங்க பெட்டி, படுக்கை எல்லாம்? டிக்கிலே வச்சுடறேன்... அவர்தான் என்னை விரட்டினார். 'உடனே கார்ல புறப்பட்டுப் போ. உங்க அண்ணா மூர்த்தி கோயம்புத்தூர்லே இருந்து போன் பண்ணினார். அவரால இன்னிக்கு உங்க ரெண்டு பேரையும் கூட்டிக் கொண்டு போக முடியலே'ன்னார். நான் உடனே புறப்பட்டுட்டேன்!"

மகாதேவன் "நீ தெய்வமாட்டம் வந்து எங்களைக் காப்பாத்தி இருக்கேம்மா. பொழுது விடிந்தால் என்னடாப்பா பண்ணுவோம்னு பயத்திலே நடுங்கிக் கொண்டிருந்தேன்... மாப்பிள்ளைக்கு நல்ல மனசு!" என்றார். அவர் குரல் கரகரத்து நடுங்கியது.

"எனக்கு மட்டும் நல்ல மனசு இல்லையாப்பா? பாரும்மா இந்த அப்பாவை!" என்று செல்லமாகக் கோபித்துக் கொண்டாள் ஜானகி. "வீட்டைப் பூட்டி, சாவியைப் பக்கத்து வீட்டில் கொடுத்து விட்டு வரச் சொன்னார். குடி வருகிறவர் அங்கே வாங்கிக் கொள்ளுவாராம்!" என்றாள் ஜானகி.

லக்ஷ்மிக்கு ஆனந்தத்தில் அழ வேண்டும் போல் இருந்தது. ●

17 குறையொ



செய்ய முடியாத யோகங்களை மேற்கொள்ளாதே. அவற்றை விட்டுவிடு என்று ஏன் பரமாத்மாவே சொல்ல வேண்டும். அதற்கொரு விளக்கத்தை ஆசார்யர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்றேன். விளக்கம் இதுதான்:

'சர்வ தர்மங்களையும் விட்டு என்னைப் பற்று என்று சொன்னானே பகவான்... அதை நாம் செய்யாவிட்டால் அந்த தர்மங்களெல்லாம் நம்மை விட்டுவிடும்!

–இப்படி வியாக்யானம் எழுதினார்கள். பகவானைப் பற்றாமல் அவன் நினைவு இல்லாமல் வெறுமே தர்மங்களைச் செய்து கொண்டு போவதில் அர்த்தமில்லை. ஏகப்பட்ட வித்யைகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் நம்மால் பண்ண முடியாது.

இப்போது நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற காலத்தில் இந்த யோகாதிகளையெல்லாம் பண்ணுவது ரொம்ப கஷ்டம்.

எது பண்ண முடியும் என்று கேட்டால் நம்மைப் போன்றவர்கள் சுலபமாகப் பண்ணக் கூடியது சரணாகதி.

'நீ எனக்கு உபாயம் என்று நினைத்து, அந்த எம்பெருமான் திருவடியிலே ஆத்ம சமர்ப்பணம் பண்ணு!'

உபாயம் என்றால் வழி, 'பக்தி என்கிற

ன்றுமில்லை

இருப்பவனும் அவன்; அதனால் (உபாயத்தினால்) அடையக் கூடிய பயனாய் இருக்கக் கூடியவனும் அவன்.

இவ்வாறு சாதனம் என்றும் சாத்யம் என்றும் ஞானிகளால் உணரப்படுபவன் யார் என்று கேட்டால், யக்ஞம் என்று சொல்லப்படக்கூடிய பரமாத்மாவான விஷ்ணு.

அவனை தியானம் பண்ணுவோர் கெட்டுப் போவதில்லை. அவனை தியானம் பண்ணுவோர் உயர்ந்த கதியை அடைகிறார்கள்.

ஆகையினாலே, இந்த விஷ்ணு சப்தத்தினாலே நரசிம்ஹ புராணத்திலே சொல்லப்பட்ட சுலோகமானது விஷ்ணுவே நரசிம்ஹன் என்று காட்டுகிறது. விஷ்ணு என்பதை 'நரசிம்ஹன்' என்று நாம் அங்கே போட்டுக் கொள்ளலாம்.

வழியும் நீதான்; கர்ம யோகம் நீதான்; ஞான யோகம் நீதான்; உன்னைத் தவிர வேறொன்றும் அறியேன். உன் திருவடியே எனக்கு சரணம். நின்னருளால் கதியின்றி மற்றொன்றில்வேன். உன் திருவடி தவிர வேறு தஞ்சம் இல்லை என்று சரணாகதி பண்ணி விட்டோமானால்... ஆத்ம சமர்ப்பணம் பண்ணிவிட்டோமானால்... அந்த பகவான் எப்படி சந்தோஷிக்கிறான்!

பக்தி யோகம் நாம் பண்ணினால் என்ன சந்தோஷம் பகவானுக்கு ஏற்படுமோ, அதே சந்தோஷத்தை அவன் திருவடியிலே சரணாகதி பண்ணினால் அடைந்து விடுகிறான். அப்படி அடைந்தவுடனே மோக்ஷத்தைக் கொடுத்து விடுகிறான்.

ஆகையினாலேதான் பகவான் அவன் திருவடியை ஆச்ரயிக்கும்படியாக 'என்னை ஒருவனையே சரணமாகப் பற்று' என்றான்.

'நாராயணனே நமக்கே பறை தருவான்' என்றாள் ஆண்டாள்.

நாராயணனே என்று அந்த ஏவகாரத்தோடு நமக்கே என்று இன்னொரு ஏவகாரமும் சேர்ந்து வருகிறது.

அவன் ஒருவனே அருள் புரிவான்.

வேறு சுத்யந்தம் அற்ற நமக்கே அருள் புரிவான். கைங்கர்யமாகிற புருஷார்த்தத்தை நமக்குத் தருவான்.

அவன் எதிர்பார்ப்பது அவன் திருவடியை நாம் ஆச்ரயிக்க வேண்டும் என்பதை மட்டுமே.

பரமாத்மா உபாயமாக இருக்கிறான் என்று தெரிந்து போயிற்று...

அவன் திருவடியிலே கைங்கர்யம் நமக்கு வேண்டும் என்றுதான் ஆத்மசமர்ப்பணம் பண்ணுகிறோம். அந்தக் கைங்கர்யமே பலன்.

ஆக, பலன் அவனே! அதனால்தான் உன்னையே வேண்டினேன் என்று அவனைத் தவிர மற்றொன்றை நாம் விரும்பக் கூடாது என்று சொல்லப்படுகிறது.

வழியாய்-உபாயமாய்

இதே விஷயத்தைத்தான் பகவான் வைகுண்டத்தில் மஹாலக்ஷ்மிக்கு உபதேசம் பண்ணினார்.

மஹாலக்ஷ்மி அதை சேனைநாயகர் என்று சொல்லக்கூடிய விஷ்வக்சேனருக்கு உபதேசம் பண்ணினாள்.

விஷ்ணு சேனைக்கு அதிபர் அவர். நித்ய சூரிகளில் ஒருவர். சேனை முதலியார் என்றும் சொல்லுவார்கள். அவர்தான் கையிலே பிரம்பை வைத்துக் கொண்டு எல்லாவற்றையும் பரிபாலனம் பண்ணிக்கூடியவர். கஜமுகம்- யானை முகத்தை உடையவர்.

வைஷ்ணவ கிருஹங்களிலே ஒரு கர்மாவை ஆரம்பிக்க வேண்டும் என்கிற போது, விஷ்வக்சேனரை தியானம் பண்ணித்தான் கர்மாவை ஆரம்பிப்பார்கள்.

ஸ்மார்த்த கிருஹங்களிலே இதையே கணபதி பூஜையாக செய்வார்கள். அவனும் கஜமுகன். ஈச்வர புத்ரன்.

விஷ்வக்சேன ஆராதனமோ கணபதி பூஜையோ நன்றாக் நடக்க வேண்டும் என்று இன்னொரு பூஜை கிடையாது!

விஷ்வக்சேனர்தான் பூலோகத்திலே,

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

கலியுகம் பிறந்த பிற்பாடு, அந்த உயர்ந்த தாமிரபரணி நதி தீரத்திலே திருக்குருகூர் என்று சொல்லக்கூடிய ஆழ்வார்த்திருநகரி யிலே புளியமரத்தடிப் பொந்திலே அவதாரம் பண்ணினார்.

அந்த அவதாரத்தினாலே ஸ்ருதிகளுக்கெல்லாம்– வேதத்துக்கெல்லாம்– ஒரு விச்ராந்தி ஏற்பட்டதாம். வேதங்களெல்லாம் படுத்துக் கொண்டு ஓய்வாய் இருந்ததாம்!

நம்மாழ்வார் அவதாரம் பண்ணி, வெறுமே ஒலித்துக் கொண்டேயிருந்த வேதங்களுக்கெல்லாம் ஓய்வைக் கொடுத்தார். அந்த விஷ்வக்சேனர்தான் நம்மாழ்வாராக அவதாரம் பண்ணி, திருவாய்மொழி 1102 பாசுரத்திலே, இந்த மஹாலக்ஷ்மி உபதேசம் பண்ணிய மந்திரத்தை வெளியிட்டார்.

த்வய மந்திரம் என்று பெயர். த்வயம் என்றால் இரண்டு.

அந்த இரண்டு என்ன...?

உபாயம், உபேயம்!

அதாவது வழியாக இருப்பவனும் பரமாத்மா, பயனாக இருப்பவனும் பரமாத்மா என்று தெரியப்படுத்தக் கூடிய த்வய மந்திரம் அது.

கட ஸ்ருதி என்று சொல்லக் கூடிய வேதத்திலே ஒரு அன்வாகம் முடிகிறபோது,

ஸ்ரீமன் நாராயண சரணம்
சரணம் பிரபத்யே

என்று முடிகிறது.

இன்னொரு அன்வாகம் முடிகிறபோது, 'ஸ்ரீமதே நாராயணாய நம:' என்று முடிகிறது.

பகவான் என்ன பண்ணினார்...? இந்த இரண்டு கடைசி வாக்கியத்தையும் சேர்த்து மந்திரமாக்கினார். அதுதான் த்வய மந்திரம்.

இரண்டு வாக்கியமாக இருப்பதனாலேயும் இரண்டு அர்த்தத்தைத் தெரிவிப்பதனாலேயும் த்வய மந்திரம்.

ஸ்ரீமன் நாராயண சரணம் சரணம்
பிரபத்யே

ஸ்ரீமதே நாராயணாய நம:

ஆகையினாலே, இந்த மந்திரம் ரொம்ப உயர்ந்த மந்திரம். அந்த மதுசூதனன் இருக்கிறானே, அவனைக் காட்டிலும் தத்துவம் உண்டோ? அதே மாதிரி, த்வய மந்திரத்தைக் காட்டிலும் உயர்ந்த மந்திரம் உண்டோ?

அதனால்தான் சம்பிரதாயத்தில் மூன்று ரத்தினங்கள் சொல்வார்கள்:

புராண ரத்தினம்
ஸ்தோத்திர ரத்தினம்
மந்திர ரத்தினம்
என மூன்று!

புராண ரத்தினம் என்பது விஷ்ணு புராணம். மந்திர ரத்தினம் என்பது த்வய மந்திரம். ஸ்தோத்திர ரத்தினம் என்பது ஆளவந்தாருடைய ஸ்தோத்திரம். அதுதான் ஸ்தோத்திரங்களுக்கெல்லாம் ரத்தினமாயிருக்கக் கூடியது.

ஆளவந்தார் ஸ்தோத்திரத்தை ஒருமுறை படித்து அர்த்தம் தெரிந்து கொண்டு விட்டால், அவர்களுக்கு ஏற்படக் கூடிய வைராக்கியத்துக்கு எல்லையே இல்லை. அவ்வளவு வைராக்கியம் ஏற்படும்! உலக விஷயங்கள் எதைக் கண்டாலும் வெறுப்பு ஏற்பட்டுப் போய்விடும். அதுதானே வேண்டும் நமக்கு. அது ஏற்பட மாட்டேனென்கிறது!

வைராக்கியம் வந்துவிட்டால் எல்லாமே சாமான்யமாகத் தெரியும் அல்லவா! அப்படிப்பட்ட வைராக்கியத்தைத் தரக் கூடிய ஆளவந்தார் ஸ்தோத்திரம்தான் ஸ்தோத்திர ரத்தினம்.

கின்னஸில் இடம் பெறும் நவீன கஜினி முகமது

காந்திபாய் சவான் என்பவருக்கு தற்போது 51 வயதாகிறது. இவர் 6–ம் வகுப்பு வரை படித்துவிட்டு குஜராத் மாநிலத்தில் உள்ள துவாரகையில் ஒரு ஆஸ்பத்திரியில் கடை நிலை ஊழியராக வேலையில் சேர்ந்தார். பத்து ஆண்டுகளுக்கு மேல் வேலை செய்துவிட்டு, பதவி உயர்வு பெற ஒருவர் குறைந்த பட்சம் பத்தாம் வகுப்பு தேறி இருக்க வேண்டும் என அறிந்தார்.

ஆகையால் சவான் மார்ச் 1984லிருந்து பத்தாம் வகுப்பு பரீட்சை எழுத ஆரம்பித்தார். ஆனால் அவர் ஒவ்வொரு முறையும் தோல்வியைத் தழுவினார். இருப்பினும், எப்படியும் அலுவலகத்தில் பதவி உயர்வும், சம்பள உயர்வும் வாங்கியே தீர வேண்டும் என்ற வேகத்தில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச், அக்டோபர் மாதங்களில் பரீட்சை எழுதினார். இப்படியே மார்ச் 1984லிருந்து 1994 அக்டோபர் வரை 11 ஆண்டுகளில் 22 முறை தேர்வு எழுதி, கடைசியில் 1994ல் தேர்ச்சி பெற்றார். ஆனால் பாவம் அவருக்கு இன்னும் அலுவலகத்தில் பதவி உயர்வு தரப்படவில்லை. இது ஒரு உலக சாதனையாக 'கின்னஸ்' புத்தகத்தில் இடம் பெற உள்ளது.

– ஆமதாபாத் ஆர் பாண்டுரங்கன்

மந்திர ரத்தினம் இந்த த்வய மந்திரம்- ஸ்ரீமன் நாராயண சரணம் சரணம் பிர பத்யே!

லக்ஷ்மியோடு கூடிய நாராயணனுடைய திருவடிகளை சரணமாகப் பற்றுகிறேன்.

எதற்காக...?

ஸ்ரீமதே நாராயணாய நம:

அந்த லக்ஷ்மியோடு கூடிய நாராய ணனின் பொருட்டு!

அவன் திருவடியைப் பற்றினால்தான் அவன் திருவடியிலேயே நமக்குக் கைங்கர் யம் கிடைக்கும்.

இதை இன்னொரு இடத்தில் சுவாமி தேசிகன் ஓர் அழகான சின்ன சுலோகமாகச் சொல்கிறார். பெரிய அர்த்தத்தைக் கொடுக் கிற சின்ன சுலோகம்; ரொம்ப அழகான சுலோகம்.

அஹம் ஆத்மா ந தேஹ: அஸ்மி என்று ஆரம்பிக்கும்...

நான் என்றால் ஆத்மா; தேகம் அல்ல... சரீரம் அல்ல நான் என்பது. இந்த நான் என்கிற ஆத்மா எதற்காக இருக்கிறது? அந்த விஷ்ணுவுக்கு அடிமையாய், அவனுக்குக் கைங்கர்யம் பண்ணுவதற்காக இந்த ஆத்மா இருக்கிறது. அதற்கு என்ன பண்ண வேண் டும்? அவனையே சரணமாக அடைய வேண்டும்.

எதற்கு...? அவன் திருவடியிலே கைங்கர் யம் என்பது தவிர, வேறு எண்ணம் இருக்கக் கூடாது மனத்திலே.


கைங்கர்யம் என்றால் என்ன அர்த்தம்?

'நான் என்ன பண்ணட்டும்? நான் என்ன பண்ணட்டும் என்று லக்ஷ்மணனை மாதிரி கைகட்டிக் கொண்டு நிற்க வேண் டும்.

லக்ஷ்மணனிடம் ஐச்வர்யம் எப்போதும் விருத்தியாகிக் கொண்டேயிருந்ததாம்? ஐச் வர்யம் என்றால் எம்பெருமானுடைய திருவடியிலே நித்ய கைங்கர்யம்தான்.

வழுவா அடிமை செய்ய வேண்டும் நாம் என்றார் ஆழ்வார்- அதாவது கெடுதல் இல் லாத அடிமை. கெடுதல் இல்லாத அடிமை என்றால் என்ன அர்த்தம்? அவன் ப்ரீதிக் காகப் பண்ணக்கூடிய அடிமை.

அதனால்தான் உபநிஷத்தில் உயர்ந்த சாஸ்திரார்த்தம்- வடிகட்டின சாஸ்திரார்த் தம்-என்று ஆசார்யர்கள் ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டுச் சொல்கிறார்கள். அவர்கள் குறிப்பிடும் அந்த விஷயம் என்ன...? அதை விசாரம் பண்ணினால்...



''படம் ஓடும்னு புரொடியூசரே எதிர் பார்க்கல போல!''

''எதை வச்சி சொல்றீங்க?''

''பட போஸ்டர்ல 'எதிர்பாராத இருப தாவது நாள்' என்று போட்டிருக்காரே!''

- அம்பை தேவா

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

ஜீவாத்மாவுக்குத் தனித்து ஆனந்தம் உண்டா இல்லையா என்ற கேள்வி அது. அதற்குப் பதில் சொல்கிறபோது, தனித்து ஜீவாத்மாவுக்கு ஆனந்தம் கிடையாது என்று சொல்லிவிட்டது!

பின்னே ஜீவாத்மாவுக்கு எது ஆனந்தம்...?

இவன் கைங்கர்யம் பண்ணுகிறான் பகவானுக்கு. பணிவிடை பண்ணுகிறான். அந்தப் பணிவிடையைப் பார்த்து பகவான் சந்தோஷிக்கிறான். அப்போது அவன் திருமுக மண்டலமானது மலர்கிறது. அவன் ஆனந்தமாகச் சிரிக்கிறான்.

அதைப் பார்த்து ஜீவாத்மாவுக்கு ஆனந் தமேயொழிய அதைத் தவிர ப்ரத்யேக ஆனந்தமில்லை என்று சொல்லும்போது, பகவத் கைங்கர்யத்தினால் ஏற்படக் கூடிய ஆனந்தமே ஆனந்தம் என்று ஆகிறது அல் லவா?

அதனால்தான், 'பண்டுரீதி கொலுவிய வைய்ய ராமா' என்கிற அந்தக் கிருதியையே தியாக பிரும்மமும் நாத பிரும்மமாய் வழங்கினார்.

அந்த சக்கரவர்த்தித் திருமகன் ராம பிரான் திருவடியிலே 'பண்டு' என்றார். 'பண்டு' என்றால் வேலை ஆள். 'அதை எடுத்து வா! இதை எடுத்து வா!' என்று ஏவப்படுகிற ஆள்.

பகவானைப் பார்த்து, ஹே ராமா! நீ எனக்கு என்ன கொடுக்க வேண்டும்? உன் சரணாரவிந்தத்தில் ஒரு எடுபிடி ஆளாக- வேலைக்காரனாக! என்னை வைத்துக் கொள். உனக்குக் கைங்கர்யம் பண்ணு கிறேன்' என்கிறார்.

கைங்கர்யம் பரம புருஷார்த்தம். அதைக் கொடுக்கிறான் பரமாத்மா!

(தொடரும்)



Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager; Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax : 2345621
Annual Subscription : India Rs. 250/-; Overseas Rs. 1900/- (Air Mail)
Half Yearly Subscription : India Rs. 125/-; Overseas Rs. 950/- (Air Mail)



Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57
* Registered No. TN / MS (S) M4392 /99* Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161
* Registered as a Newspaper in Srilanka
சுத்த தேங்காய் எண்ணெயில் 18 மூலிகைகள் அடங்கியது
மேனிக்கு அழகுதரும் மூலிகைகள்
வேர்க்குருவை நீக்கும் மூலிகைகள்
ஆன்டிசெப்டிக் மூலிகைகள்
முகப்பருவை தடுத்திடும் மூலிகைகள்
வியர்வை நாற்றம் நீக்கும் மூலிகைகள்
பொடுகு நிவாரண மூலிகைகள்
மெடிமிக்ஸ்
என் பியூட்டி சோப்,
வேர்க்குரு பவுடர்,
ஆன்டிஸெப்டிக் லோஷன்,
முகப்பரு கிரீம்,
டியோடரண்ட்,
பொடுகு நிவாரண ஷாம்பு.
இதுக்கும் மேல என்ன வேணும்?
MEDIMIX
AYURVEDIC BATH SOAP
பரிபூரண ஆயுர்வேத குளியலுக்கு
குடும்ப பராமரிப்பு சோப்
மெடிமிக்ஸ்
இப்போது பாரதம் முழுவதும் 75 மற்றும் 125 கிராம் பாக்கிலும் கிடைக்கிறது.
http://www.medimixindia.com